24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 40
விலை - 40 ரூபா

சுடர் 34 கதிர் 172 வைகாசி 05ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 19 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# தமிழர்கள் மத்தியில் பயத்தை தக்க வைத்து உளவியல் போர் செய்கிறது சிறிலங்கா அரசு

## வலிசுமந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 10 ஆவது ஆண்டு பிரகடனத்தில் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மே 19

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான வரலாற்றுத் தளத்தில் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் சிங்கள-பௌத்த மயமாக்கத்தையும், இராணுவ மயமாக்கத்தையும் விரிவாக்கி இராணுவ இருப்பை நியாயப்படுத்தி தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தமிழர் மத்தியில் சிறிலங்கா அரசு பயத்தை தக்க வைத்துக் கொண்டு உளவியல் போர் செய்து கொண்டிருக்கின்றது. ஆயுதம் மௌனிக்கப்பட்டு ஒரு தசாப்தமாகியும் கைதுகளும், எச்சரிக்கைகளும், மிரட்டல்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன. பேச்சுரிமைக்கான வெளி நசுக்கப்பட்டுள்ளது.

37

## தாயகத்திலும், புலத்திலும் எழுச்சியுடன் நினைவேந்தல்



முள்ளிவாய்க்கால், மே 19

ஈழத் தமிழர்களின் வாழ்வில் மறக்க முடியாத பெருந்துயர் படிந்த முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 10 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று உணர்வெழுச்சி யுடன் தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் எழுச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டன.

37

## தனியாருக்கும் விடுமுறை வழங்குங்கள்

*அமைச்சர் கோரிக்கை*

கொழும்பு, மே 19

நாளை திங்கட் கிழமை அரசபணியாளர்களுக்கு அரசு விடுமுறை வழங்கியுள்ளது. இந்த நிலையில் தனியார் துறை ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்குமாறு தொழில் வழங்குனர்களிடம், தொழில் மற்றும் தொழில் உறவுகள் தொடர்பான

35



## மனித பேரவலத்தின் சாட்சி சுடரேற்றியது

முள்ளிவாய்க்கால், மே 19

தாய் இறந்தது அறியாது அவரது மார்பில் பால் குடித்து பசிமறந்த பச்சிளம் குழந்தை முள்ளிவாய்க்கால் பொதுச் சுடரை நேற்று ஏற்றினாள்.

தமிழினப் படுகொலையின் 10ஆவது ஆண்டு

34

## தீவிரவாதத்தை தோற்கடித்த ராணுவத்தினருக்கு எதிராக போர்க்குற்றங்கள் சுமத்தவே முடியாது

### கொக்கரிக்கிறார் கோத்தபாய

கொழும்பு, மே 19

தீவிரவாதத்தை தோற்கடித்த இராணுவத்தினர் மீது போர்க்குற்றங்களைச் சுமத்த முடியாது என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அல்ஜசீரா ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலில் நிச்சயமாக

34

## மகிந்த அணிக்குள் ஐ.எஸ். உறுப்பினர்?

கொழும்பு, மே 19

ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருந்தவர் என்று சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர் மகிந்த அணியான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கட்சியைச் சேர்ந்தவர் என்று தெரிய வந்துள்ளது.

34

## 13ஆம் திகதி வன்முறை தயாசிறியிடம் விசாரணை

கொழும்பு, மே 19

கடந்த 13ஆம் திகதி குளியாப்பிட்டியவில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறை தொடர்பில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகரவிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் நேற்று முன்னிலையான தயாசிறியிடம் மூன்றரை மணித்

35

## மாவனெல்லையின் பாதுகாப்பை அதிகரிக்க

*கபீர் காசிம் அவசர கோரிக்கை*

கொழும்பு, மே 19

மாவனெல்லையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் பதற்றநிலைமை

34

## தாய் நாடு குருதியில் நனைந்தது போதும்

### கர்தினால் தெரிவிப்பு

கொழும்பு, மே 19

தாய் நாடு குருதியில் நனைந்தது போதும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். பம்பலப்பிட்டி புனித மரியாள் தேவாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை

34

## வற்றாப்பளையில் தூக்குக் காவடி எடுக்க முடியும்

முல்லைத்தீவு, மே 19

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயப் பொங்கல் நேர்த்திக்கான தூக்குக் காவடியை ஆலய வளாகத்தில் எடுக்க முடி

34

## துப்பாக்கி ரவைகள் இரண்டுடன் ஆனையிறவில் இருவர் கைது

கிளிநொச்சி, மே 19

துப்பாக்கிரவைகள் இரண்டை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரைக் கைது செய்துள்ளதாகப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர். ஆனையிறவுச் சோதனைச் சாவடியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இருவரையும் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மகிழுந்தில் வந்த இருவரிடமிருந்தே துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிட்டனர். (ஒ.5,6)

## பத்தாண்டுகளாகியும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு அரசு தவறிவிட்டது

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் சாடல்

கொழும்பு, மே 19

மூன்று தசாப்தகால போர் நிறைவடைந்து 10 ஆண்டுகள், அதாவது ஒரு தசாப்தம் நிறைவடைந்த பின்னரும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை நிலைநாட்ட இலங்கை அரசு தவறிவிட்டதென மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பிராந்தியத்திற்கான பணிப்பாளர் மீனாக்சி கங்குலி வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம்

34

# ரிசாத்துக்கு எதிரான தீர்மானத்தை கூட்டமைப்பு ஆதரிக்க வேண்டும்

## தமிழ் அரசு மன்னார் கிளை தீர்மானம்

மன்னார், மே 19

ஏப்பிரல் 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டு தாக்குதலை மேற்கொண்டவர் பயன்படுத்தியது அமைச்சர் ரிசாத் பதியூதீனின் வாகனம்தான் என்பதன் அடிப்படையில் ரிசாத் மீதான அவநம்பிக்கை தீர்மானம் மீது வாக்கெடுப்பு இடம்பெற்றால் கூட்டமைப்பின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் தீர்மானத்துக்கு ஆதரவாகவே வாக்களிக்க வேண்டும். இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக் கிளையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக் கிளையில் 24 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் நிலையில் அதன் 20 அங்கத்தவர்களும் இளைஞர் அணியில் அங்கம் வகிக்கும் மாவட்டத்தின் இரு உறுப்பினர்களுமாக 22 பேர் நேற்றைய கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் கூறப்பட்டதாவது,

அமைச்சர் ரிசாத் பதியூதீனின் கட்சியின் பொருளாளரது மருமகனான தற்கொலைக் குண்டுதாரி, சினமன் விடுதியில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டவர் பயன்படுத்திய வாகனம் அமைச்சர் ரிசாத்தினது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தாக்குதல் இடம்பெற்று பல நாள்களின் பின்னர் மன்னாரில் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் அமைச்சரின் வீடும் சோதனைக்கு உட்பட்டுள்ளது. இதன்போது அவரது வீட்டில் இருந்து இரண்டு சோடி வாகன இலக்கத் தகடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு சோடி இலக்கமானது போலியான இலக்கத் தகடுகள் எனக் கண்டறியப்பட்டும் பொலிஸார் அது தொடர்பில் எந்த நடவடிக்கையுமே மேற்கொள்ளவில்லை. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வழங்காத இலக்கத்தகடு அவர்களது வீட்டிலிருந்து மீட்கப்பட்டது.

போலியான இலக்கத் தகடு இருந்தமை குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டமைக்கான முழுமையான சான்று. ரிசாத் அமைச்சர் என்பதால் பொலிஸார் இதன் பின்னரும் நடவடிக்கை எடுக்கவில்லை. அவரது அமைச்சர் பதவி பறிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்த வேண்டியது கட்டாயம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

இதேவேளை, எதிர்வரும் 22ஆம் திகதிக்கு பின்பு நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதம் இடம்பெறும் வேளையில் நாட்டில் அண்மையில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு மட்டுமே உட்பட்ட வகையில் அதன் சட்ட ஏற்பாட்டில் திருத்தம் மேற்கொண்டால் மட்டுமே ஆதரவளிக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஓ.5.105)

# இராணுவத்தின் அருமை மக்களுக்கு தெரிந்துள்ளது

## மகிந்த கூறுகிறார்

கொழும்பு, மே 19

இராணுவத்தினரின் உண்மையான பெறுமதியை இலங்கை மக்கள் மீண்டும் உணர்ந்திருப்பதாக எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று சனிக்கிழமை, போரில் உயிரிழந்த இராணுவத்தை நினைவு கூறும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்த நாட்டில் இராணுவத்தின் உண்மையான பெறுமதி மக்களுக்கு மீண்டும் நினைவுக்கு வந்திருக்கின்றது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் பெற்றுத் தந்த அமைதியான சூழ்நிலை குறித்து பலருக்கு நினைவில்லாமல் போயிருக்கின்றது. அந்த இராணுவத்தினர் சிறையில் இருந்த போது, இங்கு என்ன நடக்கப் போகின்றது என்று நாங்கள் மிகவும் வருந்தினோம்.

இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்களின் தியாகங்களை இழிவுபடுத்துவதற்கு பலர் முயன்றனர். இராணுவத்தினரை ஏற்றுக்கொள்ளாததாலும், அவர்களின் சேவையை கவனத்தில் கொள்வதற்கு தயாராக இல்லாமையாலும், அவர்களை சிதறடித்து சிறைக்கு அனுப்பியதாலும் ஏற்பட்ட நட்டத்தை அண்மையில் நாங்கள் கண்கூடாக பார்த்தோம்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதங்கள் யாரின் தவறினால் ஏற்பட்டது என்று நாம் புதிதாக கூற வேண்டிய அவசியமில்லை.

இராணுவத்தினர் அவர்களுக்காக தங்களின் உயிர்களை தியாகம் செய்யவில்லை. எங்களுக்காக இந்த நாட்டு மக்களுக்காக, தமது தேசத்துக்காகவே அதனைச் செய்தார்கள் - என்றார். (ஓ.5)



# துயர்நிறைந்த நினைவேந்தல்





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தல்






வவுனியா பொங்குதமிழ் நினைவுத் தூபி முன்பாக நினைவேந்தல்



சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நினைவேந்தல்



கிளிநொச்சியில் கஞ்சி வழங்கல்


Vespa
அதிநவீன இத்தாலி தொழில்நுட்பத்தில் மற்றும் வடிவமைப்பில்
அபான்ஸ் ஓட்டோ அறிமுகம் செய்யும் வெஸ்பா மற்றும் ஏப்ரீலியா ஸ்கூட்டர்
aprilia
#be a racer
இத்தாலி
தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பு
2 வருடங்கள் அல்லது 24,000 கி.மீ. உத்தரவாதம்
5 சேவைகள் இலவசம்
வெஸ்பா
ரூ. 350,000/- இலிருந்து
• டியூப்லெஸ் டயர்கள், அலோய் வீல்
• 7 லீட்டர்கள் கொண்ட பிரம்மாண்ட எரிபொருள் தாங்கி
• 125cc/ 150cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின், வெல்வு 3
• MAP Sensing மற்றும் Variable Spark Timing Management
• முன்புறம்: Aircraft-derived Anti-Dive Front Suspension
பின்புறம்: இரட்டை செயற்பாட்டு ஹைட்ரோலிக் ஷொக் அப்சோபர்
• டிஜிட்டல் மீட்டர்
• CVT ஓடோமெடிக் கியர் பொக்ஸ்
• Monocoque ஸ்டீல் பொடி
SR 125 (125CC) - ரூ. 299,990/-
SR 150 (150CC) - ரூ. 345,000/-
• 14" அலோய் வீல்
• 6.5 லீட்டர்கள் கொண்ட பிரம்மாண்ட எரிபொருள் தாங்கி
• CVT ஓடோமெடிக் கியர் பொக்ஸ்
• MAP Sensing மற்றும் Variable Spark Timing Management
• முன்புறம்: டெலஸ்கொப்பிக் சஸ்பென்ஸன்,
பின்புறம்: ஹைட்ரோலிக் ஷொக் அப்ஸோபர்
• டியூப்லெஸ் டயர்கள்
• கைபேசி சார்ஜ் செய்யும் வசதி
• 125cc/150cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின், வெல்வு 3
• டுவின் பிஸ்டர் கெலிபர் உடன் முன்புற
ஹைட்ரோலிக் 220mm டிஸ்க் பிரேக்
011 5 777 000 / 076 329 1919
அபான்ஸ் ஓட்டோ மோட்டார் சைக்கிள் காட்சியறைகள் மற்றும்
அங்கீகாரம் கொண்ட விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.
Abans
AUTO


X-MEN
INSTANT FAIRNESS
FACE CREAM
அனைத்தும்
அடங்கிய
வெண்மைக்கு
Ravindra Jadeja
விலை: ரூபா. 70/- இலிருந்து
followxmen.com
DISTRIBUTED BY:
HARCOURTS COSMETICS (PVT)LTD, No.69, Subadhrarama Road, Kattiya Junction, Nugegoda.
077 383 3415 | 077 383 3456

### மீண்டும் சிறைக்கு வராதீர்கள்

# விடுதலையான கைதிகளிடம் மைத்திரிபால கோரிக்கை

கொழும்பு, மே 19

குற்றங்கள் அதிகரிப்பதற்கான சமூக சூழ்நிலைகளை மாற்றியமைப்பதற்கு தான் அதிக அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அரச தலைவரின் பொது மன்னிப்பு வழங்கலின் கீழ் 762 சிறைக்கைதிகளை விடுதலை செய்யும் நிகழ்வு நேற்று முற்பகல் வெலிக்கடை சிறைச்சாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போதே அரச தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



பொது மன்னிப்பின் கீழ் கைதிகளை விடுதலை செய்யும் நிகழ்வில் அரச தலைவர் ஒருவர் கலந்துகொண்ட முதல் சந்தர்ப்பம் இதுவாவதுடன், சிறைச்சாலை வளாகத்துக்குள் சிறைக்கைதிகள் முன்னிலையில் உரையாற்றிய முதல் சந்தர்ப்பமும் இதுவாகும். சிறைக்கைதிகளின் கோரிக்கைகளையும் அரச தலைவர் செவிமடுத்தார்.

26 பெண் கைதிகள் உள்ளிட்ட 762 சிறைக்கைதிகள் விடுதலை பெற்றதோடு, தன்னிடமிருந்து விடுதலை கடிதங்களை பெற்றுக்கொண்ட சிறைக்கைதிகளிடம் அவர்கள் பற்றிய விவரங்களையும் அரச தலைவர் கேட்டறிந்தார். இன்று பெற்ற விடுதலையினூடாக தத்தமது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக அமைத்துக்கொள்ளுமாறு அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இன்று விடுதலை பெற்றவர்கள் மீண்டும் சிறைச்சாலைக்குள் வருவதை தான் காண விரும்பவில்லை எனத் தெரிவித்த அரச தலைவர், இன்றைய தினம் விடுதலை பெற்ற அனைவரினதும் எதிர்காலத்தை கட்டியெழுப்ப தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். இன்றைய தினம் விடுதலை பெற்றவர்களிடையே சுயதொழிலில் ஈடுபட விரும்பும் நபர்கள் மற்றும் அவர்களுக்கு தேவையான வசதிகள் தொடர்பாகவும் கண்டறிந்து அது தொடர்பிலான அறிக்கை ஒன்றையும் துரிதமாக தன்னிடம் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு மைத்திரி பணிப்புரை விடுத்தார்.

சிறைக்கைதிகளை சிறந்த குடிமக்களாக சமூகமயமாக்குவது தொடர்பில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தி வருவதாகவும் தன்னை கொலை செய்ய முயன்று நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நபரை கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி அன்று விடுதலை செய்ததாகவும் தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவித்த அரச தலைவர், சிறைச்சா லையை நிரப்புவது தனது நோக்கமல்ல எனவும் அனைத்து குடிமக்களையும் சிறந்தவர்க ளாக சமூகமயப்படுத்தலும் நாட்டினுள் குற்றங்கள் அதிகரிப்பதற்கு காரணமாக அமையும் சமூக பின்புலத்தை மாற்றியமைப்பதுமே தனது நோக்கமாகுமெனத் தெரிவித்தார்.

சிறைக்கைதிகளுக்கு தொழிற்பயிற்சியை வழங்குதல் உள்ளிட்ட அவர்களது அறிவையும் உழைப்பையும் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு அரசு முன்னெடுத்துள்ள வேலைத்திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த அரச தலைவர், தான் சிறைக்கைதியாக கழித்த நாள்களின் அனுபவங்களையும் நினைவுகூர்ந்ததுடன், சிறைச்சாலையில் நாள்களை கழிக்கும் இந்த சந்தர்ப்பத்தில் தத்தமது வாழ்க்கையை மறுசீரமைத்துக் கொள்வதற்காக உறுதிப்பாட்டுடன் அறிவையும் ஆற்றலையும் மேம்படுத்திக் கொள்வதற்கு பயன்படுத்திக்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்தார். (ஒ.5)



# ஜிகாதி தீவிரவாதத்துக்கு எதிராக இந்தியா நிற்கும்

கொழும்பு, மே 19

ஜிகாதி தீவிரவாதத்துக்கு எதிரான இலங்கையின் போருக்கு இந்தியா முழுமையான ஆதரவை வழங்கும் என்று இலங்கைக்கான இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

கண்டியில் மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களை நேற்றுமுன்தினம் சந்தித்த போதே அவர் இந்த வாக்குறுதியை அளித்துள்ளார்.

'இலங்கைக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலை, இந்தியா தனக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகவே கருதுகிறது. ஜிகாதி தீவிரவாதம் உலகத்துக்கான பொது அச்சுறுத்தலாக மாறியுள்ளது. ஜிகாதி தீவிரவாதத்துக்கு எதிரான இலங்கையின் போருக்கு இந்தியா முழுமையான ஆதரவை வழங்கும்' என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ.5)

# தற்கொலைக் குண்டுதாரியின் மனைவி குழந்தை பிரசவிப்பு

கொழும்பு, மே 19

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில், தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்திய அலாவுதீன் அகமட் முவாத்தின் மனைவி, முதலாவது குழந்தையைப் பிரசவித்துள்ளார். கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நடந்த விசாரணைகளின் போதே, இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடந்து இரண்டு வாரங்களில், 22 வயதுடையவரான தற்கொலைக் குண்டுதாரியின், மனைவிக்கு முதல் குழந்தை பிறந்துள்ளது.

குண்டுதாரியான முவாத்தின் தந்தையான 59 வயதுடைய அகமட் லெப்பை அலாவுதீன், நீதிமன்றத்தில் இந்த தகவலை வெளியிட்டார்.

தனது மகன் 14 மாதங்களுக்கு முன்னரே திருமணம் செய்திருந்தார் என்றும், மே 5ஆம் நாள் அவரது மனைவிக்கு முதலாவது குழந்தை பிறந்துள்ளது என்றும் அவர் கூறினார். (ஒ.5)

### நாடுகடந்த தமிழீழ அரசின்

# தலைமை அமைச்சராக உருத்திரகுமாரன் தெரிவு

கொழும்பு, மே 19

நாடு கடந்த தமிழீழ அரசின் மூன்றாவது தவணைக் காலத்தின் தலைமை அமைச்சராக வி.உருத்திரகுமாரன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அமெரிக்காவின் அரசியல் சாசனம் வரையப்பட்ட வரலாற்றுக் கூடத்தில் அரசவை அமர்வு இடம் பெற்று வருகின்றது.

இதில் தலைமை அமைச்சருக்கான பொறுப்புக்கு இருவரது பெயர்கள், மக்கள் பிரதிநிதிகளால் முன்மொழியப்பட்ட நிலையில் பெரும்பான்மை வாக்குகளால் வி. உருத்திரகுமாரன் தலைமை அமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். போராட்டத்தில் பதவிகள் வழங்கப்படுவதல்ல. பொறுப்புக்களே வழங்கப்படுகின்றன. பதவிகள் யாவும் இங்கு வேசங்களே. நாம் அனைவரும் விடுதலைக்கான களத்தில் போராளிகளே என்று தலைமை அமைச்சர் வி.உருத்திரகுமாரன் தனது ஏற்புரையில் தெரிவித்தார். (ஒ.5)



# யாழில் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணம் மலசலகூட குழி தோண்டும் போது, குழியில் இருந்து மோட்டார் குண்டும் கைக்குண்டும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள வீடொன்றிலேயே நேற்று குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட குண்டுகள் கோப்பாய் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளதுடன், அவை பழையவைகள் என்றும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5,106)

# நாங்கள் குண்டு வைத்துவிட்டோம்

### *பொலிஸாருக்கு சவால் விடுத்த பெண்*

கொழும்பு, மே 19

நீங்கள் என்ன பாதுகாப்பை செய்தாலும் நாங்கள் குண்டுகள் வைத்துவிட்டோம். இப்படி தெரிவித்து சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதம் ஒன்றை கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயன கூடத்துக்குள் வீசிய இளம் பெண்ணை கறுவாத்தோட்ட பொலிஸார் தேடிவருகின்றனர். இந்தக் கடிதம் தொடர்பான முறைப்பாட்டை பல்கலைக்கழக நிர்வாகம் செய்ததையடுத்து விஞ்ஞான பீட இரசாயன கூட பகுதி மறைகாணியை பொலிஸார் சோதனையிட்டனர். அப்போது இளம்பெண் ஒருவர் கடந்த 15 ஆம் திகதி இப்படியான தாளை வீசிவிட்டு செல்வது தெரியவந்துள்ளது. அந்த காட்சிகளை வைத்து அவரைக் கைது செய்ய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் பொலிஸார். அதே வேளை மோப்ப நாய்களை கொண்டு பல்கலைக்கழக வளாகத்தில் தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ.5)

# புத்தளத்தைச் சேர்ந்தவர் சந்தேகத்தில் கைதானார்

யாழ்ப்பாணம், மே 19

புத்தளத்தைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞனை இராணுவத்தினர் சந்தேகத்தில் கைது செய்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கொக்குவில் கருவப்புலம் வீதியில் உள்ள வீடொன்றில் வைத்து சந்தேகத்தில், இளைஞனை இராணுவத்தினர் கைது செய்தனர். வியாபார நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் அவர் தங்கியிருந்தவர் என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (ஒ.5,106)

# ஞானசாரரை சிறையில் சந்தித்தார் மைத்திரி?

வெசாக் தினத்தினை முன்னிட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற அரச தலைவர் அங்கு ஞானசார தேரர் மற்றும் துமிந்த சில்வா ஆகியோரையும் சந்தித்து பேசியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஞானசார தேரர் நீதிமன்ற அவமதிப்பு வழக்குக் காரணமாக சிறைத்தண்டனை அனுபவித்த வருகின்றார். அவரை வெசாக் தினத்தில் விடுவிக்காவிட்டால் நாடு முழுவதும் போராட்டம் நடத்தப்படும் என்று பொதுபலசேனா அமைப்புக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# கட்சி தலைவர்களை சந்திக்கிறார் ரணில்

அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் முக்கியமான சந்திப்புக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அழைத்துள்ளார். இந்தச் சந்திப்பு எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல், பாதுகாப்பு நிலைமைகள் குறித்தும், முக்கியமான இதர விடயங்கள் தொடர்பிலும் இங்கு தலைமை அமைச்சர் பேசவுள்ளார்.

உடனடித் தேர்தல் ஒன்றுக்குச் செல்வது குறித்தும் ஐக்கிய தேசியக் கட்சி தற்போது ஆராய்ந்து வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)


EDUKO
PATHWAYS
STUDY IN
Malaysia
JULY INTAKE IS NOW ON
Intake is now on for all courses from foundation to PhD Programmes at top Malaysian Universties.
Scholarships Available*.
MONASH University Malaysia
A·P·U
ASIA PACIFIC UNIVERSITY OF TECHNOLOGY & INNOVATION
SEGi University
SUNWAY UNIVERSITY
Contact us: 0774246564 / 0766472444 / 0763978000
UCL Building, 503, Sri Jayawardenepura Mawatha, Rajagiriya


TATA MOTORS
Connecting Aspirations
TATA
உங்கள் டிப்பர் கனவை
நனவாக்குங்கள்
ஆரம்பக் கொடுப்பனவு
காப்புறுதி
பதிவுக் கட்டணம்
அனைத்தும் எம்மிடமிருந்து
LPK 1615
மட்டுப்படுத்தப்பட்ட நேரம் மட்டுமே
DIESEL & MOTOR ENGINEERING PLC
www.dimolanka.com/vehicles/tata
www.facebook.com/TataMotorsSriLanka
0779 117 154
0771 839 508
0772 960 996
LPK 1618 4 கியூப் மற்றும் LPK 1615
உறங்கும் பகுதி கொண்ட 3 மற்றும் 4 கியூப் டிப்பர்களுக்கும்
இச்சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

# வடக்கில் 72 பேருக்கு ஆசிரிய நியமனங்கள்

யாழ்ப்பாணம்,மே 19

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் 72 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் நாளை திங்கட்கிழமை வழங்கப்படும் என்று மாகாண கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்து கொள்வதற்காக 72 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் நாளை வழங்கப்படவுள்ளது.

இதில் தகவல் தொழில் நுட்ப பாடத்துக்கு 57 பேரும் ,கணித விஞ்ஞான பாடத்துக்கு 15 பேருமாக மொத்தம் 72 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் நியமனம் வழங்கப்பட்ட கணித விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான நியமனத்தின் போது காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களில் 15 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

தகவல் தொழில் நுட்ப பட்டதாரிகள் 57 பேரும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை மாகாண கல்வி அமைச்சில் வைத்து வழங்கப்படும்.

கடந்த ஏப்ரல் மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட கணித .விஞ்ஞான பாட பட்டதாரிகளுக்கான நியமனம் எதிர்வரும் ஜீன் மாதமளவில் வழங்கப்படும் - என்றார். (ஐ-7)



## முள்ளிவாய்க்கால் நினைவை முன்னிட்டு கவிதை நூல், இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,மே 19

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 10 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு கவிதைத்தொகுப்பும். இறுவட்டும் வெளியிடப்பட்டதுடன் கலைஞர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

"நெருப்பில் குளித்த நினைவலையா பத்தாண்டுகள்" கவிதைத் தொகுப்பு வெளியீடும். கவிதைப் போட்டியில் வெற்றிபெற்ற கவிஞர்களுக்கான பரிசளிப்பும், "மரணம் முடிவல்ல" பாகம் 2 இறுவெட்டு வெளியீடும் இடம்பெற்றன நிகழ்வில் தலைமையுரையைத் தொடர்ந்து கவிதைத் தொகுப்பு வெளியிட்டு வைக்கப்பட்டது.

கவிதைத் தொகுப்பினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியிட்டு வைத்தார்.

நூலின் வெளியீட்டு உரையைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்திபன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வெளியிட்டு வைக்கப்பட்டதோடு நூலின் தொகுப்பாசிரியர் உரையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கலைப் பண்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த எஸ்.தவபாலனும், நூலின் ஆய்வுரையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் வாசுகி சுதாகரனும், சிறப்புரையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து "மரணம் முடிவல்ல" பாகம் 2 இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது இறுவெட்டினை அதன் இயக்குநரானறாகவா வெளியிட்டு வைத்தார்.

அதனையடுத்து கவிதைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. கவிதைப் போட்டியில் "போரின் எச்சத்தில் நான்..." என்ற கவிதையை எழுதிய திருகோணமலையைச் சேர்ந்த சி.செல்வநாயகம் முதலாமிடத்தையும். "ஊழித் தாண்டவம்" என்ற கவிதையை எழுதிய கிளிநொச்சியைச் சேர்ந்த த.ஜெகதீஸ்வரன் இரண்டாம் இடத்தையும் "வலியாறும் விழியோரம்" என்ற கவிதையை எழுதிய மன்னார் வட்டக் கண்டலைச் சேர்ந்த செல்வி ஜெயபிருந்த மோசேஸ் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர். (ஐ-37)



## மன்னாரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

மன்னார்,மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மன்னாரில் நேற்றுக் முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில், மன்னாரில் உள்ள பொது அமைப்புக்களின் ஒன்றியத்தில் இடம் பெற்றது.

இதன் போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

முதலில் உயிர் நீத்த மக்களை நினைவு கூர்ந்து மாலை அனுவித்து,மலர் தூவி,சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் அருட்தந்தை நவரத்தினம் அடிகளார், இந்து மத குரு தர்ம குமார குருக்கள், ,மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனிஸ்வரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் டெலோ மாவட்ட அமைப்பாளர் ஏ.ரி.மோகன் ராஜ், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (ஐ-56)

## ஆய்வு கூடத்துக்கு அடிக்கல்

முல்லைத்தீவு,மே 19

முல்லைத்தீவு பாரதி மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.



வித்தியாலய முதல்வர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு கல்வி வலய். உடற் கல்வி ஆசிரியர் ஆலோசகர் டிலான் கலந்து கொண்டு அடிக்கலை நட்டு வைத்தார். (ஐ-422)

## கைக்குண்டுகள் மீட்பு

முல்லைத்தீவு,மே 19

முள்ளியவளை பூதன் வயல்பகுதியில் இருந்து 2 கைக்குண்டுகளை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் தோட்ட வேலைக்காக நிலத்தை வெட்டிய போது கைக்குண்டுகள் இரண்டு இனம் காணப்பட்டன. இது தொடர்பில் முள்ளிய வளை பொலிஸாருக்கு காணி உரிமையாளர் தகவல் கொடுத்துள்ளார். இந்த தகவலினை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்ட பொலிஸார் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக அதனை அகற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ -ரி3)

## மாணவர்களுக்கு ஈருருளிகள் கையளிப்பு

வவுனியா,மே 19

வறிய நிலையில் வாழும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் மூவருக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டன.



வவுனியா மதியமடு விவேகானந்த வித்தியா லயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கே இந்த உதவிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபனின் "கல்விக்கு கரம் கொடுப்போம்" என்ற திட்டத்தினூடாக இந்த உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ஐ-222)



## இறுதிப் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி நிகழ்வு

வவுனியா,மே 19

முள்ளிவாய்க்காலில் இறுதிப் போரின் போது உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு வவுனியா சகாயமாதபுரம் சிறி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ஆத்மா சாந்தி வழிபாடும் இடம்பெற்றது.

போரில் கணவனை மற்றும் பிள்ளைகளை இழந்த 10 குடும்பத்துக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

முள்ளிவாய்க்கால் வரலாற்றினை நினைவுபடுத்து முகமாக உப்பில்லாக் கஞ்சியும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஆலய நிர்வாக சபையும், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்களும் ஒன்றிணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

நிகழ்வில் பிரதேச சலாசார அலுவலகர் வீ. பிரதீபன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், சமூக ஆர்வலர் விக்னா, ஆலய நிர்வாக சபையினர். பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஐ-222)



## உயிர்நீத்த உறவுகளுக்காக நந்திக்கடலில் அஞ்சலி

முல்லைத்தீவு,மே 19

முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் உயிர்நீத்த உறவுகளுக்காக நந்திக்கடலில் நேற்று அதிகாலை மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப் பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோர் மலர் தூவி வணக்கம் செலுத்தினர்.

"எங்கள் பெருமைமிகு வரலாறின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல் ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும் ,செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி ,உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி வணக்கம் செலுத்துவோம்" என்று முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார். (ஐ-ரி3)



## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,மே 19

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு வேலணைப் பிரதேச சபையால் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

சபைக்கு முன்னால் உள்ள நினைவுத் தூபிக்கு மலர் தூவி,சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது சபை உறுப்பி னர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (ஐ-7)

## விற்பனைக்கு

அரச அங்கீகார முத்திரையிடப்பட்ட நிறுவை தராசு வகைகள் 1 வருட உத்தரவாதத்துடன் 15Kg, 30Kg, 100Kg, 300Kg யாவும் விற்பனைக்குண்டு.

**நந்தலாலா இரும்பகம்**
**29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(CS 25442)(04.17)

**021 222 6234**

## Your Royal AutoMobiles

எமது வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு வேலையாள்கள் தேவைப்படுவதால் உடன் அழையுங்கள்

தொடர்புக்கு:

**07777 63533 , 077 943 7486**

## ஐரோப்பிய STUDENT விசா

- Medicine
- Engineering
- Business Management
- Language Studies
- Hospitality & Tourism
- IT & many more....

- No Need IELTS
- No Age Limit
- No Need Sponsor
- No Need BankBalance

2019 September Intake now on

**Contact : EURO UNI**
No.44, Vajira Road, Colombo - 04
Email: eurounilk@gmail.com
Whatsapp,Phone - 077 4796 483

## விற்பனைக்குண்டு

Lion பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

(CS 25446)(14.17)

**021 222 1273**

## தவறிவிட்டது

இராசரத்தினம் செல்வலட்சுமி என்பவரின் 577290539V தே.அ.இலக்கம் கொண்ட கடவுச்சீட்டு (Passpord ) BOC வங்கிப் புத்தகம். தொழிலாளர் அட்டை மற்றும் முக்கிய பொருள்கள் என்பன அடங்கிய கைப்பேர்ஸ் யாழ்ப்பாணத்தி லிருந்து மாநகரசபைக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(CS/25449)(4.17)

**077 105 3755**

## விற்பனைக்கு

- புதிய எயர் கொண்டிஷன் ( AC) 12 BTU -7
- புதிய கட்டில், மெத்தை queen Size - 6
- ரெசிங் ரேபிள் (புதியது ) - 6
- ஐஸ்கிறீம் மெசின் 8L (பாவித்தது)
- காஸ் றைஸ் குக்கர் 10kg (பாவித்தது)
- 200 Honda 84 Sri (பாவித்தது)
- மேசை 6 (புதியது)

**077 267 2888**

## காணி விற்பனைக்கு

யா/ கல்வியங்காடு முக்குறுணிப் பிள்ளையார் வீதி, 2ஆம் குறுக்கு ஒழுங்கை/ புலவனார் வீதி, 39A இல் உள்ள 2 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.

கல்வியங்காடு பெற்றோல் நிரப்பு நிலையத்தில் இருந்து 300m தூரத்தில் உள்ளது.

**076 379 9787, 071 843 3299**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com.
021 493 1111

## சேது பொறியியல் கல்லூரி

தன்னாட்சி பெற்ற கல்லூரி | NAAC 'A' தரச்சான்றிதழ் பெற்றது
அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது



4800க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் கல்லூரி

கல்லூரிக்கு வருகை தந்த நிறுவனங்கள் 110

878

95%

SETHU INSTITUTE OF TECHNOLOGY
25 YEARS OF SERVICE

ஸ்ரீலங்கா மாணவர்களுக்கு 40%
சிறப்பு கல்வி ஊக்கத்தொகை

Website : www.sethu.ac.in • Email : sit@sethu.ac.in

JOIN SIT FOR GLORIOUS FUTURE! A Gateway to Knowledge and Success

Admissions OPEN

- தென் தமிழகத்தில் மிக அதிகமான பன்னாட்டு நிறுவனங்களின் வேலை வாய்ப்பினை பெற்று தரும் ஒரே கல்லூரி
- சர்வதேச மாணவர் (NRI / FN / PIO / OCI / CIWGC) சேர்க்கைக்கான அனுமதி
- பல்வேறு துறைகளுக்கு NBA தரச்சான்றிதழ் தொடர்ச்சியாக பெறப்படுகிறது.
- பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் ஆய்வுப்பணிகளுக்காக ரூ.5.6 கோடி பெறப்பட்டுள்ளது
- இந்தியாவின் தலைசிறந்த 75 தனியார் பொறியியல் கல்லூரிகளில் ஒன்றாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது – டைம்ஸ் ஆய்வு
- வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)
- மாணவர்களின் புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வுகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை
- நூற்றுக்கும் அதிகமான முனைவர் (Ph.D) பட்டம் பெற்ற பேராசிரியர்கள்
- சர்வதேச TOASTMASTERS நிறுவனம் மூலம் சிறப்பு ஆங்கில மொழி பயிற்சி
- பிரெஞ்சு, ஜப்பான் மற்றும் ஜெர்மன் போன்ற பன்னாட்டு மொழிகளில் பயிற்சி
- 12 கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமைகள் ( Patent Rights )
- சுத்திகரிக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் மற்றும் பசுமையான சுற்றுச்சூழல்
- 75க்கும் மேற்பட்ட பேருந்துகள் மூலமாக எல்லாப் பகுதிகளுக்கும் போக்குவரத்து வசதி
- ஆண், பெண் இருபாலருக்கும் தனித் தனி விடுதி வசதி
- நவீன வசதிகளுடன் கூடிய நூலகம் மற்றும் ஆய்வகங்கள். Wi-fi வசதியுடன் கூடிய வளாகம்
- மருத்துவ வசதி மற்றும் 24 மணி நேர ஆம்புலன்ஸ் சேவை
- சர்வதேச உணவகம் மற்றும் Lift வசதி
- மதுரை பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து 15 நிமிட பயணத்தில் கல்லூரி கொழும்பு, துபாய் மற்றும் சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கு நேரடி விமான சேவை

**COURSES OFFERED**

4 Years B.E. / B.Tech. Degree courses

- B.E. Mechanical Engineering
- B.E. Computer Science and Engineering
- B.E. Electronics and Communication Engineering
- B.E. Electrical and Electronics Engineering
- B.Tech. Information Technology
- B.E. Civil Engineering
- B.Tech. Chemical Engineering
- B.E. Agriculture Engineering
- B.E. Biomedical Engineering

**Post Graduate Courses**

- M.E. CAD/CAM
- M.E. Computer Science and Engineering
- M.E. Communication Systems
- M.E. Power Electronics and Drives
- M.E. Structural Engineering

Pulloor-626 115, Kariapatti, Virudhunagar Dt. Tamilnadu,India. Ph:+914566-308001-04 | 82200 07050,73970 02277
Admn Off: Plot No.392, Anna Nagar, Madurai - 625 020,Tamilnadu,India. Ph:+91452-2532215,2538294
Local Contact : Ruwani Perera, SR Global Services Pvt Ltd., 75/3,Barnes Place, Colombo 07, Sri Lanka
Mobile: +94 77 227 0213 | Off: +94 112 677 185 | Mail id : ruwanip.srglobalservices@gmail.com




மொபிடெல் MAX
இப்பொழுது பயமில்லாமல் CONNECT ஆகுங்கள்

மாதாந்தம் ரூபா. 240 க்கு
முற்கொடுப்பனவு பக்கேஜ்

M2M 1000 நிமிடங்கள்
M2M SMS 1000
டேட்டா 1000 MB

அரசு வரிகள் உண்டு.

அழையுங்கள் 1717
www.mobitel.lk

4G LTE

Sri Lanka Telecom Mobitel

# ரிசாத்துக்கு எதிரான தீர்மானம் தோற்றால் தேர்தல் சிக்கலாகும்

## சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களை எச்சரிக்கின்றது ராவணா பலய

கொழும்பு, மே 19

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குச் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தாது விடுவார்களேயானால் எதிர்வரும் தேர்தல்களில் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது ராவணா பலய அமைப்பு.

அந்த அமைப்பின் பொதுச் செயலர் இந்தேகந்தே சாத்தா திஸ்ஸ தேரரே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

அமைச்சர் ரிசாத் பதியுதீன் அரசில் மட்டுமல்ல நாட்டில் இருப்பதற்கும் தகுதி அற்றவர். சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கின்றனரா? ஆதரிக்கின்றனரா? என்பதை நாம் அவதானிப்போம். ரிசாத் பதியுதீனைத் தோல்வியடையச் செய்ய அவர்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தாது விட்டால் எதிர்காலத் தேர்தல்களில் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்போம். என்றார்.

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக ஐ.ம.சு.மு. நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்ததாவது:

ரிசாத் பதியுதீனுக்கு எதிரான தீர்மானம் தொடர்பாகப் பல கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. பசில் ராஜபக்ச எதிர்ப்பு வெளியிட்டுள்ளார் என்றும், பொது எதிரணி உறுப்பினர்கள் பலர் ஆதரவு வழங்கப்போவதில்லை என்று கூறப்படும் கருத்துக்கள் உண்மையற்றவை. எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் இது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் பசில் ராஜபக்ச உள்ளிட்ட அனைவரும் ஆதரவு தெரிவித்தனர் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபே குணவர்த்தன தெரிவித்ததாவது ரிசாத் பதியுதீனுக்கு எதிரான தீர்மானத்துக்கு முழுமையான ஆதரவை வழங்கவுள்ளோம். நாட்டை நேசிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தீர்மானம் வெற்றியடைய ஒத்துழைக்க வேண்டும் - என்றார்.

(எ-31)

# வன்முறையில் ஈடுபட்டோரை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

## வலியுறுத்துகின்றார் அசாத் சாலி

கொழும்பு, மே 19

வன்முறைகளில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து சட்டத்தை நிலைநாட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால்தான் எதிர்காலத்தில் இவ்வாறான வன்முறைகள் நடைபெறாது என்று தெரிவித்துள்ளார் மேல்மாகாண ஆளுநர் அசாத் சாலி.

மினுவாங்கொடவில் வன்முறை நடைபெற்ற இடங்களை நேரில் சென்று அவர் பார்வையிட்டார். தாக்கப்பட்ட ஜும்ஆ பள்ளிவாசலைத் திருத்துவதற்காக மேல் மாகாண சபையின் சார்பாக 1.5 மில்லியன் ரூபாவுக்கான காசோலையைப் பள்ளிவாசல் நிர்வாகத்திடம் நேற்றுமுன்தினம் வழங்கினார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புனித ரமழான் மாதத்தில் இனவாதிகள் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக முஸ்லிம் மக்கள்மிகவும்வேதனை அடைந்துள்ளனர். பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டதால் கூட்டுப் பிரார்த்தனைகளில் ஈடுபட முடியாதுள்ளது. கடைகள் மீதான தாக்குதலானது முஸ்லிம்களின் பொருளாதாரத்தை வீழ்த்த வேண்டும் என்றநோக்கத்தில் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது. அதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கே பாதிப்பு ஏற்படும்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற படுகொலைத் தாக்குதலின் பின்புலத்தில் வெளிநாட்டுத் தலையீடு உள்ளது என்றும், குறிப்பிட்ட சமூகத்துக்கு எதிராக வேறுபாடுகள் காண்பிக்கப்படக்கூடாது என்றும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். முஸ்லிம் மக்களால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையலேயே உயிர்த்த ஞாயிறு படுகொலைத் தாக்குதல்களுடன் தொடர்புடைய 98 வீதமானவர்களை கண்டுபிடிக்க முடிந்துள்ளது.

பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்று மூன்று வாரங்களின் பின்னரே முஸ்லிம் மக்களுக்கு எதிராக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. வன்முறைநடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைவரையும் கைதுசெய்து, சட்டத்தின் முன்னிறுத்த வேண்டும்- என்றார். (எ-31)

# ரிசாத் மீதான தீர்மானத்துக்கு பவித்திரா ஆதரவு

கொழும்பு, மே 19

வணிகம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு என்று இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பவித்திரா வன்னியாராச்சி சபாநாயகருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

ரிசாத் பதியுதீனுக்கு எதிரான தீர்மானம் கடந்த வியாழக்கிழமை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது பவித்திரா வன்னியாராச்சி நாட்டில் இல்லாததால் தனது ஆதரவைச் சபாநாயகருக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது வணிகம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதிர்த் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் தங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நான் நாட்டில் இல்லாத காரணத்தால் அதில் கையொப்பம் இட முடியாது போய்விட்டது. முஸ்லிம் அடிப்படைவாதத்துக்குத் தூண்டுதலாக இருந்த அமைச்சர் ரிசாத் பதியுதீன் மீதும், அவரைப் பாதுகாக்கும் அரசு மீதும் மக்களுக்கு எதிர்ப்பு உருவாகியுள்ளது. இந்தநிலையில் அமைச்சர் ரிசாத் மீது கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எனது முழுமையான ஆதரவை வழங்குகின்றேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையொப்பமிட இயலாத நிலமையைக் கருத்தில் கொண்டு கடிதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றில் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டு வாக்கெடுப்பு நடக்கும்போது முழுமையாக ஆதரவை வழங்குவேன். என்றுள்ளது. (எ-61)

# ஹிஸ்புல்லா, அசாத் சாலியை பதவி நீக்குமாறு கோரிக்கை!

## மைத்திரியிடம் முன்வைக்க போகின்றாராம் ரத்ன தேரர்

கொழும்பு, மே 19

மக்கள் மத்தியில் அடிப்படைவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா மற்றும் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோரை உடன் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற யோசனையொன்றை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை தேசிய சபையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

இராஜகிரியவில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா பல்கலைக் கழகம் என்ற பெயரில் மக்கள் மத்தியில் அடிப்படை வாதத்தைத் தூண்டுகின்றார். மாணவர்களை மூளைச் சலவை செய்யும் தொழிற்சாலையொன்றையே நடத்திக் கொண்டிருக்கின்றார். அதனால் அவருக்கு எதிராக பெரும் மக்கள் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

இதற்கு நாடளாவிய ரீதியாகவுள்ள சகல பௌத்த விகாரைகளிலுமுள்ள மத குருமார்களின் முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கப் பெறும் என்றும் எதிர்பார்க்கின்றோம். இவர்கள் இருவரும் பதவி நீக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். இதில் நாம் உறுதியாகவுள்ளோம்.

ஹிஸ்புல்லா மற்றும் அசாத்சாலி ஆகியோரை பதவி நீக்கக் கூடிய அதிகாரம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு மாத்திரமே காணப்படுகின்றது. அதனால் நாம் அரச தலைவரைச் நேரில் சந்தித்து இந்த யோசனையை கையளிக்க தீர்மானித்துள்ளோம். இவ்விருவரும் பதவி நீக்கப்படாவிட்டால் அடிப்படைவாதத்தை அழிக்க முடியாது - என்றார்.

(எ-61)

# பயங்கரவாதத்தை ஒழிக்க இந்தியா ஆதரவு வழங்கும்

## மகாநாயக்க தேரர்களிடம் அந்த நாட்டுத் தூதுவர் உறுதி

கொழும்பு, மே 19

ஜிகாதி பயங்கரவாதத்தை முற்றாக இல்லாதொழிப்பதற்கு இந்தியா தனது முழுமையான ஆதரவை வழங்கும் என்று இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து மகாநாயக்க தேரர்களிடம் உறுதியளித்துள்ளார்.

தலதா மாளிகைக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சென்ற இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, மல்வத்துபீட திம்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல மகாநாயக்க தேரர் மற்றும் அஸ்கிரியபீட வரகாகொட சிறி ஞானரத்ன மகாநாயக்க தேரர் ஆகியோரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து மகாநாயக்க தேரர்களுடன் தூதுவர் கலந்துரையாடினார். பொதுவான அச்சுறுத்தலாகக் காணப்படும் ஜிகாதி பயங்கரவாதத்தை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு இந்தியா முழுமையான ஆதரவு வழங்கும் என்றும் குறிப்பிட்டார். பாதுகாப்பு விவகாரங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் இந்தியா தொடர்ச்சியாக இலங்கைக்கு வழங்கிவரும் ஒத்துழைப்பு தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் தமது வரவேற்பை வெளிப்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-31)

# பொம்பியோவும் மாரப்பனவும் வொசிங்டனில் சந்தித்து பேச்சு

கொழும்பு, மே 18

பயங்கரவாதத்துக்கு எதிரான இலங்கையின் போராட்டத்துக்கு அமெரிக்கா தனது வலுவான ஆதரவை வழங்கி வரும் நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கடந்த வியாழக்கிழமை வொசிங்டனில்கலந்துரையாடல்ஒன்றும்நடைபெற்றுள்ளது. அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக்கல் ஆர். பொம்பியோ மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோருக்கிடையே இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

இந்தச் சந்திப்பில் கடந்த மாதம் 5 அமெரிக்கர்கள் உள்ளிட்ட 250 இற்கும் மேற்பட்டவர்களைக் காவு கொண்ட ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்கு கடும் கண்டனத்தை வெளியிட்ட இராஜாங்க செயலர், இலங்கையின் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்துக்கு அமெரிக்காவின் பூரண ஆதரவையும் வெளிப்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.

குண்டுத்தாக்குதல்களின் பின்னர் அமெரிக்கா வழங்கிய ஒத்துழைப்பை அமைச்சர் திலக் மாரப்பன பாராட்டியதுடன் எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல் சம்பவங்களைத் தடுப்பதற்கு ஒன்றிணைந்து ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான ஆர்வத்தையும் இராஜாங்க செயலருக்குத் தெரியப்படுத்தினார் என்றும் கூறப்பட்டது.

அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 480 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளமையானது இலங்கையின் பொருளாதார ஏகாதிபத்தியத்துக்கும், சுபீட்சத்துக்கும் பங்களிப்புச் செய்கின்ற முக்கிய காரணியாக அமையும் என்று இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பில் இலங்கையின் புதுப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் குறித்தும் பொம்பியோ வரவேற்புத் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-61)

ஞாயிறு சிறப்பம்சம்
19.05.2019

சூரியகாந்தி
உதயன்



# தமிழின படுகொலையின் ஒரு தசாப்தம்

எஸ். தர்சன்

## முள்ளிவாய்க்காலில் மக்கள் ஆற்றாது அழுது புலம்பல்

தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நடைபெற்று 10ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனாலும், அந்தப் படுகொலைகள் நேற்றுத் தான் அரங்கேறியதான உணர்வை வரவழைக்கிறது முள்ளிவாய்க்கால். எத்தனை ஆண்டுகள் ஆனாலும், எதைக் கொடுத்தாலும், இழப்புக்களின். வலியை எவ ராலும், ஈடுசெய்துவிடமுடியாது, உணர்வுகளைக் கட்டுப்படுத்திவிடமுடியாது என்பதற்கு 10 ஆண்டுகளின் பின்பும் ஆறாத் துயரோடு முள்ளிவாய்க்காலில் திரளும் தமிழினமே சான்று.









#### நினைவேந்தலுக்கான ஏற்பாடு

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் 10 ஆவது ஆண்டாக நேற்றும் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் எழுச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டன. அதற்கான ஏற்பாடுகளை இந்த முறை முள்ளிவாய்க்கால் ஏற்பாட்டுக் குழு செய்திருந்தது. ஏற்பாடுகள் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டன. கடந்த ஆண்டுகளில் அரசியல் கலப்புக்களுடன் நடைபெற்ற இந்த நினைவேந்தல் இந்த முறை அதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட நினைவேந்தல் குழுவால் முன்னெ டுக்கப்பட்டது. நினைவுத் தூபியைச் சுற்றிலும், மஞ்சள், சிவப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஒளிச் சுடர்கள் நடப்பட்டிருந்தன. அந்தச் சுடர்கள் ஒவ்வொன்றிலும், கற்பூரங்களும் தீப்பெட்டிகளும் வைக்கப்பட்டிருந்தன. உறவுகளை நினைவு கூருவதற்கு ஏற்ப இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஒளிச்சுடர்களுக்கு அருகே மரக் கன்றுகள் வைக்கப்பட்டிருந்தன. அந்த ஒளிச் சுடரை ஏற்றும் உறவுகள் வீடு செல்லும்போது 10ஆவது ஆண்டு நினைவாக அந்த மரக்கன்றுகளை வீடுகளில் நடுகை செய்வதற்கு அங்கு அவை தயாராக வைக்கப்பட்டிருந்தன. கொன்றொழிக்கப்பட்ட எமது உறவுகளை காலம் தோறும் நினைவு படுத்துவதற்குச் சான்றாக அவை அங்கு வைக்கப்பட்டிருந்தன. நினைவேந்தலுக்கான பொதுச் சுடர் ஏற்றும் போது தடங்கல்கள் ஏற்படாதவாறு செய்தியாளர்களுக்கு என்று தனியான இடம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பொதுச் சுடருக்கு முன்னால் குவிந்து ஒளிப்படங்களை எடுத்து மக்களுக்கு இடையூறை ஏற்படுத்தாது இருப்பதற்காக முற்கூட்டியே செய்தியாளர்களுக்கு என்று தனியான மேடை அமைக்கப்பட்டி ருந்தது.

#### நினைவேந்தல்

நினைவேந்தல் சரியாக 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. முன்னதாக அந்தப் பகுதிக்கு வருகை தந்த மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சிறப்புத் தேவையுடையோர் சுடரேற்றுவதற்கு என்று தனியான இடம் ஒழுங்கு செய்யப்பட்டது. அவர்கள் அந்த இடத்துக்குச் சென்று ஒளிச் சுடர்களை ஏற்றலாம் என்று அறிவிக்கப்பட்டது. அதன் படி நினைவேந்த லில் கலந்து கொண்ட பிரமுகர்கள் குறித்த பகுதிக்குச் சென்று ஒளிச் சுடர் ஏற்றத் தயாராக இருந்தனர். அரசியல் வாதிகள் அனைவரும் சரிசமமாக மதிக்கப்பட்டனர். முன்னுரிமை, முதலிடம் என்பது தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் ஏற்பாட்டுக் குழு அதிக கவனம் செலுத்தியுள்ளது போலும்.






#### பொதுச் சுடர் ஏற்றி அஞ்சலி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான பொதுச் சுடரைச் சிறுமி ஒருவர் ஏற்றியிருந்தார். அன்னையின் மடியில் தவழும் வயதில், பால்குடிக்கும் பருவத்தில், எட்டு மாதத்திலேயே முள்ளிவாய்க்காலில் தனது தாய், தந்தையை இழந்தவள் அவள். தனது இடது கையையும் முள்ளி வாய்க்கா லில் பறிகொடுத்து ஒற்றைக் கையுடன் போரின் சாட்சியாக, இன அழிப்பின் சாட்சியாகப் பொதுச் சுடருக்கு மிகவும் பொருத்தமானவளாக அவள் அதை ஏற்றினாள். அதைத் தொடர்ந்து ஒளிச் சுடர்கள் ஏற்றப்பட்டன. கடும் காற்றிலும், உறவுகள் ஒளிச் சுடரை ஏற்றி உறவுகளை அஞ்சலித்தனர். உறவுகளை நினைவு கூர்ந்து, அவர்கள் இல்லாத சோகத்தை தாங்க முடியாது கதறி அழுதனர். அந்த அழுகுரல் பர வலடைந்தது. ஆற்ற முடியாது புலம்பினர். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் அந்த வலி எம்மவர் இடத்தில் என்றுமே மறைந்துவிடாது என்பதை அந்த இடத்தில் கூடியிருந்த அனைவர் மனதிலும் ஆழப் பதிந்தது.

மலர்கள் தூவப்பட்டன. நினைவேந்தலில் கலந்து கொண்ட அனைவரும் பொதுச் சுடருக்கு முன்னால் வந்து மலர் தூவி உறவுகளை அஞ்சலித்தனர். உறவகளைப் புதைத்த அந்த மண் கண்ணீரால் நனைந்தது. கதறியழும் உறவுகளுக்கு மதத் தலைவர்கள் ஆறுதல் கூறினர். அவர்களை ஆற்றுப் படுத்தினர். ஆனால் பீறிட்டு எழுந்த சோகத்தையும், அழுகையையும் எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

#### பசியாற்றிய கஞ்சி

10.30 மணிக்கு ஆரம்பமாகிய நினைவேந்தல் சுமார் ஒரு மணிநேரத்தின் பின்னர் நிறைவு பெற்றது. கடும் வெயிலையும் பொருட்படுத்தாது, நினை வேந்தலில் கலந்து கொண்ட உறவுகளின் களைப்பை ஆற்றுவதற்கும் ஏற்பாட்டுக் குழு பின்னிற்கவில்லை. குளிர்பானம், கஞ்சி போன்ற உணவுப் பொருள்களை வழங்கியது. கடும் வெயிலில் ஏற்பட்ட களைப்பையும், பசியையும் அந்தக் கஞ்சி சிறிதேனும் போக்கியது.

#### இம்முறை தடை ஏதுமில்லை


தடைகளைத் தாண்டி அஞ்சலிக்கப்படும் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு 10ஆண்டு நிறைவான நேற்று அரச படைகளால் எந்த தடைகளும் எற்படுத்தப்படவில்லை. மாறாக நினைவேந்தலுக்குத் திரளும் மக்களுக்குப் பொலிஸார் பாதுகாப்பை வழங்கினர். தகுந்த பாதுகாப்புடன் நினைவேந்தல் இடம்பெற்றது என்றும் கூறிவிடமுடியும். எனினும் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு செல்லும் போதும், வரும் போதும் இராணுவத்தின் சோதனைகள் அதிகரித்திருந்தன. குறித்த வழிப்பாதையில் 10க்கும் மேற்பட்ட சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன இரண்டு சாவடிகளில் பதிவு நடவ்டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் எதிரொலியாக அது இடம்பெற்றாலும் மக்கள் மத்தியில் பயம் காணப்பட்டது. இந்தத் தாக்குதல்களைக் காரணம் காட்டிப் படையினரின் அச்சுறுத்தல் முள்ளிவாய்க்காலில் இருக்கும் என்ற அச்சத்தால் உறவுகளில் சிலர் அங்கு வராதிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

#### ஓரணியில் அரசியல் தலைவர்கள்.

அரசியலில் போட்டியிட்டுத் தமக்குள் அடித்துக் கொள்ளும் தமிழ் அரசியல் தலைவர்கள். ஒருமித்து நினைவேந்தலில் கலந்து கொண்டனர். உயர்வு தாழ்வின்றி அனைவரையும் சமமாக மதிக்கும் வகையில் அங்கே வைக்கப்பட்டிருந்த ஒளிச் சுடர்களை ஏற்றி அஞ்சலி செலுத்தினர். அது அதிகம் சிலாகித்த விடயமாக இருந்தது.

எவருக்கு எந்த இடம் என்பது குறிப்பிடாமல், ஒளிச் சுடர் நடப்பட்டிருந்தன. அதில் அரசியல் தலைவர்கள் அஞ்சலி செலுத்தலாம் என்று ஏற்பாட்டுக் குழுவால் தெரிவிக்கப்பட்டதற்கு இணங்கக் கருத்து வேறுபாடுகள், போட்டிகள், அகங்காரங்கள் அத்தனையையும் ஓரம் கட்டிவிட்டு அவர்கள் அனைவரும் அஞ்சலி செலுத்தினர்.

இவ்வாறு நடப்பது இதுவே முதன்முறையாக இருக்கலாம். கொன்றொழிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகிடைக்க இதுபோன்று இவர்கள் அத்தனை பேரும் ஒருமித்துக் குரல் கொடுத்தால், கொடுப்பார்களா?



சந்திரசேகர ஆசாத்




# பேரழிவின் உற்பத்தி மையம் ?

கடந்த் உயிர்த்த ஞாயிறன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களையும் அதன் காரணமாக ஏற்பட்ட சாவுகளையும் அடுத்து வணக்கத்துக்குரிய பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்டு வரும் கருத்துக்கள் சோகமும்கோபமும்கொண்டவையாக இருக்கின்றன. அதே வேளை அனைவரையும் சிந்திக்கத் தூண்டும் வகையிலும் அமைந்துள்ளன. பொதுவாகவே கத்தோலிக்கக் குரு மார்கள், திருச் சபையைச் சேர்ந்த மக்களைத் தமது சொந்தப் பிள்ளைகளாகவே கருதி அன்பு செலுத்துவது வழமை. கத் தோலிக்க மக்களிலும் சிறுவர் முதல் முதியோர் வரை தமது குரு மார்களை அருட்தந்தையராகவோ அல்லதுஅருட்சகோதரராகவோ கருதி அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பர். இப்படியான நிலையில் ஆராதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததனது பிள்ளைகளைப் பறிகொடுத்த ஒரு தந்தையின் சோகமும் கோபமும் விரக்தியும் பேராயர் கருத்துக்களில் மேலோங்கி நிற்பது தவிர்க்கப்பட முடியாததாகும்.

**பேராயர் எழுப்பிய கேள்வி**

இந்தக் குண்டுத்தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்பே அது தொடர்பான எச்சரிக்கை இலங்கைப் புலனாய்வுப் பிரிவினருக்குக்கிடைத்திருந்தபோதிலும்அந்த அசம்பாவிதத்தைத் தடுத்து நிறுத்த ஏன் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற கேள்வியை எழுப்பினார் பேராயர். இதற்கான முழுப் பழியையும் பொலிஸ்மா அதிபர் மீதும் பாதுகாப்புச் செயலர்மீதும்போட்டுஅவர்களைப்பதவி விலகும்படி கேட்டுக் கொண்டார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. பாதுகாப்புச் செயலர் பதவி விலகினார். பொலிஸ் மா அதிபர் பதவி விலக மறுத்தார். இந்த நிலையில் அவர் கட்டாய விடுமுறையில் பணி நிறுத்தம் செய்யப்பட்டார். முற்கூட்டியே குறித்த தகவல் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த நிலையில் அவர்கள் தங்கள் பணிகளை உடனடியாக முடுக்கி விட்டிருக்க வேண்டும். இதைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கைகளைமுன்னெடுத்திருந்தால்எச்சரிக்கை கிடைத்த4ஆம்திகதியிலிருந்துதாக்குதல் நடத்தப்பட்ட 21ஆம் திகதிக்குள் எவ்வளவோசெய்திருக்கமுடியும்.நாட்டில்அரச தலைவர் இல்லாதபோது அவருக்கு அடுத்த நிலையில் அதிகாரத்துடன் இருக்கின்ற தலைமை அமைச்சருக்கு இதைத் தெரியப்படுத்தியிருக்கலாம். ஆனால், அவ்வாறும் இல்லை. இப்படியான நிலையில்இந்தவிவகாரத்துடன்சம்பந்தப்பட்ட புலனாய்வுஅதிகாரிகள்மீதுநடவடிக்கை எடுக்கப்பட்டதாகவோ விசாரணை நடத்தப்பட்டதாகவோ தெரியவில்லை. இந்த நிலையில்தான்பேராயர்இதுதொடர்பாக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை எனத் தெரிவித்தார். அதுமட்டுமின்றி இப்படியானதொரு கொடுமை நடக்கப் போகிறது என்பதைத் தெரிந்தும் இதைத் தடுக்க உரிய நடவடிக்கைகளைஎடுக்கத்தவறியவர்கள்மேல் நடவடிக்கைமேற்கொள்ளமுடியாத தலைமைகள் தங்கள் பதவிகளை விட்டு விலக வேண்டுமெனவும் பேராயர் கேட்டுக் கொண்டார்.

**அரசியல்வாதிகள் குறித்த அதிருப்தி**

குறித்த குண்டுத் தாக்குதல் குறித்த விசாரணைகளில் சில சக்திகளைக் காப்பாற்றும்வகையிலானவழித்தடம்அமைக்கப்பட்டிருக்கிறதாஎன்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. இதனாலேயே பேராயர் இன்னொரு சந்திப்பின் போது,

"திடீரெனச் செல்வந்தரான அரசியல்வாதிகள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். வெளிநாட்டிலுள்ள பயங்கரவாத அமைப்புக்கள் இவர்களுக்குப் பணம் வழங்கித் தமது தேவைக்குப் பயன்படுத்தினவா என்பது குறித்து ஆராய வேண்டியது தவிர்க்க முடியததாகிறது. பேராயர் முன் வைத்த இன்னுமொரு குற்றச்சாட்டு மிக முக்கியமானதாகும். இந்தக் குண்டு வெடிப்புக்களையும் இதனால் ஏற்பட்ட பாதிப்புகளையும் சில அரசியல்வாதிகள் அரசியல் இலாபம்பெறுவதற்குப்பயன்படுத்துகின்றனர் என்றார்.

**மகிந்த - கோத்தபாயவின் கருத்துகள்**

சில திறமையான பாதுகாப்புப் படையினரையும், புலனாய்வாளர்களையும் அரசு சிறையில் அடைத்திருப்பதாலேயே பாதுகாப்புப் பிரிவினதும் புலனாய்வுப் பிரிவினதும் செயற்பாடுகள் முடக்கப்பட்டிருக்கிறது என்றும், அதன் காரணமாகவே இப்படியான பயங்கரவாத நடவடிக்கைள் இடம்பெற்றன என்றும் எதிர்க்கட்சித் தலைவர்மகிந்தராஜபக்சவும்,முன்னாள் பாதுகாப்புச்செயலரானகோத்தபாயராஜபக்சவும் கூறி வருகின்றனர். அதுமட்டுமன்றித் தாங்கள் ஆட்சியில் இருந்திருந்தால் இப்படியான அசம்பாவிதங்கள் ஏற்பட்டிருக்க முடியாது எனவும் பரப்புரை செய்கின்றனர்.

ஆனால், கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புச்செயலலாக இருந்தபோதே 2014ஆம் ஆண்டில்தேசியதௌபீக்ஜமாத்அமைப்பைப்பற்றிஅகிலஇலங்கைஉலமாக்கள் சபை முறைப்பாடு செய்ததாகவும் அது பற்றி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் அதன் தலைவர் ஊடகமொன்றுக்குச்செய்திவெளியிட்டுள்ளார். அதுமட்டுமன்றி அந்த அமைப்பைச் சேர்ந்த 20பேருக்குப்புலனாய்வுப்பிரிவினரால் மாதாந்த ஊதியம் வழங்கப்பட்டு வந்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இப்படியான நடவடிக்கைகள் ஏன் மேற்கொள்ளப்பட்டன என்பதற்கு இது வரை எவரும்தெளிவானபதிலைவழங்காவிடினும் தேசிய தௌபீக் ஜமாத் அமைப்பின் வளர்ச்சியில் முன்னாள் பாதுகாப்புச் செயலரின் பங்கு உண்டு என்பது பற்றியும் சிந்திக்கத்தலைப்படலாம். முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் செயற்பட்ட பொதுபலசேனவுக்கும் அதே வேளையில் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பான தேசிய தௌபீக் ஜமாத் அமைப்புக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலரின் ஆதரவு இருந்ததென்றால் அதன் அர்த்தம் என்ன? அடிப்படையில் சிங்களமக்களுக்கும்முஸ்லிம்மக்களுக்குமிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் ஏற்படுத்தி நாட்டைக் குழப்ப நிலையில் வைத்துக் கொண்டு இராணுவ மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவது இதன் நோக்கமாக இருக்கலாம்.

தாங்கள்ஆட்சிக்குவந்தால்இந்தப்பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த முடியும் எனக் கூறி அரசியல் இலாபம்பெற முனைகின்றனர்.

**ஏகாதிபத்திய ஆதிக்கம்**

எல்லாவற்றையும் விட வேறு எவரும் வெளிப்படுத்தாத, வெளிப்படுத்தத்துணியாதஒருமுக்கியமான உண்மையைப் பேராயர் எவ்வித தயக்கமுமின்றி வெளியிட்டார். அதாவது செல்வந்த நாடுகளேஆயுதங்களைஉற்பத்தி செய்கின்ற என்றும் அவற்றின் விற்பனையைப் பெருக்க இன, மத-மோதல்களை ஊக்குவிக்கின்றன எனவும் அதற்கு வளர்முக நாடுகளைத்தங்கள்கட்டுக்குள் வைத்திருக்கும் முயற்சி களை மேற்கொண்டு வருகின்றன எனவும் போரில்லையேல் அவர்களுக்குவாழ்வில்லைஎனவும் தெரிவித்தார்.

குண்டுவெடிப்புஇடம்பெற்றகையுடனேயே அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகளின் புலனாய்வுப் பிரிவினர், 'இன்டர்போல்'எனஅழைக்கப்படும் பன்னாட்டு பொலிஸ் பிரிவு உட்பட எட்டு நாடுகளின் புலனாய்வுப் அமைப்புகள் இங்கு வந்து இறங்கிவிட்டன. இவை இலங்கைக்குபுலனாய்வுத்தொழில்நுட்ப உதவிகளையும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கையாள்வது தொடர்பான பயிற்சிகளையும்வழங்கும்எனஅறிவிக்கப்பட்டது.

ஆனால் அவற்றின் நடவடிக்கைகள் அந்தளவுடன் நின்றுவிடாது. இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் கருதி அதைத் தங்கள் கட்டப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கானமுயற்சிகளையும்இதைச்சாட்டாகக் கொண்டு வலுப்படுத்த முனை யாமலில்லை.

இந்தக் குண்டு வெடிப்புக்களையடுத்து அதற்கான அடிப்படைகளை விரிவு படுத்துவதே இவற்றின் முக்கியமான நோக்கமாகவும்அமையலாம். இதனால்எதிர்காலத்தில் இலங்கை மேற்குலக ஆதிக்கப் பரவலின்ஆடுகளமாகவிரிவாக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இவற்றையெல்லாம் தெளிவாகவும் துணிச்சலுடனும் வெளிப்படுத்திய பேராயர் இலங்கைக்குள்குழப்பங்களும்,கலகங்களும், மோதல்களும் உருவாகும் வகையில் சில அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதைக் குறிப்பிடத் தவறிவிட்டார்.

அதாவது பௌத்த பேரினவாத மதவெறி கொண்ட பொதுபலசேன, முஸ்லிம்அடிப்படைவாத தௌபீக் ஜமாத் அமைப்பு ஆகியவை ஒன்றுக்கொன்று நேர் எதிரானவையாக இருந்த போதிலும் அவற்றுக்கு காணிகள் வழங்கப்பட்டு மாதாந்த ஊதியம் வழங்கப்பட்டு உதவியளிக்கப்பட்டு ஒரே தரப்பினராலேயே ஊட்டி வளர்க்கப்பட்டன.

நாட்டில்மோதல்களும், குழப்பங்களும்ஏற்பட்டால்படையினரைக் களமிறக்கி சர்வாதிகார அரசியலைநடத்தத்துடிக்கின்றதரப்பே அதன் பின்னா லுள்ளது. இதற்கான திட்டங்கள் நீண்ட கால நோக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே அதிகார வெறி பிடித்த மேலாதிக்க சக்திகளின் கை ஓங்கியிருக்கும் வரை மக்களுக்கு நிம்மதியானஅமைதியானவாழ்வு கிடைப்பது என்பது எட்டாக்கனியே.



ஸ்டோஸ்வாமி

# “இது சிங்கள - பௌத்த நாடு அல்ல”



## மங்களவின் கூற்றில் களங்கம் இருக்கிறதா?

“இலங்கையானது சிங்கள பௌத்த நாடு அல்ல இலங்கையைத் தமது தாய் நாடாகக் கொண்ட அனைவரினதும் நாடே இலங்கை. இங்கே கிறிஸ்தவ, கத்தோலிக்க, இந்து மற்றும் இஸ்லாமிய மதங்களைப் பின்பற்றுபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாவரும் பௌத்த சிங்களவருக்கு இருக்கக்கூடிய உரிமைகளைக் கொண்டிருக்கிறார்கள்” என்பதே அரசின் நிதி அமைச்சரான மங்கள சமரவீரவின் கூற்றாக விருந்தது.

சில காலங்களுக்கு முன்னர் புதிய அரசமைப்பு விவகாரம் சூடு பிடித்திருந்த காலத்தில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமையளிப்பது பேசு பொருளாக இருந்தது. பௌத்த மதத்துக்குக் கிடைத்து வந்த முன்னுரிமை புதிய அரசமைப்பின் உள்ளடக்கங்களால் பாதிக்கப்:படும் அபாயம் இருப்பதாகக் கண்டறிந்தவர்கள் அந்த நேரத்தில் அதைத் தூக்கிப்பிடித்திருந்தனர். புதிய அரசமைப்புப் பணிகள் இளைப்பாறத் தொடங்கியதும் அது தொடர்பான சர்ச்சையும் ஓய்வடைந்தது. இப்போது இலங்கை நாட்டின் பல்லின தன்மையை விவரிக்கும் வகையில் மங்கள தெரிவித்த கருத்து சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது.

“இலங்கையானது சிங்கள பௌத்த நாடு அல்ல இலங்கையைத் தமது தாய் நாடாகக் கொண்ட அனைவரினதும் நாடே இலங்கை. இங்கே கிறிஸ்தவ, கத்தோலிக்க, இந்து மற்றும் இஸ்லாமிய மதங்களைப் பின்பற்று பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாவரும் பௌத்த சிங்களவருக்கு இருக்கக்கூடிய உரிமைகளைக் கொண்டிருக்கிறார்கள்” என்பதே அரசின் நிதி அமைச்சரான மங்கள சமரவீரவின் கூற்றாகவிருந்தது. ஆனால், அவர் கூறிய கருத்தின் முற்பகுதியான ‘இலங்கையானது பௌத்த சிங்கள நாடுஅல்ல’என்னும்பகுதிமாத்திரம்வெட்டியெடுக்கப்பட்டு, உருப்பெருப்பிக்கப்பட்டு, அரங்குக்கு அழைத்து வரப்பட்டுத் திரைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

**மங்களவுக்கு எதிராக முறைப்பாடு!**


இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு கிடையாதென மங்கள சமரவீர தெரிவித்த கருத்து இனங்களுக்கிடையில் வன்முறையைத்தூண்டுவதாகக்கூறிச்சிறிலங்காபொது மக்கள் பெரமுனவைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் முறைப்பா டொன்றைப் பதிவு செய்திருக்கிறார்கள். மங்கள சமரவீர மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியே ஷெகான் சேமசிங்க உள்ளிட்ட உறுப்பினர்கள் இந்த நகர்வை மேற்கொண்டுள்ளனர்.

**மனோவின் மறுப்பு!**

கடந்த செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற ‘தேசிய பாதை’ என்னும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடுமற்றும்இந்துசமயவிவகாரஅமைச்சர்மனோ கணேசன், இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு அல்ல எனக் கூறுவது நல்லதல்ல என்றிருக்கிறார். இலங்கையில் பல்வேறு இனக் குழுக்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும் இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என அவர் கூறியிருக்கிறார்.

**கட்டவிழத்துவிடப்பட்ட கடைத்தனம்**


உயிர்த்தஞாயிறன்றுஇடம்பெற்றதாக்குதல்களையடுத்துக் கலவர நிலையை அடைந்திருந்த இலங்கையின் உள்நாட்டு நிலைவரம் மெதுவாக இயல்பு நிலைக்குத் திரும்பிக்கொண்டிருந்த நிலையில், கடந்தவாரம்வடமேல்மாகாணத்தின்சிலபகுதிகளில் காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. முஸ்லிம்களுக்குச் சொந்தமான வியாபர நிலையங்கள், வீடுகள் மற்றும் பள்ளிவாசல்களைக் குறி வைத்து நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களால் முஸ்லீம் ஒருவர் சாவடைந்திருப்பதுடன் மில்லியன் ரூபாய்கள்பெறுமதியானசொத்தழிவுஏற்பட்டிருப்பதாகவும் அறிக்கையிடப்பட்டிருக்கிறது. இந்த நிலையில், மங்களவின் அறிவிப்புக்கு மறுத்தான் விடும் வகையில் கருத்துத் தெரிவித்திருக்கும் வண. இத்தேபானதம்மாலங்காரதேரர், “இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு அல்ல என்பவர்கள் அதில் குடியிருக்கத் தகுதியற்றவர்கள்” என்ற சாரப்படக்கூறியிருக்கிறார்.மகரகமவில்நடாத்தத் திட்ட மிடப்பட்ட வெசாக் வைபவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்த னவுடனும் அவரோடு வருகை தந்திருந்த பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதைக் குறிப்பிட்டதாகடெய்லிமிரர்செய்திவெளியிட்டிருக்கிறது. பௌத்த மதத்தினை பின்பற்றாதவரான கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை கூட இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடாக ஏற்றுக் கொண்டிருக்கையில், இலங்கை சிங்கள பௌத்தர்களின் நாடு அல்ல என்பவர்கள் அங்கு வாழத் தகுதியற்றவர்கள் என்கிறார் தேரர்.



**அரசமைப்புச் சொல்வது என்ன?**


இதுவரை 19 திருத்தங்களைக் கண்டிருக் கும் இலங்கையின் அரசமைப்பு அத்தியாயம் இரண்டைப்பௌத்த மதத்துக்காகவே ஒதுக்கியிருக்கிறது. இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்துக்கு முதன்மைத் தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க 10ஆம் 14(1)(உ) ஆம் உறுப்புரைகளால்வழங்கப்பட்டுள்ளஉரிமைகளைஎல்லாமதங்களுக்கும் காப்புறுதி செய்யும் அதேவேளையில், பௌத்த சாசனத்தை பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும் என அரசமைப்புக் குறிப்பிடுகிறது. அடிப்படை உரிமைகள் பற்றிக் குறிப்பிடும் அரசமைப்பின் மூன்றாவது அத்தியாயம், ஆளொவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையினை உடையவராக இருப்பதற்கான அல்லது மேற்கொள்வதற்கான சுதந்திரமுட்பட சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும் என்கிறது. அடிப்படைஉரிமைகளின்கீழ்வரும்14(1)(உ)பிரிவானது ஒவ்வொரு பிரஜை யும் தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும்தனதுமதத்தினையோஅல்லதுநம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும், போதனையிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரத்தைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறது. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை தானம் வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடும் அதே அரசமைப்பு 12(1) பிரிவில் சட்டத்தின் முன்பு மனிதர்கள் எல்லோரும் சமமானவர்கள்; அத்துடன் அவர்கள் சட்டத்தால் சமமாக பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள் எனவும், 12(2) பிரிவில் இனம் மதம் மொழி - சாதி பால் அரசியற்கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்றுகாரணமாகவும்எந்தப்பிரசையும்ஓரங்கட்டப்படல் ஆகாது எனத் தெளிவாகக் குறிப்பி டப்பட்டிருக்கிறது.

நடைமுறையிலுள்ள அரசமைப்பு எந்தவிடத்திலும் எந்த மொழிப்பிரதியிலும் இலங்கையை ஒரு பௌத்த சிங்கள நாடு எனக் குறிப்பிடவில்லை. அதேவேளை சட்டத்தின் முன் ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள் என்றும் இனம் மொழி மதபேதம் காரணமர்க எவரும் ஓரங்கட்டப்படலாகாது என்று தெளிவாகக் குறிப்பிடுகிறது. மங்களவின் கருத்து தற்போது பின் பற்றப்படும் அரசமைப்புடன் ஒத்துப்போகிறது. மங்களவின் கருத்தை நுனிப்புல் மேய்ந்தவர்கள் கிட்டத்தட்ட அதே பார்வைப்புலத்தோடு தான் அரசமைப்பையும்நோக்கியிருக்கிறார்கள். இலங்கை பௌத்த சிங்கள நாடு அல்ல என்பதைக் கேட்கும்போது அசௌகரியம் அடைபவர்கள் இன மத பாகுபாடு காரணமாக எவரும் புறந்தள்ளப்படக் கூடாது என்னும் அரசமைப்பு அறிவிப்பை எவ்வாறு நிறைவேற்று வார்கள் என்பதை இப்போதே வெளிப்படுத்தி விடுவது நல்லது!



நா. ஜெகதீஸ்வரன்



# மனங்களில் வாழ்கின்ற ‘தேசியத் தலைவர்’


தமிழ்த் தலைவர்கள் என்று சுட்டக்கூடிய அனைவரது சிலைகளையும் நிறுவி அந்தச் சிலைகளுக்கு அருகிலோ, அல்லது ஓரமாகவே தலைவர் பிரபாகரனின் சிலையை நிறுவும்போது ஏனைய தமிழ்த் தலைவர்களின் சிலைகள் சிறுத்துவிடுவது தவிர்க்க முடியாதது. இந்தப் புரிதலை உடையவர்களால் தமிழர் தம் மனங்களில் இருந்து வேலுப்பிள்ளை பிரபாகரன் என்கிற ஆளுமையை அழிக்கவோ, மறக்கடிக்கவோ முடியாது என்பதை உணர்ந்து கொள்வது சுலபம். காரணம், பிரபாகரன் தலைவர் என்பதைக் கடந்துதமிழ் மக்களால் மறக்க முடியாத, தவிர்க்க முடியாத ‘தேசியத் தலைவர்’ ஆகப் போற்றப்படுகிறார். ஏனைய தமிழ்த் தலைவர்களுடன் ஒப்பிட முடியாத அளவுக்கு உயர்ந்து நிற்கிறார்.தமிழ்மக்கள்தமதுமனதில் அவரைஅழியாச்சித்திரமாகப்பதித்து வைத்துள்ளனர். அதை இராணுவமோ, பொலிஸாரோ சோதனை செய்து கண்டு பிடித்துவிட முடியாது. அதுமிகமிகஆழமானதும்,உணர்வுபூர்வமானதுமானவிடயமாகஇருக்கிறது. போரின்பின்னரான–அதாவது பிரபாகரன் இல்லாதாக்கப்பட்ட காலத்தின் பின்னராவது தமிழ் மக்களின் மனங்களை வெல்லத் தவறியிருக்கிறார்கள் பிரபாகரனை இல்லாதொழித்த ஆட்சியாளர்கள். ஆகவே இந்த நிலை நீடிக்கும் என்பது ஒரு வாதம். புலிகளை அழித்ததுடன் அரசுகளின் பிரச்சினை முடிந்தது என்பதும் புலிகளின் ஆயுதப்போராட்டத்துக்குரிய தீர்வை இதுவரை வழங்காதது என்பதும் புலிகளின்போராட்டத்தின்நியாயத்தையும் வெற்றியையும் தொடர்ந்து தக்க வைக்கிறது.

**பயங்கரவாதச் சட்டகத்துக்குள்ளிருந்து நீக்கப்படாத புலிகள்**

இந்த மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழமாணவர்கள்இருவரும், பல்கலைக்கழகத்தில் சிற்றுண்டிச் சாலை நடத்துபவரும் பிரபாகரன் மற்றும் திலீபனின் படத்தை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். போர் முடிவுற்றுப் பத்து ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில்பிரபாகரனின் படத்தை வைத்திருப்பதற்குத் தமிழ் மக்களுக்கு அனுமதி இல்லை என்பதேஇதன்அர்த்தமாகும். இதன்படி பிரபாகரனின் படத்தை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்கிறது இலங்கை அரசு. பயங்கரவாதம் என்ற சட்டகத்துக்குள் புலிகளைப் புகுத்தியமையே அவர்களை அழிப்பதற்கு அரசுக்குக் கைகொடுத்தது. அந்தச் சட்டகத்தைத் தொடர்ந்து பேணுவதன் மூலம் புலிகள் சார்ந்த எழுச்சிகளுக்குத் தடைகளை ஏற்படுத்துவது அரசின் நடவடிக்கையாக உள்ளது. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்கின்ற அரசியல் தலைவர்களால் பல்கலைக்கழ மாணவர்கள்கைதுசெய்யப்படும்போதும், புலிகளை நினைவு கூருகின்றமை யைக் காரணம் காட்டிய அரசின் தடைகளுக்கு எதிராகச் செயற்படுவதான தருணங்களிலும் உணர்ச்சித் தேசியத்தை உமிழவும், தமது அரசியல் பாதைக்கு அதைக் கொண்டுஉரமிடவும்முடிகிறதேதவிர, இந்தப்பயங்கரவாதச்சட்டகத்துக்குள் இருந்து புலிகளைவிடுவிப்பதோ, அல்லதுபோராட்டத்தையும், போராட்ட நாள்களையும், போராடியவர்களையும் மக்கள் எந்தத் தடைகளுமின்றி நினைவுகூருவதற்கோ, நினைவு நாள் கடைப்பிடிப்பதற்கோ இதுவரைஒழுங்குமுறைப்படியானசட்டமியற்ற முனையவில்லை. இத்தகைய காரியங்களைத் தமிழ் மக்கள் இன்றுவரை நிலையற்றதன்மையில்கடைப்பிடித்து வருவதே வெளிப்படை. உதாரணத்துக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் குறிப்பிட்டால், இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூருவதான அது மக்களுடன் மட்டும் மட்டுப்படுவதில்லை என்பதே உண்மை. யதார்த்தத்தில் தமிழ் மக்களிடமிருந்து புலிகளைப் பிரிக்க முடியாததைப்போலவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் கடந்து சென்று கொண்டிருக்கிறது. இரண்டறக் கலந்துள்ளது.

**நந்திக்கடலுக்கானபாதையில்பிரபாகரன்!**

இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள்நடத்தியதாக்குதலைக்காரணம்காட்டி பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் அவசரகாலச்சட்டத்தையும்கலப்புச்செய்துபுதிய கடும் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது அரசு. போதாக்குறைக்குப்புலிகளின் பரம எதிரியும், அயல் நாடுமான இந்தியா




வும் இந்தச் சூட்டோடு புலிகள் மீதான தடையை நீடிப்பதாக அறிவித்திருக்கிறது. இது ஒரு வகையில் நாடு கடந்த, புலம்பெயர்ந்திருந்துபுலிகளின்கோஷமெழுப்பி வருகின்றபோலி,தமிழ்த்தேசியவாதிகளை முடக்குகின்ற நடவடிக்கையாக இருக்கலாம் என்கிற சந்தேகமுள்ளது. நந்திக்கடலுக்கான பாதை என்ற நூலை எழுதிய இராணுவத் தளபதியான காமல் குணரத்ன வழங்கிய செவ்வி ஒன்றில் புலிகளின் முகாம்களில் இருந்தும் வேறு பல இடங்களில் இருந்தும் பிரபாரகனைச் சித்தி ரிக்கின்ற இலட்சக்கணக்கான ஒளிப்படங்களைக் கைப்பற்றியிருந்ததாகவும், அந்த ஒளிப்படங்களில்ஒன்றில்கூடப்பிரபாகரன் மதுபானம் அருந்தியதற்கான ஆதாரங்களோ, பெண்கள் விடயத்தில் அகௌரமாக நடந்துகொண்டதற்கான ஆதாரங்களோஇருக்கவில்லைஎன்றுகுறிப்பிட்டார். அத்தோடு பிரபாகரன் இறுதி வரை இந்த மண்ணைவிட்டு ஓடாது போராடிச் சாவடைந்தமை என்பது மதிக்கத்தக்க விடயம் என்றும் குறிப்பிட்டார். புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பாக இருப்பதால் பிரபாகரனின் படத்தை வைத்திருக்க முடியாதுஎனஇலங்கைஅரசுகுறிப்பிட்டால், நந்திக் கடலுக்கான பாதை என்ற இந்த நூலில் பிரபாகரனின் படங்கள் பதிப்பாகியுள்ளன. அந்தப்புத்தகத்தைவைத்திருப்பவரைப் பயங்கரவாதச் செயற்பாட்டில் ஈடுபடுபவர் என்று கூற முடியாது.

**பிரபாகரனை மனங்கொள்கின்ற விதம்!**

ஐ.எஸ்.ஐ.எஸ்ஆயுததாரிகளால்உயிர்த்த ஞாயிறுதினத்தில்மேற்கொள்ளப்பட்டதாக்குதலின் பின் பிரபாகரன் என்கிற நபர் தாக்குதல்களை எவ்வாறு திட்டமிட்டிருந்தார் என்பதுதொடர்பாகவும், அவருடையபோர் ஒழுக்கம் தொடர்பாகவும்கூடப் பேச்சுக்கள் எழுந்தன. அவர் போராட்டத்தை நடத்தியதற்கு நியாயமான காரணங்கள் இருந்தன என்பது சிங்கள ஆட்சியாளர்களளேயே வெளிக்கொணரப்பட்டது. தாக்குதல் நாட்டுப்பற்றுவிடயத்தில்விடுதலைப்புலிகளை அளவீடுசெய்யக்கூடியஓர்அளவுகோலை ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதாரிகளின் தாக்குதல் ஏற்படுத்திக் கொடுத்தது.

“கொள்கையுடன்போராடியமையால்தான் புலிகளைத் தமிழ் மக்கள் ஆதரித்தார்கள்” என்றார் அரச தலைவர். “தமிழ் மக்களின் போராட்டத்துடன் இதை ஒப்பிடக்கூடாது” என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன். இவை பிரபாகரன் என்ற தனி மனிதனின் ஒழுக்கத்தையும் விதலைப் புலிகள் அமைப்பின் இறுக்கமான கட்டமைப்பையும் போர் ஆற்றலையும் நிரூபிப்பவையே. தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பை 30 வருடங்களுக்குமேல்திறம்படவழிநடத்தியபெருமை பிரபாகரனுக்கே உண்டு, அவர் படித்த மனிதராக இல்லாதபோதும், ஒழுக்கமும் தூய்மையும் நிறைந்திருந்தவராக அதைச் சாதித்தார். புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டதன் பின் 2103ஆம் ஆண்டில் படித்தவர்களால் உருவாக்கப்பட்ட வடமாகாண சபையின்சீரழிவுஅனைவரும்அறிந்ததே.

**இனத்தின் அடையாளம் அவர்!**

தனது நூலில் பிரபாகரனின் ஒழுக்கத்தை வியந்து பேசுகிறார் அடோல் பாலசிங்கம். அவர் ஆடை அணியும் நேர்த்தி, முகச்சவரம்,உடல்பராமரிப்பில்செலுத்தும்கவனம், வாசிப்பில், சமையலில் சிறந்த நபர். மற்றவருடன் பேசும்போதுள்ள கனிவும் அடக்கமும் எனப்பிரபாகரன் குறித்து அவர் தனது நூலில் ஏராளம் விடயங்களைச் சுட்டிக் காட்டுகிறார். இதனாலோ என்னவோ ஈழத் தமிழர்களில் ஒருவராவது தினமும் ஒரு தடவையாவது பிரபாகரனை நினைக்கின்ற நிலை காணப்படுகிறது.

சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிராகப் பல தமிழ் இயக்கங்கள் போராடியபோதிலும் பிரபாகரன் என்றநபரே காலத்தை வென்றதமிழ்த் தலைவராக இடம்பிடித்தார். அதுவே அவர் தேசியத் தலைவர் என அடையாளப்படுத்தப்படுவதற்கும் காரணமாகியது. பிரபாகரனுக்கு நிகராக அவருக்கு முன்னரோ இனி வரும் காலங்களிலோ ஒரு தமிழில் தலைவர் ஒருவர் தோன்ற வாய்ப்பில்லை. பிரபாகரனுக்குநிகராகஇன்னொருவரைநிறுத்த முடியாதவரை,பிரபாகரன்அனைவராலும் நினைவுகூரப்படுவார் அவர் ஓர் இனத்தின் அடையாளமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

**தலைவர்கள் நினைவுகூரப்படுவது இயல்பானதே**

உலகில் நடந்த அனைத்துப் போராட்டங்களிலும் அதன் தலைவர் நினைவு கூரப்படுவதென்பது அந்த மக்களை மீண்டும் போராடத் தூண்டும் என்று அர்த்தப்படாது. தமிழ்ச்சட்ட வல்லுநர்களோ, தமிழர்களின் பிரதிநிதிகள் என்று மார்தட்டிக் கொள்பவர்களோ எவராவது இனியாவது தாமாக முன் வந்து இதுகுறித்து ஒரு வழக்கைப் பதிவு செய்துபிரபாகரனின்படத்தைத்தமிழர்கள் வைத்திருப்பதற்கான அனுமதி ஒன்றைப் பன்னாட்டுச் சட்ட வரன்முறைகளை ஆதாரம் காட்டிப் பெற வேண்டும். விடுத்து அவ்வப்போது அரசியல்பேசிக் காலம் கழிப்பது தவிர்க்கப்படவேண்டும்.

**பிரபாகரனை மக்கள் மறக்கார்**

இறுதிப் போரின்போது பிரபாகரன் தனது குடும்பத்துடன்இறந்ததாகஅறியமுடிகிறது. இத்தகையஓர்அர்ப்பணிப்பைவேறுஎந்தத் தமிழ்த் தலைவரும் செய்யத் தயாராக இருக்கவில்லை. தற்போதுள்ள தலைவர்கள்நாடாளுமன்றப்பிரதிநிதித்துவத்தையும் அங்கு உரை ஆற்றுவதையும் சிங்களப் பொலிஸாரைத் தமக்கு மெய்ப் பாதுகாவலர்களாக வைத்திருப்பதையும் பெருமையாக நினைக்கின்றனர். தமிழ் மக்கள் தமக்கானவாழ்க்கையைத்தாமேஉருவாக்கிக் கொள்ள முடியும் என்று நம்பியவர் பிரபாகரன். சிங்களத் தலைவர்களால் இலகுவாகக் கையாள முடியாத ஒருவராகக் காணப்பட்டார். தனது சாவு வரை தனது வாழக்கையை அவ்வாறே அமைத்தும் இருந்தார்.

இதன் காரணமாகவே பிரபாகரன் ஏனைய தமிழ்த் தலைவர்களுடன் ஒப்பிட முடியாத அளவுக்கு உயர்ந்து நிற்கிறார். தமிழ் மக்கள் தமது மனதில் அவரை அழியாச்சித்திரமாகப் பதித்து வைத்துள்ளனர்.


பிரபாகரன்தமிழ்மக்களுக்குஒருவாழ்க்கை முறையைக் காட்டியவர் என்ற வகையில் மதிப்பாக நினைகூரப்படுகிறார். அவரது படத்தை வைத்திருப்பவர்களைக் கைது செய்வதென்பது எதற்குமே முடிவாகாது. அனைத்துத் தமிழர்களின் மனங்களிலும் அவர் வாழ்ந்துகொண்டே இருப்பார்.

# ‘பொலித்தீன்’ என்ற பேரழிவை வலிந்து சுமக்கும் மாணவர்கள்!

■ தர்சன்







“வாங்கண்ணே!எத்தனபேக்வேணும்,நிறைய வேணுமா?” என்று அந்த இளம் முஸ்லிம் வியாபாரிஎன்னிடம்கேட்டார். அவர்யாழ்ப்பாணம், பள்ளிவாசல்வீதியில் தையல்கடைவைத்திருக்கும் ஒருவர். ஒளிப்படக் கருவியைக் கையில் எடுத்தவாறு நான் அவரிடம் “அது இல்ல அண்ணா உங்களோட கதைக்க வேணும்” என்றதும், அவருடைய முகத்தில் மாற்றம், தற்காலத்தில் முஸ்லிம் நண்பர்கள் அனைவருக்கும் இருக்கும் அந்த உணர்வை அவரிடமும் நான் அவதானித்தேன். அதைச்சூதாரித்துக்கொண்டுஅவரிடம்பேசுவதற்குமுனைந்தேன். உள்ளே வைக்கின்ற பொருள்கள் வெளித்தெரியும் விதமாகப்பொலித்தீனால்தயாரிக்கப்படும்புத்தகப்பைகளுக்குத் தற்போது மாணவர்கள் மத்தியில் இருக்கும் வரவேற்பு, மற்றும், விற்பனைகள் தொடர்பில் அவரிடம் பேசினேன்.

நாள் ஒன்றுக்கு 10 முதல் 15 வரையான புத்தகப் பைகளை முழுமையாகத் தைக்க முடியும், ஆனால் அந்தப் பைகள் ஓடர் வந்தால் தான் தைப்போம் என்று அந்த இளைஞர் கூறினார். அந்தக் கடைக்கு அருகிலுள்ள மூன்று கடைகளில் பொலித்தின் பையிலான இந்த வகைப் புத்தகப் பைகள் தயாரிக்கப்படுகின்றன. கைப் பை போன்று அவை உற்பத்தி செய்யப்படுகின்றன. 350 முதல் 400 ரூபாவரையிலான விலையில் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அந்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

**முஸ்லிம்கள் மீதான சந்தேகக் கண்**

ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதாரிகளால்மேற்கொள்ளப்பட்டகுண்டுத் தாக்குதல்களின் பின்னர், நாட்டிலுள்ள அனைத்து முஸ்லிம் மக்களையும், அரசு, படையினர், பொலிஸார், மற்றும் மக்களில் சிலரும் சந்தேகக் கொண்டு பார்க்கின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள்முஸ்லிம்சமுகத்தால்பரவலாகவேமுன்வைக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் சிங்களப் பேரினவாதத்தால்தமிழர்கள்எவ்வாறுநசுக்கப்பட்டார்களோ, விசாரணை என்றபெயரில்காணாமல்ஆக்கப்பட்டார்களோஅதுபோன்ற ஒரு நிலை ஐ.எஸ்.ஐ.எஸ். என்கிற இஸ்லாம் கடும் போக்குவாதப் பயங்கரவாதிகளால்ஒட்டுமொத்தமுஸ்லிம்மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் மக்களும் இதனால் விரக்தியடைந்துபோய் உள்ளனர். பள்ளிவாசல்கள்தொடர்பானவிவரங்களைத்திரட்டுதல், முஸ்லிம்மக்களின் குடும்பவிவரங்களைத்திரட்டுதல், தீவிர விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படுதல், ஆள் அடையாள அட்டையில் முஸ்லிம் பெயர் இருந்தால் அவரைத் தனியாக விசாரித்தல் போன்ற செயற்பாடுகளில் அரச படைகள் ஈடுபட்டுள்ளன. இதனால் அந்த மக்கள் நொந்துபோயுள்ளனர்.

**வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட அடிமட்ட மக்கள்**

ஊர் விட்டு ஊர் சென்று வியாபாரத் தொழில் செய்து அதன் மூலம் வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்யும் அந்த மக்கள் இன்று வெளியிடங்களுக்குச் செல்லமுடியாது முடக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய வாழ்வாதாரங்களும் முடக்கப்பட்டுள்ளன. இவ்வாறன நிலையில் அந்த முஸ்லிம் மக்களுக்கு வருமானத்தை ஈட்டக்கூடிய சிறிய தொழிலாகச் சூழ்நிலைக்கு ஏற்றால்போல இந்தப் பொலித்தீன் பையிலான புத்தகப்பைகளை வடிவமைப்பதும், அவற்றை விற்பனை செய்வதும் அமைந்துள்ளது. “இதில் பெரும் வருமானம் இல்லை என்றாலும், அதன்மூலம்சிறியவருமானமாவதுகிடைக்கின்றது” என்று மகிழ்கின்றனர் இதில் ஈடுபடும் முஸ்லிம் வியாபாரிகள்.

**பொலித்தீன் உள் நுழைந்த விதம்**

குண்டுத் தாக்குதல்களின் பின்னர் பாடசாலைகள் ஆரம்பிப்பது தொடர்பாகப் பாடசாலைகளின் அதிபர்கள் பொற்றோர்களுக்கு இடையில்மாணவர்களுடையபாதுகாப்புத்தொடர்பில்சந்திப்புகள் இடம்பெற்றன. அந்தச் சந்திப்புக்களில் பொலித்தீனால் தயாரிக்கப்பட்ட புத்தகப் பையைப் பயன்படுத்துவது என்ற கருத்துக்களும் பகிரப்பட்டன. பாடசாலை செல்லும் மாணவர்களும் ஆசிரியர்களும் பாதுகாப்புக் கருதிப் படையினர், பொலிஸாரின் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். நகரப்பாடசாலைகளின் சில மாணவர்கள் பொலித்தின் பையில் தயாரிக்கப்பட்ட பையைப் பாடசாலைக்குக் கொண்டு சென்றிருந்தனர். அந்தப் பைகளுக்குள் இருப்பது இலகுவில் வெளியே தெரிவதால் அந்த மாணவர்கள் மத்தியில் சோதனை தளர்த்தப்பட்டது. அதைப் பார்த்த சக மாணவர்கள், ஆசிரியர்கள் தாமும் அது போன்ற பைகளை வாங்கிப் பாடசாலைக்குள் கொண்டு சென்றனர். இப்படியாகப் பொலித்தீன் பை, மாணவர்கள் விரும்பும் ஒரு பொருளாக உருவாகிற்று.

**பொலித்தீன் தடையும் விற்பனையும்**


தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் ஈடுபட்ட குண்டு தாரிகள் துணியில் தயாரிக்கப்பட்ட மூடிய பைகளைத் தோளில் சுமந்து சென்றே குண்டுகளை வெடிக்கவைத்தனர். அந்தத் தாக்குதல்களை அடுத்து அவசர காலச் சட்டம் கொண்டுவரப்பட்டுச் சோதனைகள்பலப்படுத்தப்பட்டன. மக்கள் கொண்டுசெல்லும், பைகள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. மேலும் குண்டுகள் வெடிக்காமல்இருப்பதற்கு, முற்கூட்டியேஅவற்றைப்பிடிப்பதற்கே இவ்வாறுபைகள்கடுமையாகசோதனைக்குஉட்படுத்தப்படுகின்றன என்று அரசு அறிவித்தது. ஒரு கட்டத்தில் முடியுமானவரை பைகளைக் கொண்டு செல்வதைத் தவிர்க்குமாறு அரசு அறிவித்தது. பதிலாகப் படையினருக்கு உதவியாக பைக்குள் உள்ளே இருக்கும் பொருள்கள் வெளியில் தெரிவது போன்ற பைகளைப் பயன்பத்துமாறும் அறிவித்தது. இதனால் தற்போது மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தடைசெய்யப்பட்ட பொருளாக அறிவிக்கப்பட்டிருந்தது இந்தப் பொலித்தின். இன்று அது பாதுகாப்பு என்ற பெயரில் இளம் சமூதாயத்தின் மூலமாக மீண்டும் பாவனைப் பொருளாக மாற்றப்பட்டுள்ளது. சுற்றுச் சூழலுக்குப் பெரும் அச்சுறுத்தல் என்று ஆராயப்பட்டு, தடை விதிக்கப்பட்டிருந்த அதே பொலித்தீனை

(24 ஆம் பக்கம் பார்க்க)








■ தாஸ் மாஸ்ரர்

# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

49




வடக்கு - கிழக்கில் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் பெரிய ளவில் தாக்குதல்கள் நடைபெற்று இராணுவத்தினர் அதிகளவு இறந்த செய்தி எட்டும் போது சிறைச்சாலைக்குள் இருப்பவர்கள் மிகுந்த பயத்துடன் தான் காலந்தள்ள வேண்டியிருக்கும்.

எம்மில் எல்லோரும் வென்று விடவேண்டும் என உற்சாகப்படுத்தினோம். இறுதியில் பவன் என்பவன் (அவனுக்கு அந்த நேரம் கடுமையான காய்ச்சல்) உச்சியில் இருந்த கொடியைக் கைப்பற்றினான். எமது ஊர்களில் நடக்கும் விளையாட்டுக்கள் ஞாபகத்தில் வந்து போயின. அன்று மாலையில் நடைபெற்ற விநோத உடைப் போட்டி சுவாரஸ்யமாக இருந்தது. மட்டக்களப்பு - போரதீவைச் சேர்ந்த பாபா என்பவர், கைதிகளைப் பார்வையிடுவத்காகச் சிறைச்சாலைக்கு வருகின்ற ஐ.சி.ஆர்.சிப் பிரதிநிதியான லிண்டா அம்மணியைப் போன்று வேடமிட்டு நடித்து அனைவரையும் கவர்ந்தார். ஒரு குடும்பம் அகதியாக அலைவதைப் போல தாயாக றொபேட் என்பவரும், தந்தையாக மன்னாரைச் சேர்ந்த அம்பலவானர் என்பவரும், மகளாகச் சங்கர் என்பவரும், மௌலவி ஆக வேங்கடேஸ்வரா ஐயரும், பிக்குவாக வவுனியாவைச் சேர்ந்த ஒருவரும் பாதிரியாக இன்னொருவரும் வேடம் ஏற்றுச் சமாதானத்தை வலியுறுத்தி இருந்தனர். அந்தக் குழுவினருக்கே முதற்பரிசு கிடைத்தது.

⊛ ⊛ ⊛ ⊛

மாலையில் பரிசில் வழங்கும் வைபவம் நடைபெற்றது. காலி நகரக் கடைகளில் பல்வேறு வகையான பரிசுப் பொருள்களைக் கைதிகளின் விளையாட்டுப் போட்டிக்காக கேட்டிருந்தபோது அந்தப் பகுதி வர்த்தகர்கால் சிறந்த பரிசுப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்ததாகவும், சிறைச்சாலை அத்தியட்சகர் அப்புவாராய்ச்சி என்பவர் பூசாச் சிறையிலிருந்து மாற்றலாகிப் போக இருப்பதாகவும் எமக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அன்று காலையில் விளையாட்டுப் போட்டிக்காக ஒலிபெருக்கி கொண்டு வரப்பட்டபோதிலும் அந்த ஒலிபெருக்கியைப் பயன்படுத்தாமல் திருப்பிக் கொண்டு போனார்கள். அதில் ஏதோ பழுது என்று சொன்னார்கள். பின்னர் தான் அறியவந்தது. தீச்சுவாலை (அக்கினிகெல) இராணுவ நடவடிக்கை காரணமாகச் சாவடைந்த தென்பகுதி இராணுவத்தினரின் நூற்றுக்கு மேற்பட்ட சடலங்களைப் பூஸா சிறைச்சாலைக்கு அருகிலுள்ள இராணுவ முகாமுக்குக் கொண்டுவந்து, அங்கிருந்து தென்னிலங்கையிலுள்ள அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டிருந்ததாகவும். இதனால் சோகமயப்பட்டிருந்த அயல் பகுதிகளை ஒலிபெருக்கியை ஒலிக்க விட்டுச் சங்கடத்தில் ஆழ்த்துவதைத் தவிர்ப்பதற்காகவே ஒலிபெருக்கியைத் தவிர்த்தமை.

⊛ ⊛ ⊛ ⊛

பணியிடம் மாற்றலாகிப் போகின்ற அத்தியட்சகர் அப்பு ஆராய்ச்சி பேசும்போது, "நீங்கள் அனைவரும் ஏதோ காரணங்களுக்காக இங்கு சிறை வைக்கப்பட்டுள்ளீர்கள். ஊங்கள் குடும்ப அங்கத்தவர்களைப் பிரிந்து இருக்கும் இந்தக் காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் உங்களை ஓரளவுக்காவது திருப்திப்படுத்தும். நீங்கள் அனைவரும் விரைவில் விடுதலையாகிச் சமூக வாழ்வில் ஈடுபட வேண்டும்" என்று வாழ்த்தினார்.

வடக்குக் கிழக்கில் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் பெரியளவில் தாக்குதல்கள் நடைபெற்று இராணுவத்தினர் அதிகளவு இறந்த செய்தி எட்டும்போது சிறைச்சாலைக்குள் இருப்பவர்கள் மிகுந்த பயத்துடன் தான் காலந்தள்ள வேண்டியிருக்கும்.

எவ்வளவுதான் பாதுகாப்பு உத்தரவாதமிருப்பினும் நடைமுறையில் சாத்தியப்படுமா? என்ற கேள்வி கைதிகள் மத்தியில் எழத்தான் செய்கிறது. இவ்வாறான நெருக்கடி நிலையில் அத்துமீறிச் செயற்படும் அளவுக்கு சிறைச்சாலை ஊழியர்கள் துணியாதற்குக் காரணம் பிரபாகரன் என்ற தனி மனிதர் மீது இருக்கும் பயம் என்பதையும் உணர முடிந்தது. கைதிகள் அழிக்கப்பட்டால் தாமும் அழிக்கப்படுவோம் என்ற பயம் அவர்களை இந்தச் சந்தர்ப்பங்களில் கைதிகளைத் தகாத வார்த்தைகளால் திட்டுவதுடன் மட்டுப்படுத்தப்படுகிறது...

(தொடரும்)

# புத்த பகவான்



காலத்தை வென்ற கௌதம புத்தர்
அருள்நெறி கூறிய அன்பரசர்
அஞ்ஞானம் அகற்றிய அவதார புருஷர்

இந்திய மண்ணில் தோன்றிய இறைவனார்
போதனைகள் கூறிய போதி மாதவர்
மாந்தர் குறை தீர்த்த மாணிக்கம்
மாயைகள் நீக்கிய மாண்புறு சீலர்
ஒழுக்கம் உணர்த்திய ஒப்பற்றவர்

நலிந்தவர் நலம் காத்து நன்மை புரிந்தவர்
ஒன்றே குலமென ஒற்றுமையை உணர்த்தியவர்
வறுமை பிணிகண்டு வருந்துயர் தீர்த்தவர்
துயர் துடைத்த சிறந்த உத்தமர்

துறவறம் கொண்ட இனிய தூயவர்
அவனி நல்வாழ்வு காண அவதரித்த மகான்
அன்னை தந்தையாக அனைவரையும் காப்பவர்

குறைவிலா வாழ்வு தந்த குணசீலர்
பாவங்கள் அகற்றிய பார் புகழாளர்
உண்மை நெறி காட்டி உயர்ந்தவர்
வற்றா இன்ப ஊற்றாய்த் திகழ்ந்தவர்
உலகை ஆளும் உயர் ஆசிய சுஜோதி

▌சிவரம்யா

# நோன்பு என்பது மாண்பு



நோன்பு எனும் புனித நாள்களில்
அல்லாஹ்சிந்தனைஉணர்ந்திடுவோம்

இறைவனுக்குக் களங்கம் செய்து
இயற்கை தனை மீறி
இளையவர் படை திரண்டு
இன்னல் செய்தனர்

கொடிய மனிதராய்
கொலைகள் செய்யத் துணிந்தவராய்
மனதில் வஞ்சகம் நிறைந்து
மதவெறி கொண்டு
கடமை புரிந்தனர்

அல்லாஹ்வின் பெயர் கூறி
அட்டூழியங்கள் செய்து
அறியாமையில் வாடி
அழுவது காதில் ஒலிக்கிறது

நாடு முழுவதும் துயருற்று
நாம் எல்லோரும் மனம்வாடி
அச்சம் நிறைந்து
இறைவனிம் முறையிடல் நீதியோ?

எல்லாம் வல்ல இறைவனே
பொய்யர்களைத் தூய்மையராக்கி
மெய்யுரைக்க வேண்டுகிறோம்

மேடை - 29

# அதியுயர் கொண்டத்து மேடைகள்

தையிட்டி. அ.இராசதுரை

**முழிசித் தளிசிக் கொண்டே, வழிக்கரையானின் வாசலில் வந்து கிலேசத்துடன் கொட்டுண்டு கொண்டிருந்த, அத்தனை வாழ்வா? சாவா இராணுவத் துருப்புகளையும், வரவேற்றுக் கொள்கின்றார்.**

சொல்ல வாய் மூட முன்னமாய்... கோவில் ஈசான மூலையில்... இரண்டு செல்கள்...! இந்தச் செல்லடியின் அதிர்வோடு, குளப்படி கண் முழித்து எல்லோரையும் பரவசமாய்ப் பார்த்துத் தள்ள... ஆர வாரச் சத்தங்கள்...

"எங்கடை வழிக்கரையான் ஒரு குறையும் வர விடான்...!வரவிடான்!"குருக்களையாவுக்குக்கலை வந்துவிட்டதுபோல் குளப்படிக்குத் தீர்த்தம் தெளிக்க, குளப்படிசிரித்துக் கொண்டுநிற்கிறான்...!

★★★★★

அதை யார் பார்த்தது? இதை யார் பார்த்தது? என்ற கணக்காய்...தென்மராட்சிப்பலாப்பழப்புகழ்சந்தோஷத்தார் முகத்தைக் கொஞ்சம் கடுவலாய் வைத்துக் கொண்டு, ஒரு வகை ஆவேசம் பிடித்தவராய்... கோலொன்றை விழுந்து கட்டியெடுக்க, அந்தப் பேமஸ் 'பொறஸ்ற்'றின் மரந் தடிகளையெல்லாம், முறித்தடுக்கு வதுபோல் அது வேலை செய்ய...

"ஹலோ...!" என்றசத்தம்...

சந்தோஷத்தார் கொஞ்சம் கடுவலான குரலில், தம்மை வெளிப்படுத்திக் காட்ட, திடீரென்று ஆள் மாறிச் சந்தோஷத்தாருக்குத் தேவையான பேர் வழியொன்று...., "உங்கையிருக்கிற உங்களுக்குத் தெரியவேணும்... இஞ்சை இந்தளவு சிவிலியன்களும் இருக்கினை எண்டு... பேந்தென்னத்துக்கு இப்ப கலக்கியடிக்கத் தொடங்கி..."

"அது நாங்க உந்த ரேஞ்சிலை ஒரு அற்றாய் போட இருக்கிறம்... அதுதான் அவ்வளவு சிவிலியன்களையும் சுறுக்காய்க் கிளியர் பண்ணுறதுக்காக..."

"என்னப்பனே! நீங்களறியாதது ஒண்டுமில்லைத் தானே! இஞ்சையிருக்கிற இந்தளவு சனமும் மிச்சம் குவிக்கா வாபஸ் பெறுகிற நேரம் பார்த்தா உங்கடையளைக் காட்ட இவ்வளவு அவதிப்படவேணும்...? ஊரிலை ஆள்கள் அடிக்கடி சொல்லுகிற பாஷை அடங்க முன்னம்..."

திடீரட்டியனவாய்... பெரும் அள்ளை கொள்ளை றூப் சுடன், றக் ஒன்று கோவிலடிக்கு வர செல்போன் கதைப்பும் கட் ஆகி விடுகிறது...

★★★★

ஒரு நல்ல காலத்துக்கு அரும்பொட்டில்... அருந்தப் பாய்... பொறெஸ்ற்றில் உள்ள சண்ணோடு செல்லடியைப் பற்றிக் கொஞ்சம் ஊன்றிக் கதைத்து, இங்கையிருக்கிற சனக்களுக்கொரு பெரிய ஆறுதலைத் தேடிவிட்டேன்என்றபெரியமனஆறுதலோடு,நின்று கொண்டிருந்த தென்மராட்சியார்செல்லடியின்பொல்லாத பீச்சல் பயத்தில், இங்காச்சோ அங்காச்சோ என்ற அகோர நிலையில், பெரிய கவுணாவத்தைக் கொலைக் களக் கிடாய்களாய்...

முழிசித் தளிசிக் கொண்டே, வழிக்கரையானின் வாசலில் வந்து கிலேசத்துடன் கொட்டுண்டு கொண்டிருந்த, அத்தனை வாழ்வா? சாவா இராணுவத் துருப்புகளையும், வரவேற்றுக் கொள்கின்றார்.

திடீரென்றுஅந்தளவுதுருப்புகளுக்கும்கொமாண்டர் போல்தலைமைதாங்கிவந்தும்விட்ட கேணல் ரஞ்சித் சில்வா தென்மராட்சியாருக்குப் பெரும் மதிப்புக் கொடுத்து, 'சேர்' போட்டுக் கூப்பிடவும், தென்மராட்சியார் விழுந்து கட்டி அவர் சயிற்றாக ஓடிப்போகவும் றக்கில் கொண்டு வந்த கதிரையில் இரண்டைத் தூக்கித் தென்மராட்சியாருக்கு, ஆசனமும் போடப்பட தென்மராட்சியார் தாம் பொறெஸ்ற்றொடு ரோக் பண்ணிக் கொண்டிருந்த அந்த ரைம் பார்த்துத்தான் நியாயப் பிரகாரமாய் றக்கில் வந்தும் சம்பவித்துவிட்ட ரஞ்சித் சில்வா, தம்முடைய மகன் ஒருர் பொறொஸ்றில்ஒருமுக்கியபொசிஷனில்இருப்பதையும் கூலாக அறிந்து வைத்தும் கொண்டுதான்...

அந்த ஊகத்தில் ஏதாவது செல்லடி தொடர்பாய் சாடைமாடையாய்த் தட்டிப் பார்க்கத்தான் என்ற, கணக்காய்... ஒரு பகிடியும் வெற்றியும் கணக்காய்... அதே ஐயிற்றத்தைத்தாள் அந்தப் படியவே அசால்டாய்க் கேட்டும் விடுகிறார்...

(தொடரும்)





---

பியதர்சன்

# பத்தாண்டுகளாகியும் அழியாத சோகம்!


வெயில் வாட்டியது
மழை நீர் பங்கர் நிறைத்தது
முள்ளி வாய்க்காலுக்குள் முடக்கப்பட்ட
எம்மை இயற்கையும், இராணுவமும்
சேர்ந்தே வதைத்தன...

கடினத் தரையும் அதில்
படந்து வளர்ந்த முட்செடிகளும்
மணல் கும்பிகளும்
அதில் சூடு பரப்பிய வெயிலும்
பெய்த மழையில்
எம்மைத் தத்தளிக்க வைத்தன...

செத்த பாம்பை அடிப்பதைப்போல்
சோர்ந்து மடிந்து ஓலம் எழுப்பிய
எமது உடல்களைத் துரத்தித் துரத்திக்
கொன்று குவித்தன இராணுவக் குண்டுகள்
பத்தாண்டுகளில்
மறக்கக் கூடியவையா?
உயிர் வாழும் காலம் வரை
அழியாத படிமங்கள்
தலைமுறை தாண்டிய தமிழர்
வாழ்வில் ஆழப் படிந்த
துன்பியல் உச்சங்கள்
சந்ததிதோறும் ஆழுதாற்றும்
சேமிப்பாகச் சேர்த்து வைத்த
துயரங்கள்
எத்தனை பத்தாண்டுகளானாலும்
அழியாத சோகம் அது...








சலிப்பு

பொலிஸ் வேலைக்குச் சேர்ந்து ரவுடிகளைஒழிக்கவேண்டும்என்பதற்காக உடற்பயிற்சி செய்து உடலை கட்டமைக்கிறார்அதர்வா.எதிர்பார்த்தபடியேஅவருக்குப் பொலிஸ் வேலை கிடைக்கிறது. மிகுந்த ஆர்வத்தோடு பணியில் சேரும் அவருக்கு, கட்டுப்பாட்டு அறைக்கு வரும் தொலைபேசி அழைப்புகளை விசாரிக்கும் பணி ஒதுக்கப்படுகிறது.

கனவு தகர்ந்து, மனம் தளரும் அதர்வாவை மூத்த பொலிஸ் அதிகாரி ராதாரவி சமாதானம் செய்கிறார். இந்த நிலையில், கட்டுப் பாட்டு அறையில் அதர்வாவுக்கு வரும்100ஆவது அழைப்புதிருப்புமுனையாக அமைகிறது. அதைத் தொடர்ந்து போதைப் பொருள் விற்பனை, மாணவிகள் கடத்தல் என விறு விறுப்பான தடத்தில் படம் பயணிக்கிறது. கடத்தப்பட்ட மாணவிகள் காப்பாற்றப்பட்டனரா? வில்லனை அதர்வா என்ன செய்கிறார் என்பது மீதிக்கதை.

**பாத்திரங்கள்**

உடலை முறுக்கேற்றி, மிடுக்கான இளம் பொலிஸ் அதிகாரியாக நடித்திருக்கிறார் அதர்வா. கதாநாயகி ஹன்சிகா மோத்வானி, துணை நடிகையைப் போல ஓரிரு காட்சிகளில் மட்டுமே வந்து செல்கிறார். அவரைவிட, அதர்வாநண்பனின்தங்கையாகவரும்ஹரிஜாஅதிகம் கவர்கிறார். போதைப் பொருள் கடத்துபவராக மைம் கோபி. பொலிஸ் ஆணையாளரான ஆடுகளம் நரேனுக்கு அறிவுரை கூறும் வழக்கமான கதாபாத்திரம். மூத்த பொலிஸ் அதிகாரியாக வரும் ராதாரவி, அனுபவ நடிப்பை வெளிப்படுத்துகிறார்.

தான் ஏன் பிஸ்டல் பெருமாள் ஆனேன் என விளக்கும் காட்சிகளில்நெகிழவைக்கிறார்.யோகிபாபுநகைச்சுவையால் சில இடங்களில் சிரிக்க வைக்கிறார். அதர்வாவின் நண்பனாக இயல்பாக நடித்துள்ளார் தயாரிப்பாளர் மகேஷ். சமீபத்தில் மறைந்த நாடக நடிகர் சீனு மோகனுக்கு, படம் முழுக்க மைம் கோபியின் முதன்மை உதவியாளராக வரும் பாத்திரம்.

**இசை, ஒளிப்பதிவு**

சாம்சி.எஸ்.பின்னணிஇசை.குற்றவாளிகளைவிரட்டும் காட்சிகளில் பரபரப்பைக் கூட்டுகிறது. பாடல்கள் மனதில் நிற்கவில்லை. கிருஷ்ணன் வசந்த் ஒளிப்பதிவு, விறுவிறுப்புப் படத்துக்கு ஏற்ற அளவில் உள்ளது. திரைக்கதையில் திருத்தங்களைச் செய்து, விறுவிறுப்பைக் கூட்ட வேண்டியதையும் உணர்த்துகிறது.

**பலம் - பலவீனம்**


கட்டுப்பாட்டுஅறைஎன்றபுதியகளத்தை இயக்குநர்சாம் அண்ரன் தெரிவு செய்தமை கவனம் ஈர்க்கிறது. உதவி நாடிப் பொது மக்களிடம் இருந்து வரும் அழைப்புகளை, கட்டுப்பாட்டு அறைப் பொலிஸார் எப்படிக் கையாள்கின்றனர் என்பதை விரிவாகக் காட்டியிருப்பது இரசிக்க வைக்கிறது. எடுத்த களம் வித்தியாசமாக இருந்தாலும், திரைக்கதை வலுவாக இல்லாமல் ஆங்காங்கே துண்டு களாகிவிடுவதால் அதர்வாவின் ஆக்ரோஷமும், சண்டைக் காட்சிகளும் எடுபடவில்லை. இடைவேளை வரை வரும் பெரும்பாலான காட்சிகள் எளிதில் ஊகிக்கக்கூடியதாகவே நகர்கின்றன.

2ஆம்பாதியில்வரும்எதிர்பாராததிருப்பங்களிலும்சுவாரஸ்யம் இல்லை. வில்லன் யார் எனக் கடைசியில் காட்டும்போதுபார்வையாளர்கள்அதிர்ந்து போகும் வகையில் காட்சிகளைக் கட்டமைத்திருக்கலாம்.

அப்படியின்றி வசனங்கள், அதிரடி இசையால் ஒப்பேற்ற முயற்சித் துள்ளனர். வில்லன் ஏன் அவ்வளவு கொடூரமானவராக மாறினார் என்பதற்கான பின்னணியும் சொல்லப்படவில்லை. போதை கடத்தல் பேர்வழிக்கு பொலிஸ் அதிகாரியான அன்வர் உதவுவது. வன்கொடுமை, கடத்தல் எனக் கிடைத்த எல்லாவற்றையும் மேலோட்டமாகவே கையாண் டுள்ளனர்.

# அயோக்யா

சற்றே சமூக அக்கறை




தெலுங்கில் வெளியான 'டெம்பர்' என்ற படத்துடையமறுஆக்கம்தான் இந்த 'அயோக்யா'. தமிழில்இயக்கியிருக்கிறார்வெங்கட்மோகன். உலகில்பிறக்கும்ஒவ்வோர்உயிருக்கும் ஒரு கடமை இருக்கிறது என்று தலைப்பிட்டு விடுகிறார்கள். அந்தக் கடமையைச் செய்து காட்ட எந்த எல்லைக்கு நாயகன் செல்கிறார் என்பதை உரக்கப் பேசுகிறது படம்.

**கதை**

இந்தியாவின் சென்னை நகரில் நீலாங்கரைஎனும்பகுதியில்போதைப்பொருள், ஆள்கடத்தல்,சொத்துக்களைஅபகரிப்பது எனச் சட்ட விரோதமான செயல்களைச் செய்துவருகிறார் காளிராஜன் (பார்த்திபன்).தன்னைஎதிர்த்துக்கேள்விகேட்காத ஒருபொலிஸ்அதிகாரியேதனது பகுதிக்கு நியமிக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறார். அந்த இடத்துக்கு எப்போதும் பணத்தாசைபிடித்தகர்ணனை(விஷால்) அமைச்சர்ஒருவரின்உதவியுடன்கொண்டுவருகிறார். பார்த்திபனுடன் விஷால் கைகோர்க்க ஈவு இரக்கம் இன்றி எல்லாக் காரியங்களும் நடந்தேறுகின்றன. ஒருகட்டத்தில் பார்த்திபனின் தம்பிகளால் ஓர் இளம்பெண் கொடூரமான முறையில் பாலியல்வன்புணர்வுசெய்யப்பட்டுகொல்லப்படுகிறார். அந்த வழக்கை எதிர்கொள்ளும் விஷால், தனது காதலியின் மனம் கவரவேண்டி நல்ல பெலிஸாக மாறுகிறார். இதனால்பார்த்திபனுடன்விரோதம் ஏற்படுகிறது. தனது தம்பிகளைக் காப்பாற்றவிஷாலுடன்பார்த்திபன்மல்லுக்கட்டுகிறார். இந்தப் போட்டியில் யார் வென்றார்கள் என் பதை ஒரு திருப்பமான இறுதிக் காட்சியுடன் பேசுகிறது படம்.

**பாத்திரங்கள்**

சமூகத்தால் நிராகரிக்கப்பட்ட ஆதரவற்ற சிறுவனாகத் தொடங்கி, சுய நலத்தின் உச்சமாகி, பணவெறியில் அலைந்து திரியும் பாத்திரத்தில் விஷால் கச்சிதம். நான் அயோக்கியன்தான் என்று விளக்கம் கொடுக்கும் இடத்திலும், மனமாற்றத்துக்குப் பிறகு தடுமாறும் இடத்திலும் நன்றாக நடித்திருக்கிறார். சில இடங்களில் அவருடைய மிகை நடிப்பு சற்றே எரிச்சலைக் கூட்டினாலும், பெலிஸ்க்கே உரிய அவருடைய மிடுக்கான தோற்றம் இரசிக்க வைக்கிறது. படத்தின் நாயகி ராஷி கண்ணா அழகுப்பதுமையாக வந்துபோகிறார். எப்போதும் குடிப்பது, சுற்றிலும் அடியாட்கள்எனவழக்கமானவில்லனாக வருகிறார்பார்த்திபன். அவருடையவழக்கமானஉடல்மொழிபடத்தில்தவறுகிறது. தலைமைப் பொலிஸ் அதிகாரியாகக் கே.எஸ்.ரவிகுமார் நடிப்பில் கவர்கிறார். விஷால் நல்லவராக மாறிய பிறகு அவர் அடிக்கும் சல்யூட் ரசிக்க வைக்கிறது.

திருடனாகஇரண்டுகாட்சிகளில்வந்துபோகிறார்யோகிபாபு. ராதாரவி, சச்சு, ஆனந்த்ராஜ், தேவ தர்ஷினி, 'ஆடுகளம்' நரேன், பூஜாதேவரியா என நட்சத்திரப் பட்டாளங்கள் இருந்தாலும் நடிப்பை வெளிப்படுத்த வாய்ப்புகள் இல்லை.

**இசை, ஒளிப்பதிவு,**

பின்னணி இசையில் சாம்.சி.எஸ். கவனம் கொள்கிறார். கார்த்திக் ஒளிப்பதிவில் குறைவைக்கவில்லை.

**பலம் - பலவீனம்**

ஓர் அவலமாக மாறிவிட்ட பாலியல் குரூரங்களை முன்னெடுத்துப் படத்தில் பேசியிருப்பது இயக்குநரின் சமூக அக்கறையை வெளிப்படுத்தி இருக்கிறது. படத்தின் முதல் பாதி, நாயகன் பிம்பத்தை தூக்கியபடி திரைக்கதை நகர்கிறது. ஆனால், அதை அலுப்பூட்டாமல் படமாக்கிய விதத்தில் இயக்குநர் வெங்கட் மோகன் வெற்றி பெற்றிருக்கிறார். பார்த்திபன் செய்யும் முறையற்ற எல்லா வேலைகளுக்கும் வீஷால் துணையாக இருக்கிறார். அடாவடி செய்கிறார். ஆனால், கடிவாளம் இல்லாத குதிரையாக, பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு இத்தனை வானளாவிய அதிகாரமா? என மனதில் கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. இல்லாத ஆதாரத்தை நீதிமன்றத்துக்கு விஷால் எப்படி கொண்டு வரப் போகிறார் என்ற பரபரப்பை அழகாகவே காட்சிப்படுத்தி இருக்கிறார் இயக்குநர். ஆனால், ''உங்களால் தூக்குத் தண்டனை வழங்க முடியுமா?" என்று நீதிபதிகளைப் பார்த்து நாயகன் கேட்பதும், அதன்படியே தீர்ப்பு எழுதப்படுவதும் அபத்தம். ஊகிக்க முடியாத ஒரு திருப்பத்தின் மூலம் இறுதிக் காட்சியை நிறைவு செய்திருப்பது படத்துக்குப் பலம். பணத்துக்காக எதையும் செய்ய அஞ்சாத விஷால், பாலியல் குரூரத்துக்காக மட்டும் மனம் மாறுவதாகக் காட்டும் காட்சிகள் நம்பும்படியாக இல்லை. விஷால், பார்த்திபன் பிரிவில் காட்டப்படும் காட்சிகளிலும் புதுமை இல்லை.

அதுவழக்கமானதமிழ்சினிமாப்போக்கு. கூட்டு வன்புணர்வில் ஈடுபடுவோருக்கு தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் அதை உடனுக்குடன் வழங்க வேண்டும் என்ற ஒற்றை வரியில் படம் உயர்ந்து நின்றாலும் வழக்கமான தமிழ் சினிமாவே இந்தப் படமும்.

## தடுமாற்றம்






சிறு வயதிலிருந்து நண்பர்களாக இருக்கும் மூன்று பேருக்கிடையில்காதல்காரணமாகஏற்படும்பிரச்சினைகளை நகைச்சுவையுடன் சொல்ல முயன்றிருக்கிறார் இயக்குநர் சிவா அரவிந்த். சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியான கப்பல் என்ற திரைப்படத்தை ஞாபகப்படுத்துகிறது இந்தப்படம். ஆனால், அந்தப்படத்திலிருந்த சற்றுத்தெளிவான திரைக்கதை இந்தப் படத்தில் இல்லை.

**கதை**

கவின், அருண்ராஜா, ராஜு ஆகிய மூவரும் சிறுவயதிலிருந்து நண்பர்கள். பத்தாம்வகுப்புப்பரீட்சையின்போது ஒருவரை ஒருவர் பார்த்து எழுதுவதற்காகத் தன்னிடம் விடைத்தாளை வாங்கிய ஒரு பெண், அதைத் திருப்பித் தராததால்பரீட்சையில்தோல்வியடைகிறார்கவின். இதனால், பெண்களைநம்பக்கூடாது என்ற முடிவில் இருக்கிறார் கவின். இந்த நிலையில் நண்பர்கள் மூவரும் சேர்ந்து திருமண ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கின்ற நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கிறார்கள். அப்போது ரம்யா நம்பீசனைச் சந்திக்கும் அருண்ராஜா அவரைக் காதலிக்க ஆரம்பிக்கிறார். ஆனால், ரம்யா நம்பீசன் கவினைக் காதலிக்கிறார். இதனால் நண்பர்கள் பிரிகிறார்கள். ரம்யா நம்பீசனுக்கு எவருடன் திருமணம் நடந்தது? நண்பர்கள் இணைந்தார்களா என்பது மீதிக் கதை.

**பாத்திரங்கள்**

படத்தில்ஆங்காங்கேதலைகாட்டும்நகைச்சுவைவசனங்கள்தான்படத்தின் ஒரே சுவரஸ்யமான அம்சம். குறிப்பாக ராஜுவின் அப்பாவித்தனம் மிக்க வசனங்கள் இரசிக்கவைக்கின்றன. படம் முழுதும் வரும் இளவரசு, இரண்டு காட்சிகளில் வந்துவிட்டுக் காணாமல்போகும் மன்சூர் அலிகான், ராஜேந்திரன் ஆகியோர் அவர்கள் வரும் காட்சிகளில் இரசிக்கவைத்தாலும், திரைக்கதையில் ஒரு தொடர்ச்சியில்லாமல் இருப்பதால் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. படத்தில் மையப் பாத்திரமாக வரும் ரம்யா நம்பீசன், கொடுத்த பாத்திரத்தைச் சிறப்பாகவே செய்திருக்கிறார்.

**பலம் - பலவீனம்**

படத்தின் ஆரம்பத்தில் நண்பர்கள் தொழில் ஆரம்பிப்பது விரிவாகக் காட்டப்படுகிறது. படிக்காத மூன்று நண்பர்கள் தொழில்ஆரம்பித்துப்பணக்காரர்களாவதுதான்கதையோஎன்றுநினைக்கும்போதே, ரம்யாநம்பீசனை அறிமுகப்படுத்தி காதல், பாடல் என்று படம் வேறுதிசையில் செல்ல ஆரம்பிக்கிறது. இந்தத்தடுமாற்றம்தவிர, மிகவும் தளர்வான திரைக்கதையாகவும் தொலைக்காட்சி நாடகத்தைப் பார்க்கும் உணர்வையும் ஏற்படுத்துகிறது. சற்றேபடம்சுவாரஸ்யமாகநகரத் ஆரம்பிக்கும்போது, பாடல்கள் குறுக்கிடுகின்றன. பாடல்களைத்தவிர்த்துவிட்டு, திரைக்கதையில் இயக்குநர் கவனம் செலுத்தியிருந்தால் ஒரு நல்ல நகைச்சுவைத் திரைப்படமாவது கிடைத்திருக்கக்கூடும்.



## இழுத்தடிப்பு




கனா' படத்துக்குப் பிறகு சிவகார்த்திகேயன் நடித்திருக்கும் படம். 'வேலைக்காரன்' படத்துக்குப் பிறகு, நயன்தாராவுடன் இணைந்து நடித்த அடுத்த படம். 'பாஸ் என்கிற பாஸ்கரன்' படத்தை இயக்கிய எம். ராஜேஷ் இயக்கியிருக்கும் படம் இது.

**கதை**

மகிழுந்துக் காட்சியறை ஒன்றில் பணியாற்றும் மனோகர் (சிவகார்த்திகேயன்), எதிர்பாராதவிதமாகப் பிரபல தொலைக்காட்சித் தொடர் தயாரிப்பாளரான கீர்த்தனாவுடன் (நயன்தாரா) மோத நேர்கிறது. கீர்த்தனா திமிர் பிடித்த பெண்ணாக இருப்பதால் மனோகரைத் தொடர்ந்து அவமானப்படுத்துகிறார். அதனால் அவளைத் தொடர்ந்து வெறுப்பேற்றுகிறார் மனோகர். முடிவில் என்ன நடக்குமென்பதை ஊகிப்பது தமிழ் சினிமாவில் கடினமான காரியமல்ல.

அதாவது, திமிர்பிடித்த (படித்த, தன்னம்பிக்கைமிக்க, வேலைபார்க்கும் என்று புரிந்துகொள்க) பெண்களைஅடக்கி, ஒடுக்கிக்காதலிக்கவைத்து, திருமணம்செய்யும் கதை. அதிலும் அந்தப் பெண்ணும் சற்றுப் பதிலடி கொடுத்தால் இன்னும் சுவாரஸ்யமாகத் தோற்கடிக்கலாம் என்பதைச் சொல்கிறது.

**பலம் - பலவீனம்**

வழமையானகதைஆயினும்அவ்வளவுஇரசிக்கும்படியாகஇல்லை. நயன்தாரா ஒரு நிறுவன அதிபராகச் செய்யும் அதிரடிச் செயல்களும் அதை முறியடிப்பதற்குக் கதாநாயகன் செய்யும் செயல்களும் துளிகூட சுவாரஸ்யமாக இல்லை. கதாநாயகியின் அதிரடிச் செயற்பாடுகளுக்கான பதிலடி பல சமயங்களில் எதிர்பாராதவிதமாக, சுவாரஸ்யமே இல்லாத முறையில் நடந்து முடிகிறது.

தமிழ் சினிமாவில் வெற்றிகரமான கதாநாயகியான நயன்தாரா இப்படி ஒரு படத்தில் நடிக்க எப்படி ஒப்புக்கொண்டார் என்பது தெரியவில்லை. சிவகார்த்திகேயன் காதல் என்ற பெயரில் செய்யும் வித்தைகள் பல. ஆனால், கதாநாயகிக்கு வேறு வழியே இல்லை என்பதால் இப்படி ஒரு நபரையே கடைசியில் காதலிக்க வேண்டிய கட்டாயம். ஏன், வேறு ஒரு பணக்காரத் தொழிலதிபரைப் பார்த்துத் திருமணம் செய்யலாமே என்று கேட்லாம். அப்படி ஒரு தொழிலதிபரையும் கதாநாயகி சந்திக்கிறார்.

ஆனால், தமிழ் சினிமாவில் முன்பெப்போதும் சந்தித்திராத திருப்பம் ஏற்படுகிறது.

அதாவது, அந்த தொழிலதிபர் பெண்ணாக இருந்து ஆணாக மாறியவராகக் காட்டப்படுகிறார்.

படத்தொகுப்பிலும் பிரச்சனைகள் இருக்கின்றன. பல இடங்களில் கதாபாத்திரங்கள்முன்புநடந்ததாக சில சம்பவங்களைச் சொல்கின்றன. ஆனால், அவ்வாறு ஒரு வசனமோ, காட்சியோ படத்தில் முன்பு இருக்காததுகுழப்பத்தைஏற்படுத்துகிறது. ரோபோ சங்கர், யோகி பாபு, சதீஷ் ஆகியோர் இருந்தும் சில இடங்களில் மட்டுமே புன்னகைக்க முடிகிறது. அதிலும் ஆங்கிலத்தைத் தவறாகப் பேசுவதன் மூலம் செய்யும் நகைச்சுவையை இன்னும் எத்தனை காலத்துக்குக் கொண்டிழுக்கப்போகிறார் ராஜேஷ் எனத் தெரியவில்லை. அத்தோடு ஹிப்ஹாப் தமிழனின் 4 பாட்டுக்கள் வேறு. வேலைக்காரன், சீமராஜா எனச் சிவகார்த்திகேயனின் முந்தைய படங்களின் (வெற்றி பெறாத) வரிசையில் இந்தப் படமும் இணையும் என்று எதிர்பார்க்கலாம்.



## போர் நெருப்பில் சுவாசக்காற்று தமிழோசை - 01

தேவநாயகம் தேவானந்த்

# ஓசையிழந்த தமிழோசை


ஓசையிழந்து கிடக்கிறது தமிழோசை. அது தமிழ்கூறும்உலகெங்கும் வாழ்வின் ஓசையாய் ஒலித்துக் கொண்டிருந்த உயிர்மூச்சு. குறிப்பாக இலங்கைவாழ் தமிழர்களுக்கும் இலங்கைக்கு வெளியே புலம் பெயர்ந்து வாழ்ந்த தமிழர்களுக்கும் வாழ்வின் நாதமாக இருந்தது. இன்றும் தமிழோசையின் முகப்பிசை ஈழத்தவர்களின் காதுகளில் ரீங்காரித்துக் கொண்டிருக்கும். போர்க்காலத்தில்ஈழத்தமிழர்வாழ்வில்நம்பகமான ஒரே தகவல் மையமாகத் தமிழோசை விளங்கியது. போர்நெருப்பில் ஈழத்தவர்களின் சுவாசக் காற்றாகத் தமிழோசை விளங்கியது என்பது மிகையல்ல. ஒரு தேசம் தனது மக்களிடம் நம்பிக்கையிழக்கின்ற போது அந்தத் தேசம் தோல்வியடைந்த தேசமாகச் சுட்டப்படு கிறது. அவ்வாறான சூழலில் தேசத்தின் குரலாக ஒலிக்கின்ற அல்லது ஒலிக்க வேண்டிய வானொலி தனது நம்பகத் தன்மையை இழந்து விடுகின்ற அவலமும் நிகழும்.


### இலங்கை வானொலி ஓசையிழந்த அவலம்

தேசத்தை ஆளும் அதிகாரவர்க்கத்தின் ஊதுகுழலாக மட்டும் அரச வானொலிகள் ஓசைப்படுகின்றபோது மக்கள் மத்தியில் அவை ஓசையிழந்து போவது வழமை. இலங்கை விடுதலையடைந்ததுதொடக்கம்எண்பதுகள்வரை இலங்கைத்தமிழர்களையும்இந்தியத்தமிழர்களையும் ஆட்கொண்டு மக்களின் ஓசையாக இருந்த இலங்கை வானொலி தனது மக்களிடம் ஓசையிழந்த அவலம் நடந்தது எனலாம். ஈழப்போராட்டம்உக்கிரமடைய உக்கிரமடைய ஈழத்தவர் இலங்கை வானொலியிலிருந்து விலகிச்சென்றார்கள். குறிப்பாக வடக்குக் கிழக்கு வாழ் தமிழர்கள் அதிலிருந்து விலகிச் சென்றார்கள். உள்நாட்டுப்போர் உக்கிரமடைய இலங்கைத் தமிழ் மக்களிடமிருந்து இலங்கை அரச வானொலி ஓசையிழந்தது எனலாம்.

### பி.பி.சி. தமிழோசையின்பால் ஈர்க்கப்பட்ட மக்கள்

வானொலியே தகவலுக்கான இலகுவான மூலமாக இருந்த காலகட்டத்தில் மக்கள் ஏதோவொரு வானொலியை நாடிச் செல்லவேண்டியகட்டாயத்தை அன்றைய போர்ச் சூழல் தோற்றுவித்தது. அந்தச் சூழலில் மக்களின் நம்பிக்கைக்குரிய வானொலியாகப் பி.பி.சி. தமிழோசைவிளங்கியது. எண்பதுகள் தொடக்கம் ஈழத்தில் உள்நாட்டுப்போர் நிறைவடைந்த 2009ஆம்ஆண்டுவரையான காலம் வரை ஈழத்தவர் வாழ்வில்ஓர்அம்சமாகப்பி.பி.சியின் தமிழோசை இருந்திருக்கிறது.



> **தேசத்தைஆளும்அதிகாரவர்க்கத்தின்ஊதுகுழலாக மட்டும்அரசவானொலிகள்ஓசைப்படுகின்றபோது மக்கள் மத்தியில் அது ஓசையிழந்து போவதுவழமை. இலங்கைவிடுதலையடைந்தது தொடக்கம் எண்பதுகள் வரை இலங்கைத் தமிழர்களையும் இந்தியத் தமிழர்களையும்ஆட்கொண்டுமக்களின்ஓசையாகஇருந்த இலங்கை வானொலி தனது மக்களிடம் ஓசையிழந்த அவலம் நடந்தது எனலாம்.**

1983ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடந்த குண்டுத்தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட நடெங்கும் தமிழர்களுக்கெதிராகக்கலவரம்ஆரம்பமாகியது.

ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கிடப்பட்டது.அப்போதுயாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த சீமெந்துத் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் அகப்பட்டுக் கொண்டார்கள். தொழிற்சாலைக்கு வெளியே என்ன நடக்கிறதென்று அறியமுடியாத நிலை.

அப்போதுபி.பி.சிதமிழோசையை நம்பியே தாம் உள்ளிருந்ததாக அதில் அகப்பட்ட ஊடகவியலாளர் ஊரெழு கனகசூரியர் இன்றும் அதை நினைவு கூருகிறார்.

### தமிழோசை ஓசையிழந்தது பேரவலம்


இலங்கைக்காக ஆரம்பமாகி உலகத் தமிழர்களுக்காக ஒலித்துத் தனது 76ஆவது ஆண்டில் ஓசையிழந்ததமிழோசைஈழத்தவர்கள் பலரின் மனதில் இன்றும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. பி.பி.சி உலக சேவையின் மூத்த மொழிப் பிரிவுகளில் ஒன்றான பி.பி.சி. தமிழோசை ஓசையிழந்தது பேரவலம். ஈழத்தவர்களுக்கும் தமிழ்கூறும் நல்லுலகுக்கும் பேரிழப்பு. இருப்பினும்இன்றும்தமிழோசை துயர்படிந்த ஈழத்தவர்களின் ஒலிச் சாட்சியாகவே இருக்கிறது...

(தொடரும்)

*கட்டுரையாளர்: மக்கள் இதழியல் இயக்கம், யாழ்ப்பாணம் இலங்கை*

# மனிதம் மாண்டது

அதிரதன்



காலம் கிழித்துப் போட்ட
கலண்டர் கடதாசிகளை
கடினப்பட்டுப் பொறுக்குகின்றேன்

மூன்று தசாப்த வீர வரலாற்றின்
முடிவு அது!
மன்னிக்கவும்
அன்றைய முடிவு அது!

வீர மறவர்கள் விதையான நாள்
அன்று கண்ணீர்க் கடலைவிட
குருதிக் கடல் பெருக்கெடுத்து ஓடியது

மே பதினெட்டு

முள்ளிவாய்க்கால் எனும் முத்தான பகுதி
சிவன் எரித்த முப்புரமானது

ஆதிக்க அரசு
அந்தியர் உதவியோடு
அடக்குமுறையாக
அநீதி இழைத்தது

கறுப்பு விடியல்
கவலையுடன் புலர்ந்தது

வேங்கைகளுக்கும்
வேடாதாரி அரசுக்கும்
பெருஞ்சமர் நடந்தது

தாக்குதல் எனும் பெயரில்
அப்பாவி மக்களை
கொன்று குவித்தது பேரினப் படை

மக்களுக்கு முன் போர் விதிகளைக் கொன்றது
பச்சிளம் பாலகர் முதல்
முதியவர்கள் வரை ஈவிரக்கமின்றி
மாய்க்கப்பட்டனர்

வீர மறவர்களும் தாயகக் கனவுடன் சாவினைத் தழுவினர்
தாயகத் தாகம் ஆனாலும் அடங்காது...

பேரினவாத வெறியாட்டத்தில்
கண்முன்னே கருகின
உறவுகள்
அம்மணமானது எம்மினம்!
மனிதம் மாண்டது!

நடந்தன படுகொலைகள்
மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள்
ஆனால், மறைக்கப்பட்டு வருகிறது உண்மை
மறுக்கப்பட்டு வருகிறது நீதி

கறை படிந்த கறுப்பு நாள்
இன்று கண் முன்னே கிடக்கிறது...

# மறக்க முடியா ரணம்

■ சீதலட்சுமி

தசாப்தங்கள்
ஓடி மறைந்தன
அழியவில்லை ரணங்கள்
ஆற முடியா வலிகளுடன்
நகர்கின்றது காலம்

முள்ளி வாய்க்கால் மண்ணும்
நந்திக்கடல் உப்பு நீரும்
சிவந்த நாள்கள் அறிவீரா?

அகோரமாடிய இராணுவக் குண்டுகள்
கொன்றொழித்த கொடூரம் அறிவீரா?

அத்தனையும் பின்னர் மண்ணுக்குள்
புதைக்கப்பட்ட மர்மங்கள்தான் அறிவீரா?

எத்தனையோ இப்படியுண்டு
இடிகளாக
வெடிகளை வீசி எம்மைக் கொன்றொழித்த
கொடூரங்களை மறக்க மனம்
நினைக்காவும் மாட்டா...



# கந்தக வாசனை சுமந்த காற்று

■ சபேசன்

சுவாசக் காற்றின் தட்டுப்பாட்டுக் காலம் அது
முள்ளி வாய்க்காலுக்குள்ளும்
நந்திக்கடலுக்குள்ளும்
நாம் இறுக்கப்பட்ட நாள்கள் அவை

குறுகிய தேசத்தில்
குவிந்த எம்மைக் கொன்ற விதங்கள் பற்பல
உணவற்று
உறங்க இடமற்று
உடையற்று
அதற்குள் நாம் பட்ட பாடுகள்
இயேசு சிந்திய குருதியில் பன்மடங்கு

அருந்த நீரில்லை
உண்ண உணவில்லை
உடுத்த உடையில்லை
படுத்துறங்க நிலமில்லை


அந்தரமும் அவஸ்தைகளும்
துரத்திய கொடும் பொழுதுகள் அவை

இலவசமாய்க் கிடைக்கின்ற காற்றுக்கூட
நஞ்சு கலந்து வீசி எம்மைக் கொன்று
புதைத்த நாள்கள் அவை

கந்தகம் கலந்த காற்று
எம்மையெல்லாம் மெல்லக் கொன்ற
காலம் அது...

# இன, மத ஒற்றுமையை தேடி....!

■ செ.மகேஷ்



“கருத்து முரண்பாடுகள் நிறையவே வளர்க்கப்படும்போது எந்த வகையில் ஒற்றுமைப்படுவது?” என்று கேட்டார் சிவபாதத்தார்.

இன்றைய அமைதியற்ற சூழலை அமைதியின்றி அவதானித்ததால்சிவபாதத்தாரிடமிருந்துஇத்தகையதொரு வினா எழுந்ததாக எண்ணிக் கொண்ட செல்லத்தம்பியர். இன ரீதியாகவும், மதரீதியாகவும் பிரிவினைகளைஏற்படுத்திஏற்படுத்தியேமக்களைக்; குழப்பங்களுக்குள் வழிநடத்தும் பலரது முகம் அவரது மனத்தில் வேதனையை விளைவித்தது.

“ஒரு நாடு அதன் மக்கள் பிரிவினைகளால் ஆளப்படுவதற்கு வழி சமைத்தவர்கள் யார்? இதுதான் ஜனநாயகம் என்றும் பேசப்படுகிறதே?”


எண்ணியபோது இங்கு நிலவும் ஜனநாயகம் மீதிலேயும் சற்றுச் சந்தேகம் ஏற்படவே செய்தது. சிந்தனையுடன் ஓய்ந்து விடாமல் செல்லத்தம்பியர் வரலாற்றைப் புரட்டிப் பார்க்க விரும்பினார். ஆனால், அவ்வாறு சிறப்பான சிந்தனையோடு கூடிய மனப்பாங்கை உடையவனே சிறந்த அரசியல்வாதியும் ஜனநாயக வாதியுமாவான்.

நான் என்ற அகங்காரத்தைத் தொலைத்து நாம் என்றஒற்றுமைக்குள்ஒன்றிணைவதற்குஒவ்வொருவனும்முயல்வதற்குஎன்னசெய்யலாம்?செல்லத்தம்பியர் சிந்தித்தார்.

✦✦✦✦

‘ஏறச்சொன்னால்எருதுக்குக்கோபம்இறங்கச்சொன்னால்முடவனுக்குக்கோபம்’என்றவாக்கியம்வந்து வந்து அவரது சிந்தனையைக் குழப்பியது.

எதையும் வருமுன் காக்கும் பணிக்கு ஒன்றுபட்ட சிந்தனையும் செயற்பாடும் அவசியமாகும். ‘எரிகிற வீட்டில் பிடுங்குவது மிச்சம்’ என எதிர்பார்த்திருப்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள். ‘குட்டையைக் குழப்பி அதில் மீன் பிடிப்பவர்களும் இல்லாமலில்லை’ எதற்கும் மனித நேயமிக்க ஒற்றுமை அவசியம.;அனைத்துஇனங்களுக்கும், அனைத்து மதங்களுக்கும் இடையேயான ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ உரிமைகளும் மனித சுதந்திரமும் மனித நேயமும் பெருகும் வாய்ப்புக்களை எவ்வாறு உருவாக்கலாம்? செல்லத்தம்பியர்மீண்டும்மீண்டும் சிந்தனைக்குள் புதைந்தே கிடந்தார்



## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி



நடந்தவைகளை எண்ணி அதன் மூலம் கற்றுக் கொண்ட பாடங்களைப் புரிந்து கொண்டுநியாயமாகச்செயற்படுவதற்குப் பதிலாக மக்களை மனித நேயமற்ற தவறானவழிகளுக்குஇழுத்துச்செல்பவர்கள் அநேகர் இன்று தோன்றிவிட்டதாகவே செல்லத்தம்பியர் எண்ணினார். தவறுகளை ஏற்றுக் கொண்டு திருந்துவதற்குப் பதிலாக அதனுடன் முட்டி மோதித் தமது செய்கைகளுக்குநியாயம்கற்பிப்பதையே வழக்கமாகக்கொண்டிருப்பவர்களைஎவ்வாறு திருத்துவது? அவர் மனதில் கேள்விகளே நீண்டன.

✦✦✦✦

மனிதநேயமுள்ளநல்லசிந்தனைகளோடு அரசியலுக்கு அன்று வந்த பலர் இப்பொழுது தலைகீழாக நடந்து போவது போலவும் தெரிகிறது. உண்மைகள் மறைக்கப்படுவதன் மூலம் நியாயங்கள் தோன்றிவிடுவதில்லை.


ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவன் அதே வேளைஅடுத்தவனைப்பாதிக்காதவகையில்சிந்தித்தலும், அதற்கேற்பத்தனதுசெயலொழுங்கைத்திட்டமிடலும், செயலாற்றுதலும் அவசியமாகும். அதுவே ஒற்றுமையமானவாழ்தலுக்குவழிகாட்டும்.இதுவே செல்லத்தம்பியரின் முடிவாகும்.

அரசியல்வாதிகள்ஆட்சியைக்கைப்பற்றுவதில்காட்டும் அக்கறைக்கும் மேலானதாக ஆட்சியைத் திறம்படநடத்திமக்களைஒற்றுமைப்படுத்திமுன்னெடுத்துச் செல்லச்சிந்திப்பதில்லை.

இவற்றையாரிடம்எவ்வாறுசொல்லலாம்என்பதையும் அவரால் தீர்மானிக்க இயலவில்லை.

எல்லாமே தேர்தலை நோக்கியதான ஜனநாயகமாகவே பார்க்கத் தூண்டும் வார்த்தைகளாகவும் செயல்களாகவுமே தோன்றின. இவை எதையும் சிந்தனையில்கொள்ளாதுநாளாந்தவாழ்க்கையை அமைதியாக முன்னெடுக்க ஆவலுறும், அல்லலுறும்பரிதாபமான மக்கள் கூட்டமோ செல்லத்தம்பியருக்கு வேதனைக்கு மேல் வேதனையை விளைவித்தது.

என்ன செய்யலாம்? இன, மத ஐக்கியம் அவசியமானதே! மௌனமே அவருடைய சிந்தனைக்கு எல்லையிட்டது. அவர் வாயைத் திறக்கவேயில்லை. ■



# இந்த வாரம்

**19.05.2019 முதல் 25.05.2019 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

ராகு, செவ்வாய், குரு, சுக்கிரன் அளப்பரிய நற்பலன் வழங்குவர். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். நற்பெயரும்,புகழும்தேடிவரும். வாகனத்தின்பயன்பாடு அளவுடன் இருக்கும். பிள்ளைகள் படிப்பு மற்றும் வேலையில் சிறந்து விளங்குவர். நோய் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியம் மேம்படும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடக்கும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து குடும்ப நலன் பேணுவார். தொழில் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணியாளர்கள் தங்கள் பணிசார்ந்த தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வர்.

## இடபம்

சுக்கிரன், சந்திரன் ஓரளவு அனுகூல பலன் தருவர். சுற்றுச்சூழல் உணர்ந்து பணிபுரிவீர்கள். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். வீடு வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகளின் செயல்பாடு சிறப்பாக அமைந்திட இதமாக வழி நடத்துங்கள். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவி குடும்ப ஒற்றுமைக்காக சில செயல்களை மேற்கொள்வார். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு அவசியம். புதியவர்களின் ஆதரவால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டங்களை பின்பற்றவும். பெண்கள் பிரார்த்தனை நிறை வேற இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர்.

## மிதுனம்

சுக்கிரன், குரு, சந்திரனால் வியக்கத்தகு நற்பலன் கிடைக்கும். புதிய யுக்தியுடன் பணிகளை துவங்குவீர்கள். சமூக நிகழ்வு இனிய அனுபவம் தரும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்; பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதல்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வர். குடும்பத்தில் சுபநிகழ்வு நடந்தேறும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு ஏற்படும். மனைவியின் செயல் பாராட்டும்படி அமைந்திடும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் பணவரவினால் சேமிப்பும் கூடும். மாணவர்களின் ஞாபகத்திறன் அதிகரித்து கல்வியில் சிறந்து விளங்குவர்.

## கடகம்

சூரியன், புதன், கேது, சனீஸ்வரரால் ஆதாய பலன் கிடைக்கும். திட்டமிட்ட செயல்களைபுதியமுயற்சியுடன்நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் அதிக அன்பு பாராட்டுவர். மனதில்மகிழ்ச்சிநிறைந்திருக்கும். அறிமுகமில்லாதவர்க்கு வீடு வாகனத்தில் இடம் தர வேண்டாம். பிள்ளைகள் படிப்பு செயல்திறனில் மேம்பட அதிக முயற்சி தேவைப்படும். பணவரவுக்கேற்ப செலவுகளும் அதிகரிக்கும். மனைவியின் ஆர்வமிகு செயல்களால் குளறுபடியாகலாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்துசெயல்படுவர். மாணவர்கள்படிப்பில்மட்டும்கவனம்செலுத்தவும்.

## சிங்கம்

பெரும்பான்மைகிரகங்கள்அனுகூல அமர்வில் உள்ளனர். பேச்சில் உண்மையும், சத்தியமும் நிறைந்திருக்கும். விலகிய உறவினர்கள் சொந்தம் பாராட்டுவர். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகள் பெற்றோர் சொல்லை வேதமென ஏற்று பின்பற்றுவர். நோய் தொந்தரவு குறையும். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவி விரும்பிக்கேட்ட பொருள்வாங்கித்தருவீர்கள். தொழில்வியாபாரத்தில் போட்டி குறைந்து ஆதாய பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். மாணவர்கள் நன்றாக படித்து நண்பர்க்கும் உதவுவர்.

## கன்னி

சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நற்பலன் கிடைக்கும். செயல்களில் சமயோசிதமாக ஈடுபட வேண்டும். நண்பர்களின் உதவி ஓரளவு கிடைக்கும். குடும்பத்திற்கான பணச்செலவு அதிகரிக்கும். வீடு வாகனத்தில் உரிய பாதுகாப்பு அவசியம். பிள்ளைகளின் செயல்களை கவனித்து வழி நடத்துங்கள். இஷ்டதெய்வ வழிபாடு சில நன்மைகளைத் தரும். மனைவி குடும்பநலன் சிறக்க நல்ல ஆலோசனை சொல்வார். வீட்டில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் ஏற்படும். தொழிலில் உற்பத்தி, பெண்கள் நகை இரவல் கொடுக்க வேண்டாம். மாணவர்கள் புதியவர்களுடன் நிதானித்து பழகவும்.

## துலாம்

புதன், கேது, சனீஸ்வரர், சந்திரனால் சுப பலன் ஏற்படும். சுமூகமான நிகழ்வுகள் மனதில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளியூர் பயணம் அதிகரிக்கும். பிள்ளைகளிடம் நல்ல சிந்தனைகள் வெளிப்படும்; படிப்பிலும் முன்னேறுவர். சத்தான உணவு உண்டு மகிழ்வீர்கள். ஆடம்பர செலவு செய்வதை தவிர்க்கவும். மனைவியின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரம் செழித்து லாபம் அதிகரிக்கும். உதவியை வழங்குவர். மாணவர்கள் பெற்றோரின் ஆலோசனையை மதித்து செயல்படுவர்.

## விருச்சிகம்

குரு, சந்திரன் மட்டுமே ஓரளவு நற்பலன் தருவர். செயல்களில் குளறுபடி வராமல் கவனம் கொள்ளவும். குடும்பத்தில் ஒற்றுமையை பேணிக்காத்திடுவீர். வீடு, வாகனத்தில் அதிக பாதுகாப்பு வேண்டும். பிள்ளைகள் விரும்பிய பொருள் தாராள பணச்செலவில் வாங்கித்தருவீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வதில் ஆர்வம் குறையலாம். மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை மதித்து செயல்படவும். மாணவர்கள் முயற்சியுடன் படித்தால் முன்னேறலாம்.

## தனுசு

சுக்கிரன், சூரியன், புதன், சந்திரனால் ராஜயோக பலன் கிடைக்கும். மனதில் தயக்கம் விலகி தைரியம் ஏற்படும். பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையால் மனக்குழப்பம் நீங்கி தெளிவு பெறுவர். அவமதித்தவர் வியந்து பாராட்டுவர். பூர்வ சொத்தில் பணவரவு ஏற்படும். புகைவரால் இருந்த தொந்தரவுகளை மாற்று உபாயத்தால் சரி செய்வீர்கள். மனைவியின் அன்பு, பாசம் மகிழ்ச்சியை தரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## மகரம்

சுக்கிரன், ராகு, செவ்வாய், சந்திரன் சுப பலன் வழங்குவர். மனதில் உத்வேகமும், செயல்களில் வசீகரமும் ஏற்படும். உறவினர்கள் நல்ல ஆலோசனை சொல்வர். குடும்பத்தில் சுபநிகழ்வு உண்டாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றுவீர்கள்; ஓரளவு பணம் சேமிக்கவும் செய்வீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். மனைவி குடும்பநலன் பேணிக்காத்திடுவார். தொழில், வியாபாரம் புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவில் வளரும். பணியாளர்களுக்கு நற்பெயரும், சலுகையும் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பருக்கும் உதவுவர்.

## கும்பம்

பெரும்பான்மை கிரகங்களால் தாராள நற்பலன் கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரின் உதவி எதிர் பார்த்த வகையில் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை சீராகும். திட்டமிட்டபடி புதிய வீடு, வாகனம் வாங்கலாம். பிள்ளைகள் கல்வி மற்றும் செயலாற்றலில் முன்னேற்றம் காண்பர். எதிரி சொந்த சிரமங்களால் இடம் மாறுவர். மனைவி வழி உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி புதிய சாதனையை ஏற்படுத்தும். பணியாளர்கள் சுறுசுறுப்பாக பணிபுரிவர்; சலுகையும் கிடைக்கும். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறி இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் புதிய முயற்சிகளில் இறங்குவர்.

## மீனம்

சூரியன், சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். மனதில் இரக்க சிந்தனை அதிகரிக்கும். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பூர்வ சொத்தில் பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகளின் குழப்பமான எண்ணங்களை சரிசெய்வீர்கள். சத்தான உணவு உண்டு மகிழ்வீர்கள். மனைவியின் அன்பும், பாசமும் மனதில் நம்பிக்கையை தரும். தொழில் வியாபாரத்தில் கடின உழைப்பு பணவரவை சீராக்கும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படுவர். பெண்கள் பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள்படிப்பில் அதிக கவனம் வேண்டும்..

# தென்கிழக்கு திசையில் இருந்து....



அனார்கலி



## கல்முனை மாநகரில்

கல்முனை மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்கிவரும் அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் மாலை ஐந்து மணியுடன் பிரத்தியேக வகுப்புக்களை நிறைவு செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. கல்முனை மாநகர மேயர் மூத்த சட்டத்தரணி ஏ.எம்.றகீப் இதற்கானபணிப்புரையைவிடுத்துள்ளதுடன் மாநகர சபைப் பிரிவில் இயங்கும் அனைத்துத் தனியார் கல்விநிலையங்களும் மாநகர சபையில் உடனடியாகப் பதிவு செய்யப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளார்.

**நாட்டு நிலையறிந்து செயற்படுவோம்**

## நிந்தவூரில் இராணுவ முகாம்

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய முஸ்லிம் பிரதேசமான நிந்தவூரில் திடீரெனத் தற்காலிக இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நிந்தவூரின் முதன்மை பள்ளிவாசலான ஜும்ஆ பள்ளிவாசல், முதன்மை நூலகமான அமீர் மேசா பொதுநூலகம் என்பவற்றை அண்டியதாகவும், நிந்தவூர் ஆதார மருத்துவமனை வீதியின் தொடக்கத்திலும் இந்த முகாம் அமையப் பெற்றுள்ளது. பொதுமக்களின் பாதுகாப்புக்கவே இந்த முகாம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் நிந்தவூர் மக்கள் அச்சமற்ற நிலையில் வாழ்வதற்கான சிறந்த சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமென அம்பாறைப் பிராந்திய இராணுவ கட்டளைத் தளபதி மேயர் ஜெனரல் மகிந்த முதலிகே தெரிவித்தார்.

**"காலம் செய்த கோலம் இது"**

## இப்படியும் ஓர் ஆதங்கம்

"சகோதர முஸ்லிம் மக்கள் மீது இன்று காட்டப்படும் கரிசனை, கருணை என்பன அன்று தமிழ் மக்கள் மீது காட்டப்படவே இல்லை" இப்படி அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு பிரதேச சபையின் சுயேச்சைக் குழு உறுப்பினர் ஆறுமுக பூபாலரட்ணம் தனது உள்ளார்ந்த ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

தனது காரைதீவு இல்லத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியபோது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். "இன்று முஸ்லிம் மக்கள் மீது காட்டப்படும் கரிசனையும் கருணையும் அன்றைய போர்ச் சூழலில் தமிழ்மக்களுக்குக்கிடைத்திருந்தால் முள்ளிவாய்க்கால் பேரவலத்தைக் கூட தவிர்த்து தடுத்து நிறுத்தியிருக்க முடியும் " எனவும் சுயேச்சை உறுப்பினர் பூபாலரட்ணம் மேலும் தெரிவித்தார்.

## சிறிதரனின் உரை

தமிழ் அரசியல் முக்கியஸ்தர்கள் சிலர் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலை தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் பெரும் வரவேற்பைப்பெற்றிருந்ததுடன் முஸ்லிம் மக்களுக்கும் பெரும் ஆறுதலாகவும் அமைந்திருந்தது. குறிப்பாக அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன், சுற்றுலாத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்த சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் முஸ்லிம் மக்கள் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் முஸ்லிம் புத்திஜீவிகள் மற்றும் பொது அமைப்புக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டதுடன் இதற்காக நன்றி உணர்வையும் வெளிப்படுத்தினர்.

"நாட்டில் தமிழர்கள் பட்ட அவலங்களும் வலிகளும் வேதனைகளும் சொல்லிலடங்காதவை. இப்பொழுது அதே துன்பங்களை முஸ்லிம் சகோதரர்கள் எதிர்கொள்கிறார்கள்" எனவும் அவர் சுட்டிக்காட்டிக் குரல் எழுப்பியிருந்தார்.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் பிரமுகர்களின் குரல்கள் சற்று மௌனித்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உட்படச் சில தமிழ்ப் பிரதிநிதிகள் முஸ்லிம் மக்களுக்காக குரல் எழுப்பி வருவது மனிதம் சாகவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டு எனவும் கொள்ள வேண்டும்.

"அன்று புத்தளம் பள்ளிவாசல் சம்பவத்தின்போது முஸ்லிம் அரசியல் தலைமைகள் மௌனித்திருக்க அமிர்தலிங்கமும் தமிழ் அரசுக் கட்சியுமே குரல் கொடுத்த வரலாற்றை மறந்திடலாமா?"



## தாமாகக் கண்டிக்கின்றனர்

"பயங்கரவாத அடிப்படைவாத நடவடிக்கைகளை முஸ்லிம் மக்கள் தாமாகவே கண்டிக்கின்ற ஒரு நிலைப்பாட்டிலிருப்பது மிகவும் சந்தோசம் தரும் விடயமாகும்"

இவ்வாறு உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார். கல்முனை பிரதேசசெயலகக்கேட்போர்கூடத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அரசு அரசமைப்பு ரீதியாக சில திருத்தங்களைச் செய்து மேலும் ஒரு படி மேல் சென்று குறிப்பாகத் தமிழ், முஸ்லிம் சிறுபான்மைமக்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்ற அடிப்படையில் இன்னும் பல அதிகாரங்களை வழங்க வேண்டுமென்ற முயற்சியை எடுத்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில்தான் பயங்கரவாத சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் அவர் மேலும் கூறனார்.



**என்றுதான் விடிவோ?**

## இனவாத விசமிகள்

"இனவாதவிசமிகளால் நாட்டின் பல முஸ்லிம் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட மிலேச்சத்தனமான கொடூர தாக்குதல் சம்பவங்கள் தொடராது அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. முஸ்லிம் பள்ளிவாசல்கள், முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள், உடமைகள் மீது தாக்குதல் நடத்தி காட்டு தர்பார் புரிந்துள்ள காடையகளை இனம் கண்டு உச்சபட்ச தண்டனைக்குள்ளாக்கவும் இந்தக் கும்பலை வழிநடத்தி அரசியல் இலாபம் தேட முனைந்துள்ளவர்களை அரசு இனம்காட்டவும் முன்வரவேண்டுமெனவும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

**தோலுரித்துக்காட்டுங்கள்**

## நன்றி நன்றி...!!

"தற்கொலைத் தீவிரவாத சக்தியை அழிப்பதற்கு உதவிய முஸ்லிம் மக்களுக்கு நன்றி பகிர நாம் கடமைப்பட்டுள்ளோம். பொதுமக்களின் உயிரைப் பாதுகாப்பது பொலிஸாரின் கடமையாகும்" இவ்வாறு கிழக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் கபில ஜெயசேகர கூறினார். கல்முனை பொலிஸ் தலைமையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பாக விளக்கமளிக்கும் ஒன்றுகூடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை ஆஸாத் பிளாஸா மண்டபத்தில் நடைபெற்ற இந்த ஒன்றுகூடலில் அவர் மேலும் உரையாற்றுகையில் ஒரு சிறு தீவிரவாதக்குழு செய்த தீய செயலால் நாட்டிலுள்ள சகல முஸ்லிம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கவலை வெளியிட்டார்.

**உண்மை யதார்த்தத்தைப் புரிந்து கொள்வோம்.**

# சுவிஸ் —17 எனும் அழகிய நாடு!



■ ஏ.ஜே.ஞானேந்திரன்




'பாசல் உலகம்' என்று அழைக்கப்பட்டு வருடா வருடம் இடம்பெறும் இந்தக்கண்காட்சியால் பெரிதும் கவரப்பட்டு நண்பர்களையும் அழைத்துக் கொண்டு அங்கு செல்வதுஎனதுவழமை. 45நாடுகளிலிருந்து. 2ஆயிரத்து 100 கண்காட்சியாளர்கள்2015ஆம்ஆண்டில்இங்கு கலந்துகொண்டார்கள்என்பதுஇதன் பிரமாண்டத்தை வெளிப்படுத்தும். கடந்த ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை இந்தக் கண்காட்சி பாசலிலுள்ள எழிலான கண்காட்சி மாடிக்கட்டடத்தில் இடம்பெற்றது. 2015ஆம் ஆண்டில் இந்த 6 நாள்களில் 94ஆயிரம் பார்வையாளர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டதாகக் கணித்துள்ளார்கள்.

### நூறு வருடங்கள் எனும் நீண்ட தொடர்ச்சி

இந்தக் கண்காட்சி 1917ஆம் ஆண்டில்தான்முதற்தடவையாகஆரம்பித்தது. இன்றைக்கு நூறு வருடங்களைத் தொட்டுவிட்ட பெருமையுடன் நடைபயில்கின்றது. அப்போதைய கண்காட்சி நிகழ்வுகளில் ஆபரணமும் கடிகாரமும் ஒரு பகுதியாக அமைந்தன.மெல்லமெல்லவளர்ந்த இந்தக் கண்காட்சி காலப்போக்கில், பாசல் என்ற பெயரோடும் நடக்கின்ற ஆண்டையும்ஒட்டிஅதுவேபெயராகவும் வழங்கப்படலாயிற்று. 'பாசல் 95' என்ற பெயரில் 1995ஆம் ஆண்டில் இடம்பெற்ற கண்காட்சியில், கடிகாரங்களும் ஆபரணங்களும் மாத்திரமே வைக்கப்பட்டன. இப்பொழுது கட்டடங்கள் அதிகரிக்கப்பட்டு, அதன் பிரமாண்டம் மனதைக் கொள்ளை கொள்கின்றது.என்றாலும்2018ஆம் ஆண்டு காட்சியாளர்கள் தொகை 650ஆக வீழ்ச்சி கண்டு, ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

### அதிக மக்கள் திரளும் காலம்

இந்தக்கண்காட்சியில்சுமாராக700 வேறுபட்ட நிறுவனங்களின் ஆடம்பர உற்பத்திப் பொருள்கள் கண்காட்சிக்குவைக்கப்படும்.உலகப்பிரமுகர்கள் பலர், விலையுர்ந்த ஆபரணக்கற்களில், நவீன சுவிஸ் கடிகாரங்களில் ஆர்வமுள்ளோர் என்று பல் வேறுநாட்டவர்இங்குவந்துதிரள்வர்.



பாசல்நகரம்இந்தநாள்களில் களை கட்டியிருக்கும். ரைன் நதிப் பாலம்நீளத்துக்குப்பல நாடுகளின் தேசியக் கொடிகளுடன், சுவிஸ் கொடியும் சேர்ந்து காற்றில் படபடத்து, வருக வருக என்று வரவேற்கும். சுற்று வட்டாரத்திலுள்ள ஹோட்டல்கள் எல்லாம் நிறைந்துவிடும். உணவகங்கள்வருவோரும் போவோருமாகக்கலகலக்கும்.சுருங்கச்சொல்வதானால், இந்த ஆறு நாள்களும் பாசலில் பெரும் திருவிழாக் கோலந்தான்!




### நுழைவுச்சீட்டுக்கான கட்டணம் அறிவீர்களா?

இந்தக் கண்காட்சிக்கான நுழைவுச் சீட்டின்விலையைஅறியஆசைப்படுகிறீர்களா? இங்குள்ள விலைகளை இலங்கைரூபாயில்சொல்லும்போது, அது எவரையுமே பயமுறுத்துவது இயல்பு! சுவிஸ் பிராங் ஒன்று கிட்டத்தட்ட 180 ரூபாவாக இருக்கும்போது, இங்குள்ளவிலைகள்எல்லாம்ஆனை விலை குதிரைவிலையாகவே ஒரு மாயையைத்தரும். ஒருநாள்நுழைவுக்கான அனுமதிச் சீட்டின் வில்ல 45சுவிஸ்பிராங்.அதாவதுகிட்டத்தட்ட 8ஆயிரம் ரூபாய்! ஆனால் இந்த 6 நாள்களுக்கும் பார்வையிடுவதற்கான ஒரு ரிக்கட்டை வாங்குவதானால்அது110சுவிஸ்பிராங்மட்டுமே! காலை 9 மணி தொடக்கம் மாலை 6மணி வரை இங்கே நீங்கள் சுற்றி வரலாம். பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சிறப்புச் சலுகைகளும் உண்டு.

(தொடரும்)

■ ஆணையூர்க் கவிராயர்

## அறிவியல் புரட்சி

மனித நாகரீகத்தை
ஆசைப் புயலின்
நித்திய தாண்டவத்துக்கு
இரை கொடுத்து
மன வெளியை
பகைமைத் தீயின்
சமுத்திரமாய் நிறைத்து
மானிட அறிவின்
ஒளிப்புலங்களை
இருட் கோலங்களாய்
சதா அச்சுறுத்தும்
அறியாமையின் கொடூரத்தில்
குளித்தெழும் குதூகலம்
இயற்கைத் தாயின் அக்கினிச்
சீற்றங்களால்
பொசுங்கும் மனித மனங்கள்
பயத்தின் தூதுவனாய்
நம்முள் முகை விரித்த
பக்தியில் நெடும் பயணம்
பிரசவித்த மதக் கோட்பாடுகள்!

ஓ மனிதா...!
விலை மதிப்பற்ற
சக மனிட உயிர்களை
வெளியெங்கும் பிய்த்தெறியும்
வெற்றிக் களிப்பில்
ஆயிரமாயிரம் ஆன்மாக்களின்
அவல ஓலம் உரசுவதை
புரியாத உணர்திறன்
உன்னுள் எப்படி?

போருக்கு அந்தியமான
இறை விசுவாசிகளின்
வாழ்வுக்கு குருதி வரிகளால்
முடிவுரை எழுதும்
கொடூரத்தை ஒரு கணம்
எண்ணும் மானிட இதயங்கள்
தம்முள் நிச்சயம் மனித சத்தி
வேள்வியில்
அறிவியல் புரட்சி அனலாய்
வெடிக்கும்



# பொலித்தீன்...



(14ஆம் பக்கத் தொடர்ச்சி)
இன்று மாணவர்கள் தங்களுடைய கல்விச் செயற்பாடுகளுக்காகத் தூக்கிச் சுமந்து செல்லும் நிலையை இந்த அரசு தோற்றுவித்துள்ளது .

**பொலித்தின் பை வியாபாரம் அமோகம்**

கைப்பை, தோளில் சுமக்கும் பை என்று பல ரகங்களில் இந்தப் பொலித்தீன் பைகள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றைக் கொள்வனவு செய்யும் பெற்றோர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. பொலித்தீன் புத்தகப்பை தான் வேண்டும் என்று மாணவர்கள், பெற்றோரை வற்புறுத்தும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. தாக்குதல்களின் பின்னர் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு அதிகரிக்கும் போதெல்லாம் கூடவே பொலித்தீனால் தயாரிக்கப்பட்ட புத்தகப் பைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அந்தப் பைகள் மாணவர்களுடைய புத்தகங்களின் பாரத்தைத் தாங்காது அறுந்து போகும் நிலையும் உருவாகின்றது. இதனால் மீண்டும் புதிய பையை வாங்குகின்றனர் பெற்றோர். சிலர் அந்தப் பையையே தாங்கள் வாங்கிய கடைக்குக் கொண்டு சென்று புதுப்பித்துக் கொள்கின்றனர். தாக்குதல் சம்பவங்கள் காரணமாகத் தொழில் நடவடிக்கைகள் இல்லாதிருந்த முஸ்லிம் வியாபாரிகள், சில தமிழர்கள் இந்த வியாபரத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.


மாணவர்கள் பொலித்தீனில் தயாரிக்கப்பட்ட புத்தகப் பைகளை மாத்திரம் பயன்படுத்தவில்லை. பிளாஸ்ரிக்கிலான உணவுப் பெட்டி, குடிதண்ணீர்ப் போத்தல், பிளாஸ்ரிக் பையில் கவரில் புத்தகங்களை வைத்துக் கொண்டுசெல்வது என்று பலதைப் பயன்படுத்துகின்றனர். தாக்குதல்களின் பின்னர் இப்படி ஒரு நாகரிகம் உருவாக்கப்பட்டுள்ளது.

**சூழல் பாதிப்படையாது பாதுகாப்பது எப்படி**

தாக்குதல்கள் காரணமாக முடங்கிப் போயுள்ள முஸ்லிம் வியாபாரிகளுக்கு இது ஒரு வாய்ப்பாகவே அமைந்துள்ளது என்பது வெளிப்பாடு. தடைசெய்யப்பட்ட பொலித்தீனை அவர்கள் வெளிக்கொணர்கிறார்கள் என்பது பிரச்சினையாகவே உள்ளது. இது தொடர்பாகச் சுற்றுச் சூழல் அதிகாரசபையின் யாழ்ப்பாண அலுவலகத்தின் பணிப்பாளரிடம் கேட்டபோது, அவர் சிலவிடையங்களை முன்வைத்தார். அதாவது பொருள்களைப் பாதுகாப்பான முறையில் அகற்றும் பக்குவத்தை மக்கள் உணரவேண்டும். இதற்குப் பிரதேச சபை முன்வரவேண்டும். பொலித்தீன்கழிவுகளைச் சேகரித்து மீள் சுழற்சிக்கு வழங்க முடியும். இதன் மூலம் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது பொலித்தீனைப் பயன்படுத்த முடியும் என்றார்.

ஆக, பொலித்தீனைப் பயன்படுத்தலாம். அப்படிப் பயன்படுத்தும் பொலித்தீன் உரிய முறையில் அகற்றப்படவேண்டும் என்பதே அவரால் உணர்த்தப்பட்டது. இதைச் சம்மந்தப்பட்ட பிரதேச சபைகள் செவ்வனே செய்தால், முஸ்லிம் மக்களுடைய வாழ்வாதாரம் சிறக்கும், மாணவர்கள் சோதனைக் குறைவை எதிர்கொள்ள முடியும். சுற்றாடலுக்கு மாசு ஏற்படாது. பயன்படுத்தப்பட்ட பொலித்தீன்கள் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படும் என்கிற வழிமுறை சுட்டிக்காட்டப்படுகிறது. காலம் செய்த கோலமாகப் பொலித்தீன் பாவனை தொடர்கிறது.

## சொற்சிலம்பம் போட்டி இல: 570



அனுப்புபவர் பெயர்:.........................................

முழுமையான தபால் விலாசம்: .................................

.........................................................

கையொப்பம்:................................................

### இடமிருந்து வலம்

1. ஆசி கொடுத்தல்
6. நீர் கொண்ட கருமையான மேகம்
7. கூந்தல்
8. இதுவர பத்தும் பறக்கும்
9. ஒரு பருப்பு வகை
11. சேர்
12. முனிவர்
13. நுளம்பின் வாழ்வு நிலைகளில் ஒரு பருவம்
15. சங்கீதத்துடன் தொடர்புடையது
16. பெண்களிடம் இருக்க வேண்டிய பண்புகளுள் ஒன்று
17. நலம்
18. வேகம்
19. திருவள்ளுவர் கூறும் இருவரில் ஒருவர்
21. ஓர் இனிப்புப் பலகாரம்
22. ஒன்றின் பகுதி
23. தலையில் எழுதப்பட்டது

### மேலிருந்து கீழ்

1. பொருந்தாது
2. மணப்பெண்ணுக்கு பெற்றோர் வீட்டிலிருந்து வழங்கப்படுவது
3. மணம்
4. தடுக்கும் நடவடிக்கை
5. ஈரலிப்பான இடத்தில் வளரும்
8. வலு
10. அனுபவித்து மகிழ்
11. ஒரு வாத்தியக் கருவி
13. இதுவும் பாத்திரம்
14. வழக்காளிக்கு எதிராளி
15. இரண்டு பத்து
16. புத்திரன்
17. தடம்
18. படிப்பு
20. விழி
21. இது ஓயாது

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 568
இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) மதிப்பு (4)பதவி (6) கறை (7)வசதி (9)கனதி
(10) அலை (11) துவரம் (13)நேரு (14)வடம் (15)இரும்பு (17)பதியம்
(19)முற்றல் (20)சய (21)நன்று (22)புளுகன்

**மேலிருந்து கீழ்**
(1) மகத்துவம் (2) திறை (3) புவனம் (4) பதி (5) வில்லை
(8) சதி (9) கரம்பற்று (10)அரும் (12) வட (13)நேரு
(15)இயல்பு (16) புடையன் (18) திற (19)முன் (20)சக

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.570**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (29.05.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.570 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 02.06.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4: போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 568 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
செல்வன் ஸ்ரீ.லக்ஷன்,
வட.மத்திய ம.கல்லூரி,
கரவெட்டி

**2 ஆம் பரிசு**
திருமதி அருந்தவபாலன் திவ்யா
கரபுக்குத்தி,கனகராயன்குளம்

**3 ஆம் பரிசு**
கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை

**4 ஆம் பரிசு**
தா.சுரேந்தினி,
இல.68 பழம் வீதி,
ஆனைக்கோட்டை.

**5 ஆம் பரிசு**
த.பரமேஸ்வரன்,
உபதபாலகம், கந்தரோடை,
சுன்னாகம்


### பாராட்டுப் பெறுவோர்

செல்வி கே.திசாணி,
இல.99 அரசடிவீதி,
புலோலி வடக்கு, பருத்தித்துறை

திருச்செல்வம் கௌதம்,
மாயக்கை அல்வாய் வடக்கு,
அல்வாய்

திருமதி என்.எம்.பிருதிவிராஜ்,
இல.7தபாலக வீதி,
மன்னார்.

**சொற்சிலம்பம் போட்டி 568 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**




பேசித்தீருங்கள்
பேசியே
வளர்க்காதீர்கள்

உரியவர்களிடம்
சொல்லுங்கள்
ஊரெல்லாம்
சொல்லாதீர்கள்.

நடப்பதை
பாருங்கள்
நடந்ததைக்
கிளறாதீர்கள்

உறுதி காட்டுங்கள்
பிடிவாதம்
காட்டாதீர்கள்

தீர்வை விரும்புங்கள்
தர்க்கம்
விரும்பாதீர்கள்.

# கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படத்தில் தமன்னா



நயன்தாரா, திரிஷா போன்ற முன்னணிக் கதாநாயகிகள், பெண் கதா பாத்திரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் படங்களில் நடித்து வருகிறார்கள். அந்த வரிசையில் இப்போது தமன்னாவும் இணைந்து இருக்கிறார். அவர் நகைச்சுவை கலந்த புதிய திகில் படத்தில் நடிக்கிறார். படத்துக்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை.

தமன்னா தனக்கென ஒரு தனிப் பாணியை உருவாக்கும் நோக்கில், பெண்களை மையப்படுத்தி எடுக்கப்படுகின்ற திரைப் படங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறார். முதன்முதலாக அவர் திகில் கலந்த நகைச்சுவைப் படத்தில் நடிக்க இருக்கிறார்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதாவது ஒரு பிரச்சினை இருக்கும். அதுபோல் தமன்னாவுக்கும் ஒரு பிரச்சினை இருக்கிறது. அதை அவர் நண்பர்களுடன் சேர்ந்து எப்படித் தீர்க்கிறார்? என்பது, இந்த படத்தின் கதை.

ஊர்க்காவலன்™
அளவுக்கு
மிஞ்சினால்
மேக்கப் அசிங்கம்.

படிக்காத_மேதை ®
நீங்கள்
செய்யப்போவதை
சொல்லிக்காட்டாதீர்கள்
செய்துமுடித்துவிட்டு
சொல்லியும்
காட்டாதீர்கள்.




Facebook பயம் Instagram பயம் Whatsup பயம் Viber பயம்
அவ்ளோத்தயும் Block பண்ணணிடுவாங்களோ எண்டு பயம்
Block பண்ணினா அத உடைக்கிற VPN பயம்

பள்ளிகூட Bag பயம்
Bag க்க இருக்கிற கொப்பி பயம்
கடைக்குப் போனால் சாப்பிடப் பயம்
சாப்பிட்டால்..........போயிடுமோ எண்டு பயம்

முருகன்ட போட்டோ வச்சிருக்க பயம்
அவர் வச்சிருக்கிற வேல் பயம்
வேல பாத்து பிடிச்சிடுவாங்களோ எண்டு பயம்

என்ன பிடிக்காம பக்கத்தில இருக்கிறவன
பிடிச்சிடுவாங்களோ எண்டு பயம்
பிடிச்சா போடுற காவல் பயம்
பிறகு கொண்டுபோற கோட்டு பயம்
கோட்டுக்கு வாற வக்கீல் பயம்
வக்கீல் இருக்கிற கட்சி பயம்
கட்சி இயங்கிற நோக்கம் பயம்

ரோட்டில Bike விடப் பயம்
விட்டா திருப்பி அதில ஏறப்பயம்


வருத்தம் வந்தா Hospital போகப் பயம்

மனநின்மதிக்கு கோயில் போக பயம்
கோயில் போனா குண்டு வெடிக்குமோ எண்டு பயம்
வெடிச்சா செத்துடுவனோ எண்டு பயம்
வெடிச்சு தப்பினா கை கால் போயிடும் எண்டு பயம்

இந்த பதிவை FB ல போடக்கூட பயம்
ஆக தெனாலி கமல் ஓட வாழ்க்கை வாழ்ந்துட்டு இருக்கேன்


# அழகு





# வெற்றி

வெற்றியின் வீட்டுக்கு எப்படி
போகணும்...?
நேரா போய் ரைட் எடுத்தா...
ஒரு தோல்வி வரும்...
அங்கிருந்து லெஃப்ட் போனா...
பெருசா ஒரு துரோகம் இருக்கும்...
கொஞ்ச தூரம் போயி ஒரு யு டர்ன்
அடிச்சா...
அங்க கடன் என்கிற ஒரு பெரிய பள்ளம்
இருக்கும்...
அந்த பள்ளத்துல விழுந்து மூஞ்சி
எல்லாம் உடைஞ்சு எந்திருச்சு நேரா
போனா...
ஏமாற்றம் என்கிற ஒரு சிக்னல்
இருக்கும்...
அதையும் தாண்டி போனா...
போட்டி, பொறாமை போன்ற ஸ்பீடு
பிரேக்கர்கள் வரும்...
அவற்றையும் தாண்டி போயிகிட்டே
இருந்தால்...
ஒரு மேடு வரும்... அதில அகங்காரம்
என்கிற கியர்ல ஏறாமல்,
பணிவு என்கிற கியர்ல ஏறினா...
உச்சியில இருக்கிறது தான்... நீங்க
கேட்ட வெற்றியின் வீடு...



423

நித்திய சுகம்

உடலே கோயில்

# நீரிழிவு நோயாளிகள் கவனிக்க வேண்டியவை

ச.சுதாகரன்


நீரிழிவு நோயாளிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு வகையான மருந்துகள் ஒவ்வொன்றும் குருதியில் உள்ள குளுக்கோசின் அளவைக் குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் வெவ்வேறு தன்மையில் எமது உடலில் செயற்படுகின்றன. உதாரணம் சில மருந்துகள் எமது உடலில் உள்ள கணையத்தில் பீட்டா (ß) செல்களை தூண்டி இன்சுலின் சுரப்பினை அதிகமாக சுரக்கச் செய்து குருதியில் குளுக்கோசின் அளவை குறைக்க முயற்சிக்கின்றன. சில மருந்துகள் உடல் தசைகளில் உள்ள இன்சுலின் எதிர்ப்புநிலையை சரி செய்வதன் மூலம் குருதியில் குளுக்கோசின் அளவை கட்டுப்படுத்துகின்றன. இன்னும் சில மருந்துகள் சிறுகுடலில் உணவு செரிமானம் அடைவதை தாமதப்படுத்தி இதன் மூலம் குருதியில் குளுக்கோசின் அளவை சடுதியாக அதிகரிக்காமல் குருதியில் கட்டுப்பாடாக வைத்திருக்க முயல்கின்றன. வேறு சில மருந்துகள் எமது ஈரலில் இருந்து குளுக்கோசு வெளியாகி குருதியில் கலப்பதை தாமதப்படுத்துகின்றன.

**மருந்துகளின் செயற்பாடுகள்**

எனவே உங்களுக்கு வைத்தியரால் பரிந்துரை செய்யப்படும் மருத்தைப் பொறுத்து அது எப்போது சாப்பிட வேண்டும் என்பதை வைத்தியர், தாதியர், மருந்தாளர்கள் உங்களுக்கு அறிவிப்பார்கள். உதாரணமாக எமது உடலில் சதையியை தூண்டி இன்சுலினை சுரக்கச் செய்கின்ற மருந்துகளான சல்பனைல் யூரியா வகையை சேர்ந்த மருந்துகள் கிளக்கிளாசைட், கிளைபென்கிளமைட், கிளம்பிறைட், கிளிப்சைட், றொல்பியூட்டமைட் போன்றவை உணவு உண்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பு உள்ளெடுக்கப் பட்டால் அவை எமது குடல் பகுதியால் உள்உறிஞ்சப்பட்டு குருதியில் கலந்து பின்பு சதையியை அடைந்து பின்பு இன்சுலினை சுரக்கச் செய்து சுரக்கப்பட்ட இன்சுலினும் நாம் உண்ட உணவில் உள்ள குளுக்கோசு குருதியில் கலப்பதற்கும் அதிக இடைவெளி இல்லாமல் ஒரே சமயத்தில் நடைபெற வாய்ப்பு உண்டு. இதனால் குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிப்பது கட்டுப்படுத்தப்படும்.

**மருந்துகளின் வகைகள்**

எனினும் சில வகையான மருந்துகள் இன்சுலின் எதிர்ப்பு நிலையை சரிசெய்யும் மருந்துகள் பைகுவனைட்ஸ் வகை மருந்துகள் மெற்போமின், பயோகிளிப்ட சோன் போன்ற மருந்துகள் குருதியில் உள்ள குளுக்கோசை கூடிய திறன் உடன் கலங்களுக்குள் உட்செலுத்துவதன் மூலம் நாம் உண்ட உணவில் இருந்து குளுக்கோஸ் வேகமாக உள் உறிஞ்சப்படுவதை தாமதப்பத்துவதன் மூலமும் அத்துடன் மாப்பொருள் அல்லாத உணவு பொருள்களில் (புரதம், லக்றேற்) இருந்து குளுக்கோஸ் தயாரிக்கப் படுவதை தடுப்பதன் மூலமும் குருதியில் குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்துகின்றன. இவ்வகையான மருந்துகளை உணவு உண்ட பின்பு எடுப்பது நல்லது எனினும் மேற்படி மருந்துகளை பற்களால் கடிப்பதையோ, வாயினால் உமிழ்வதையோ தவிர்த்து உணவு உண்ட பின்பு ஒரு கிளாஸ் தண்ணீரில் விழுங்குவது சிறப்பானது. மெற்போமின் மருந்துகள் கணையத்தினால் சுரக்கப்படும் இன்சுலினின் ஆற்றலை அதிகரிப்பதுடன் இவ்வகை மருந்துகள் உடல் எடை அதிகம் உடையவர்களுக்கு நல்ல பயனைத் தரும்.



> மருத்துவர் உங்களுக்கு மருந்து பரிந்துரை செய்யும் போது உங்கள் வாழ்க்கை முறை உங்களது தற்போதைய உடல்நிலை மற்றும் உங்கள் தனிப்பட்ட தேவைகள் உதாரணமாக கர்ப்பமாக இருத்தல் கர்ப்பம் கரிப்பதற்கு தயார் நிலையி லிருத்தல் மற்றும் இருதய, சிறுநீரக கல்லீரல் சம்பந்தமான நோய் நிலைகள் தனிமையில் வசித்து வருதல் மது அருந்தும் பழக்கம் இருப்பின் கூறுவதன் மூலம் உங்கள் உடல்நிலைக்கு ஏற்ற மருந்தினைச் பரிந்து செய்வதற்கு உதவலாம்.

மது அருந்துபவர்கள் இதனை பயன்படுத்தக் கூடாது. மற்றும் கல்லீரல் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கும் வழங்கப்படுவதில்லை.

**மருத்துவ ஆலோசனை மிகமிக அவசியமானது**

நீரிழிவுக்காக உங்களுக்கு வழங்கப்படும் மருந்துகளை ஒரு வைத்தியர் மூலம் அல்லது வைத்திய நிபுணர் மூலம் உறுதிப்படுத்தி பரிந்துரை செய்த மருந்துகளையே உள்ளெடுக்க வேண்டும்.

ஒரே அளவு மருந்து பலருக்கு பல வித்தியாசமான விளைவுகளை கொடுக்கக் கூடியது. மருந்து உட்கொண்ட பின்பு உங்கள் உடலிலோ அல்லது நடத்தையிலோ ஏதவாது மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை நாடவும்.

மருத்துவர் உங்களுக்கு மருந்து பரிந்துரை செய்யும்போது உங்கள் வாழ்க்கை முறை உங்களது தற்போதைய உடல் நிலை மற்றும் உங்கள் தனிப்பட்ட தேவைகள் உதாரணமாக கர்ப்பமாக இருத்தல் கர்ப்பம் கரிப்பதற்கு தயார் நிலையிலிருத்தல் மற்றும் இருதய, சிறுநீரக கல்லீரல் சம்பந்தமான நோய் நிலைகள் தனிமையில் வசித்து வருதல் மது அருந்தும் பழக்கம் இருப்பின் கூறுவதன் மூலம் உங்கள் உடல்நிலைக்கு ஏற்ற மருந்தினைச் பரிந்து செய்வதற்கு உதவலாம்.


உங்களுக்கு வழங்கப்பட்ட மருந்துகளைத் தனித்தனி சிறிய காற்றுப்புகாத உலர்ந்த போத்தல்களில் போட்டு அவற்றின் பெயர், அளவு (மில்லிகிராம்) போடும் நேரங்கள் திகதி போன்றவற்றைப் போடுவதன் மூலம் பாவனைக்கு உதவியாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்கும்.

நீரிழிவுக்காக மருந்து போடும் நீங்கள் ஓர் ஆரோக்கியமான உணவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அத்துடன் எதிர்பாரத வகையில் வரும் சிக்கல்களை குறைப்பதற்கான திட்டங்களையும் தயாராக இருக்க வேண்டும். உதாரணமாக குறைந்த குளுக்கோஸ்நிலை, கிளிபெனகிளைமைட் போன்ற மருந்துகள் நீண்ட நேரத்துக்கு குருதியில் செயற்படும் திறன் உடையதால் குருதியில் குளுக்கோசின் அளவை குறைப்பதற்கும் வாய்ப்பு உண்டு. எனவே இந்த மருந்துகளை உள்ளெடுக்கும் முதியோர்கள் உணவு உள்ளெடுப்பதில் ஒழுங்கற்றவர்கள் மற்றும் மது அருந்துபவர்களை கண்காணிப்பது அவசியம்.

கிளைற்றசோன் வகை மருந்துகள் றொசிகிளைற்றசோன், பொய்க்கிளைற்றசோன் மருந்துகள் இன்சுலின் எதிர்ப்பு நிலையைச் சரிசெய்து இன்சுலின் ஏற்காமையை குறைக்கிறது. இவ்வகை மருந்துகளை உணவு உண்டபின்பு எடுப்பது நல்லது.


அகர்போஸ் போன்ற மருந்துகள் நாம் உண்ணும் உணவில் மாப்பொருள் உணவினை முழுமையாக செரிமானம் அடைவதை தாமதப்படுத்துவதால் குருதியில் குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்துகின்றது. இவ்வகையான மருந்துகள் உணவுக்கு முன்பு எடுக்க வேண்டும்.

உங்களுக்கு வழங்கப்படும் மருந்துகளில் நீண்ட நேரத்துக்கு தொழிற்படும் மருந்துகள் S.R, M.R,X.R எனக் குறிப்பிட்ட மருந்துகளாயின் அவற்றை துகளாக்கவோ பற்களால் கடிக்கவோ உமியவோ கூடாது. இவற்றை ஒரு கிளாஸ் நீரில் உள்ளெடுப்பது நல்லது.



*கட்டுரையாளர்: தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்*

# இரவில் வெந்நீர் குடிப்பது நல்லதா?



காலை நேரத்தில் வெந்நீர் குடிப்பது உடலுக்கு மிகவும் நல்லது என்று ஆரோக்கியம் குறித்து வல்லுநர்கள் கூறுவதை நாம் அறிவோம். நம்மில் பலரும் இதனைப் பின்பற்றிக் கொண்டு இருப்பார்கள். வெந்நீர் உடலுக்கும் உடல் உறுப்புகளுக்கும் அதிகப் படியான நன்மைகளை செய்யக்கூடியது. ஆனால் இரவு நேரத்தில் வெந்நீர் குடித்தால் உடலுக்கு நல்லதா? என்ற கேள்வி பலருக்கும் இருக்கும்.
ஆம். உண்மையில் ஆரோக்கியத்துக்கும் நம் அழகுக்கும் இரவு நேரத்தில் வெந்நீர் குடிப்பது அவசியம். சிலர் தூங்கும் முன் தண்ணீர் குடித்தால், சிறுநீர் உபாதைகள் ஏற்பட்டு, தூக்கம் கெட்டுவிடும் என்றே தண்ணீர் குடிப்பதை தவிர்த்திடுவார்கள். குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், இரவு படுக்கும் முன் வெந்நீர் குடித்தால் தூக்கம் சிறப்பாக இருக்கும்.
உடலில் நீர்ப் பற்றாக்குறை ஏற்படும் போது தான் மன அழுத்தம் மற்றும் உணர்வு நிலையில் ஏற்ற இறக்கம் போன்றவை உண்டாகும். மேலும் இதனால் தூக்கம் தடைப்படும். தினசரி இரவு நேரத்தில் தூங்க போகும் முன் வெந்நீர் குடித்துவிட்டுத் தூங்குவதால் உணர்ச்சி நிலை சீராக இருக்கும்.
வெந்நீர் அருந்துவதால், உடலின் உள்ளே வெப்பம் உற்பத்தியாகி, வியர்வையாக வெளியேறும். இதனால் உடலில் உள்ள நச்சுக்கள் வெளியாகி, குருதி ஓட்டம் சீராக இருக்கும்.
நம் உடலுக்கு நீர் என்பது மிகவும் முக்கிய தேவையாக இருக்கிறது. ஏனென்றால், வியர்வை, சிறுநீர் போன்றவற்றால் உடலில் நீர் இழப்பு ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இதனை சமன் செய்யத் தொடர்ச்சியாக நீர் அருந்துவது கட்டாயம். இரவு நேரத்தில் வெந்நீர் குடித்துவிட்டு படுப்பதால் உடலில் நீர் தேவை பூர்த்தியாகிறது.
சாப்பிட்டு முடித்தபின் வெந்நீர் அருந்துவதால் செரிமானம் எளிதாக இருக்கும். கடினமான உணவுகள் கூட எளிதில் ஜீரணமாக்க கூடிய திறன் வெந்நீருக்கு உண்டு. இரவு நேரத்தில் செரிமானம் என்பது சற்றே தாமதமாக இருக்கும். வெந்நீர் குடுப்பதால் அந்தப் பிரச்சினை இருக்காது.
வெந்நீர் அருந்துவதால் உணவுகள் எளிதில் ஜீரணமாகிறது. உணவு எளிதில் உடைத்து சத்துக்கள் உடலுக்கு கிடைக்க செய்கிறது. இதனால் உடல் எடையும் குறைகிறது. காலையும் இரவும் வெந்நீர் குடிப்பது மிகவும் நல்லது. ஆரோக்கியமாக வாழ இதனைப் பின்பற்றுவோம்.

# வெயில் காலத்தில் கூந்தலுக்கு எண்ணெய் வைப்பதன் அவசியம்

வெயில் காலத்தில் கூந்தல் பிசுபிசுப்பாக இருக்கும். வெயிலாகவும் காற்றில் ஈரப்பதம் நிறைந்தும் இருக்கும் காலங்களில் தலைக்கு எண்ணெய் வைத்தால் அது கூந்தலை மேலும் பிசுபிசுப்பாகவும் தொட்டால் ஒட்டும் தன்மையையும் ஏற்படுத்திவிடும்! ஆனால் அதற்காக நாம் வெயில் காலத்தில் தலையில் எண்ணெய் வைக்காமல் இருக்க வேண்டுமா?
"அழகான கூந்தலை ஒருவர் பெற வேண்டுமென்றால் கூந்தலுக்கு எண்ணெய் வைக்க வேண்டும் கூடவே சத்துணவுகளை சேர்க்க வேண்டும். வலுவான பளபளப்பான கூந்தல், ஒருவரின் உடல் போஷாக்காகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதைக் குறிக்கும்" பழமையான ஆயுள்தவே அறிவியலின்படி, இயற்கையான பொருள்கள் அடங்கிய தைலங்களைக் கொண்டு கூந்தலுக்கு தொடர்ச்சியாக எண்ணெய் வைப்பதே உங்களது கூந்தலின் தரத்தை உயர்த்துவதற்கான ஒரே வழி. அத்தகைய கூந்தல் தைலங்கள் முடியை வேரிலிருந்து உறுதியாக்கிப் பளபளப்பாக்குகின்றன !
உங்கள் மயிர்க்கால்கள் தூண்டப்பட்டுத் தலைமுடி "பிசுபிசுப்பின்றி" காணப்படுவதுடன் கூந்தலின் வேருக்குத் தேவையான ஊட்டச்சத்தை அது வழங்குகிறது.
கூந்தலுக்குக் குறைவான அளவு எண்ணெய் பூசுவதால் வெயில் காலத்தில் சூரியனின் கடுமையான அல்ட்ராவயலெட் கதிர்களிடமிருந்து கூந்தலைக் காக்கலாம். எனவே, வெயில் காலத்தில் தலைக்கு எண்ணெய் வைப்பதை முழுவதும் தவிர்க்க வேண்டாம். சிறிது பூசிக் கொள்ளலாம்.
தலைக்கு எண்ணெய் தேய்த்து இரவு முழுவதும் அதனை ஊற விடுவதால் ஷாம்பூ தேய்த்தாலும் கூட உங்களது தலை சருமம் எண்ணெய் பிசுபிசுப்புடன் காணப்படும். இதனை நீக்க அதிகளவு ஷாம்பூ பயன்படுத்த வேண்டியிருக்கும். இதனால் கூந்தல் வேர்களில் கெமிக்கல்கள் படியக்கூடும். அதற்கு பதிலாக கூந்தலில் சிறிது தைலம் தடவி இரண்டு மணி நேரங்களுக்குள் தலைக்கு குளித்துவிடவும். ஆயுள் வேதத்தில் கூந்தலில் எண்ணெய் வைத்து இரவு முழுக்க ஊற விடுவது பற்றி சிறப்பாக கூறப்படவில்லை.
மருத்துவ குணங்கள் நிறைந்த எண்ணெயை கூந்தலில் பூசுவது அவசியமாகும். இதனால் தலையில் பூஞ்சை வளர்ச்சி தவிர்க்கப்பட்டு தலை சருமம் ஆரோக்கியமாகிறது. ஆனால் சரியான முறையில் பூசுவதும் பின்னர் வாஷ் செய்வதும் அவசியமாகும். மேலும் அது மயிற்கால்களுக்கிடையே உள்ள இடைவெளியை நிரப்பி தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் மயிற்கால்களுக்குள் ஊடுறுவாமல் காக்கிறது. அதிக சக்தியுடைய ஷாம்பூக்களை பயன்படுத்துவதால் கூந்தல் பாதிக்கப்படுவதையும் அது தடுக்கிறது.



# முகத்தை அழகாக்க சில குறிப்புகள்

அனைவருக்குமே அழகாகவும், வெள்ளையாகவும், முகம் பளபளப்பாகவும் இருக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. இதற்காக கடைகளில் விற்கும் நிறைய அழகுப் பொருள்களை வாங்குவதை விட இயற்கையான முறைகளை பின்பற்றினாலே அழகாக மாறலாம்.
பழங்களில் வாழைப்பழம், பப்பாளி, அவகேடோ போன்றவை சருமதுக்குப் பொலிவைத் தரக்கூடியவை. எனவே இத்தகைய பழங்களை சாப்பிடுவதோடு சருமத்துக்குத் தடவி வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.



- எண்ணெய் முகம் உள்ளவர்கள் தக்காளிப் பழத்தைத் தொடர்ந்து தடவி வரலாம். இதிலுள்ள விற்றமின் ஏ, பி, சி மூன்றும் சருமத்தை இளமை யாக வைத்திருக்கும்.
- எல்லா காய்கறிகளையும் சேர்த்து சூப் செய்யும்போது, அதிலிருந்து வெளியேறும் ஆவியில் முகத்தை காட்டினால், சருமத் துவாரங்கள் திறந்து அழுக்கு வெளியேறும். தேவையான சத்துகளும் சேரும்.
- சருமத்தை சுத்தமாக்குவதில் பால் சார்ந்த பொருள்கள் மிகச் சிறப் பாகச் செயற்படுகின்றன. தயிர், வெண்ணெய் போன்றவற்றையும், சாதம் வடித்த கஞ்சியுடன் பாலையும் சேர்த்து முகத்தில் தடவினால் தளர்ந்த சருமம் இறுக்க மாகும்.
- பாதாம் பருப்பு பவுடரை வாரம் ஒருமுறை முகத்தில் அப்ளை செய்து வந்தால், சொர சொரப்பான சருமம் சாப்ட்டாகும். இந்த பேக் முகத்தில் உள்ள ஈரப்பசையையும் தக்க வைக்கும்.
- பப்பாளி பழத்துடன் பால் கலந்து முகத்தில் பூசிவந்தால், நிறம் கூடுதலாகும். நார்மலான சீதோஷ்ண நிலையிலேயே இதை செய்ய வேண்டும்.
- முகத்தில் தூசிகள் படிந்திருப்பதால் முகம் பொலிவின்றி காணப்படும். எனவே அவ்வப்போது முகத்தை சுத்தமான நீரினால் கழுவினால், முகம் நன்கு சுத்தமாக பருக்களின்றி இருக்கும்.
- எலுமிச்சை ஒரு சுப்பரான ப்ளீச்சிங் பொருள். இத்தகைய எலுமிச்சையின் துண்டுகள் அல்லது சாற்றைக் கொண்டு, தினமும் முகத்தை சிறிது நேரம் தேய்த்து கழுவினால், சருமத் தில் உள்ள அழுக்குகள் நீங்கி, சருமம் பொலிவோடு மின்னும்.

# அற்புதமான படைப்பாகவுள்ள பத்திமா மாதாவின் குரலொலி

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

பண்டத்தரிப்புபுனிதபற்றிமாஅன்னையாத்திரைத்தல பரிபாலகர் மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் பத்திமா மாதாவின் குரலொலி என்னும் புத்தகத்தை மே மாதம் 13ஆம் திகதி நடைபெற்ற பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை யாத்திரைத்தல பெருவிழாவையெட்டி வெளியிட்டுள்ளார். பத்திமாமாதாவின்குரலொலிஎன்றஇந்த நூல்இந்தப்பதியின்ஆரம்பமுதல்இன்றுவரைவளர்ச்சியை அறியத்தரும் எங்கும் காணமுடியாத முதன்மையான பிரதியாகும். இந்த நூல்பற்றி இவ்வாக்கம் பேசுகிறது.

**மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் மரியன்னையில் பக்தி கொண்டவர்**

பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை யாத்திரைத்தல பரிபாலகர் மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் மரியன்னை பக்தர் என்கின்ற வகையில் பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை யாத்திரைத்தலத்திற்கு மெருகூட்டவும் வழிபாடுகளைச் சிறப்பித்து அன்னையிடம் இறைமக்களை அழைத்துவரவும் பெரிதும் உழைக்கிறார். குறிப்பாக பத்திமா அன்னையின் பெயரைப்பரப்பும்விதமாகபல நூல்களை எழுதியும் மொழிபெயர்த்தும் மீள்பதிப்பு செய்தும் ஆண்டுதோறும் வெளியிட்டும் வருகிறார். ஏற்கனவே அவர் மூன்று சிறுவர்கள், பத்திமா மாதா காட்டும் வழி, ஐந்து முதல் சனிக்கிழமைபக்தி என மூன்று நூல்களை வெளியிட்டுள்ளார்.

பத்திமாமாதாவின் குரலொலி என்ற நூல் குறித்த ஆலயத்தில் கடந்த 11ஆம் திகதி பிற்பகல் 3.45 மணிக்கு பண்டத்தரிப்பு பத்திமாகிரியில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு ஜீவேந்திராபோல் அ.ம.தி அடிகளார் தலைமை தாங்கினார். சில்லாலை பங்குத்தந்தை அகஸ்ரின் அடிகள் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டு அரியதோர் ஆய்வுரையை வழங்கினார். அங்கு பிரசன்னமாயிருந்த இளவாலை மறைக்கோட்ட முதல்வர் ம.யேசுரட்ணம் அடிகளார் சிறப்புப் பிரதியைப் பெற்றுக்கொள்ள அவரைத் தொடர்ந்து ஏனைய குருக்களும் துறவிகளும் இறைமக்களும் சிறப்புப்பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.



அன்னார் ஐயம்பிள்ளை பாலசிங்கத்தின் (விற்பனை அபிவிருத்தி திணைக்களம், ஓய்வுநிலை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை (மலாயன் பென்சனியர்) இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் கிரியாதேவி, நந்தகுமாரன்(உதவிப்பொறியியலாளர்,ஓய்வுநிலைதே.நீ.வ.வ.அ. சபை - திருகோணமலை) காலஞ்சென்ற சிவகுமாரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் திலகராஜா (பொறியியலாளர்- ஓய்வுநிலை, தே.நீ.வ.வ.அ.சபை - யாழ்ப்பாணம்) சிவநிதி (ஆசிரியை - தி/ ஸ்ரீ மாதுமை அம்பாள் வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும் துரைராஜசிங்கம், அற்புதமலர்,குலவீரசிங்கம், பூபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் துஷியந்தினி, நிரூபினி, நிரூஜனன் ஆகியோரின் பேர்த்தியும் தனவர்ஷன், ஆருத்ரன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.25 பயிரிக்கூடல் வீதி காரைநகர்.
தகவல்:குடும்பத்தினர்.
0212251890, 0771311161

**கடை வாடகைக்கு**
கிளிநொச்சி நகரில் A9 வீதியில் நீளமான கடை வாடகைக்கு உள்ளது.
076 112 4145 , 077 914 3541

**கார் விற்பனைக்கு**
Maruti Suzuki 800 A/C, KW Series 2012/2013, Silver, 48000km Milage First Owner, Extra key, Manual.
Contact: 0774242327/0770466755

**தீபம் திருமாங்கல்ய சேவை**
வெளிநாட்டு, உள்நாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மற்றும் முழுவிபரங்கள் உங்களுக்கு தரப்படும். மிகவும் துரித சேவை
உடுவில் தெற்கு. 0783971938-Viber

**வீடு வாடகைக்கு உண்டு**
திருநெல்வேலி வளாக வீதியில்
- பல்கலைக்கழகத்திற்கு மிக அருகாமையில் புதியஇரு வீடுகள் முதல் தளத்தில் (3BHK, 2BHK) வாடகைக்கு உண்டு.
தொடர்பு-077 869 9512

**வீடு காணி விற்பனைக்கு**
கொக்குவில் கிழக்கு பிரம்படி லேன் கொக்குவிலில் 2பரப்பு காணியில் அமைந்த புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
076 702 3565

**விற்பனை உதவியாளர் தேவை**
நடமாடும் வியாபாரத்தினை மேற்கொள்ளும் விநியோகஸ்த்தருக்கு விற்பனை உதவியாளர்கள் தேவை. கொக்குவில், திருநெல்வேலி, கோண்டாவில், உரும்பிராய் போன்ற இடங்களைச் சேர்ந்தவரகள் விரும்பத்தக்கது
0718617918, 077 900 9541

# சஹ்ரானின் புகைப்படத்தை வைத்திருந்தாரென ஒருவர் கைது



யாழ்ப்பாணம்,மே 19
சஹ்ரானின் புகைப்படத்தை மடிக்கணனி திரையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதாகிய ஆசிரியர் ஒருவர் நீண்ட விசாரணை யின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். கல்முனை கிறீன் பீல்ட் வீட்டுத்திட்டப் பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.
குறித்த பகுதியில் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது வீடொன்றினுள் இயங்கிய நிலையில் மடிக்கணினி ஒன்று காணப்பட்டது.
இதனை அவதானித்த பாதுகாப்பு தரப்பினர் குறித்த கணினியை சோதனை மேற்கொண்ட நிலையில் அதிலிருந்து அண்மையில் இலங்கையில் தொடர் தற்கொலை குண்டுத்தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்ட பயங்கரவாதி சஹ்ரானின் புகைப்படங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்மையை கண்டு பிடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் அக்கணினியை பாவித்தவரின் வட்சப் சமூக வலைத்தளத்திலும் குறித்த புகைப் படங்கள் காணப்பட்டன என்று அவ் வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். தனியார் பாடசாலை ஆசிரியரான முஹமட் இஸ்மாயில் ஜஹானா என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.
நீண்ட நேரம் விசாரித்த பொலிஸார் வாக்குமூலம் ஒன்றை பெற்று சந்தேகநபரை விடுதலை செய்துள்ளனர். இதேவேளை இச்சுற்றிவளைப்பின் போது அதே பகுதியில் இருந்து மற்றுமொரு நபரும் அடையாள அட்டை இன்றி காணப்பட்டார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டார். (ஐ)

# நாளை தொடக்கம் ஒருவழிப்பாதையாக செயற்படும்

யாழ்ப்பாணம்,மே 19
யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலைக்கு முன்னாள் உள்ள சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வீதி நாளை தொடக்கம் ஒரு வழிப்பாதையாக செயற்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.
பாடசாலை நாள்களில் காலை 7 மணி தொடக்கம் 8 மணிவரையும் பிற்பகல் 1 மணி தொடக்கம் 2 மணி வரையும் ஒருவழிப்பாதையாக இயங்கும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபை பிரதி ஆணையாளர் தெரிவித்தார். (ஐ)

## தனியாருக்கும்...

அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ரவீந்திர சமரவீர கோரியுள்ளார். (ஓ,5)

## 13ஆம்...

தியாலங்கள் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
குளியாப்பிட்டிய உள்ளிட்ட வடமேல் மாகாணத்தின் பல பகுதிகளில் கடந்த 13ஆம் திகதி முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதோடு அவர்களின் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டன. வன்முறைச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் சிலரை பிணையில் விடுதலை செய்தாரென தயாசிறி ஜயசேகர மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.
(ஓ,5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாதேவி கனகநாயகம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், சிவன் கோவில் வீதி, திருநெல்வேலியை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி கனகநாயகம் 17.05.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் பொன்னையா நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகநாயகத்தின் அன்பு மனைவியும், ரபீந்திரன் (நெதர்லாந்து), சாந்தினி (கனடா), பாமினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.05.2019) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.5, சிவன் கோவில் வீதி,**
**திருநெல்வேலி தெற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 222 3449**

## மரண அறிவித்தல்கள்

அன்னை மடியில்
08
01
1972




ஆண்டவன் அடியில்
18
05
2019

### திருமதி பிரியதர்சினி ஜெகநாதன்

தெல்லிப்பழை துர்க்காபுரத்தைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவில் லண்டன் நகரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரியதர்சினி ஜெகநாதன் நேற்று (18.05.2019) காலமானார்.
அன்னார் தெல்லிப்பழையைச்சேர்ந்த காசிநாதர் கனகரத்தினம் - அருள்மலர் தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வியும் திரு.திருமதி முத்தையா தம்பதியினரின் அன்பு மருமகளும் ஜெகநாதனின் அன்பு மனைவியும் திருமதி குகபாலன் உதயதர்சினி, திரு ஶ்ரீராகவன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் அனுஜன், பிரவின் ஆகியோரின் அருமைத்தாயாரும்திருமதிரிஷாவின்மைத்துனியும்கனநாதன், சிவநாதன், ரகுநாதன் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற ராஜமனோகரன் மற்றும் நித்தியானந்தன், காலஞ்சென்ற டாக்டர் தெய்வேந்திரன் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரித்தானியவில் லண்டன் நகரில் (22.05.2019) நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"ராமகிரி" துர்க்காபுரம், தெல்லிப்பழை**
**00441303279884, 021 205 9271**
**00447828528531 (Viber)**

தகவல்:
**தந்தை கா.கனகரத்தினம்**
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உதவிமுகாமையாளர்)



### கணபதிப்பிள்ளை தேவகுருநாதன் (குட்டித்தம்பி)

**(தம்பிராசா எரிபொருள் நிரப்பு நிலைய (நல்லூர் மார்கட்) உரிமையாளர்)**


நல்லூரைப் பிறப்பிடமாகவும் 142, ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தம்பிராசா எரிபொருள் நிரப்பு நிலைய (நல்லூர் மார்கட்) உரிமையாளருமான கணபதிப்பிள்ளை தேவகுருநாதன் (குட்டித்தம்பி) 18.05.2019 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-மாணிக்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், பேபிசறோஜாவின் கணவரும், செங்கோடன், அமுதா ஆகியோரின் தந்தையும், புஸ்பகரணி, துஷ்யந்தன் ஆகியோரின் மாமனாரும், வெண்ணிலாவின் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 222 7752, 077 699 5366, 077 869 6737**

### கனகசபை சிவகுமாரன்

(வாரிவளவு, காரைநகர்), (Eng, Electronic))



**தோற்றம் 24.05.1963 மறைவு 17.05.2019**

காரைநகர் வாரிவளவை பிறப்பிடமாகவும் அமெரிக்காவை நிரந்தர வசிப்பிடமாகவும், இல.35, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சிவகுமாரன் 17.05.2019 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - மனோன்மணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கனகசபை மற்றும் இராசலஷ்சுமி தம்பதியரின் மருமகனும், செல்வகுமார் (USA), கனகமணி, சாரதாமணி (ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர்), கலாமணி ஆகியோரின் நேசமிகு சகோதரனும், பவானியின் (USA) அன்புக் கணவரும், சயனி, இராகுலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தினி (USA), காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் தியாகலிங்கம் (SPITI, Vavuniya).தியாகலிங்கம் (ஓய்வுபெற்ற புள்ளிவிவரவியலாளர்) ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.05.2019 செவ்வாய்க்கிழமை இல.35, அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 09.மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.35, அம்மன் வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

தகவல்
**க. செல்வகுமார்**
**077 452 9320**

## கமுகு சாப்பாட்டு தட்டுக்கள்

கமுகுமடலில் செய்த சாப்பாட்டுத் தட்டுக்கள் விற்பனைக்குண்டு
பிளாஸ்ரிக், பெலித்தீன், றெஜிபோம் பாவனையைக் குறைக்கமுடியும்

LAVA HOSPITAL 077 320 3137
85, Clock Tower Road, Jaffna

## II TO II PIZZA

| PIZZA | | OFFERS |
|---|---|---|
| ONE SMALL PIZZA (ஒரு சிறிய பீட்சா) | → | JUICE FREE (பழச்சாறு இலவசம்) |
| ONE MEDIUM PIZZA (ஒரு நடுத்தர பீட்சா) | → | SOUP FREE (சூப் இலவசம்) |
| ONE LARGE PIZZA (ஒரு பெரிய பீட்சா) | → | SMALL PIZZA FREE (சிறிய பீட்சா இலவசம்) |
| TWO LARGE PIZZA (இரண்டு பெரிய பீட்சா) | → | MEDIUM PIZZA FREE (நடுத்தர பீட்சா இலவசம்) |
| THREE LARGE PIZZA (மூன்று பெரிய பீட்சா) | → | ONE LARGE PIZZA FREE (ஒரு பெரிய பீட்சா இலவசம்) |

MAY 10TH TO MAY 30TH
FREE DELIVERY

128: பலாலி வீதி திருநெல்வேலி
T.P 077 7444225, 0212216700
T & C

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

பால்மா குளிசை
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம் குளிசை என்பன விற்பனைக்கு உண்டு.
**பாவித்து 15 நாள்களில் அற்புதமான அழகை காண்பீர்கள்.**

221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
077 210 6155

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம் திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

**பட்ட மேற்படிப்பு கற்கைகளுக்கான புலமைப்பரிசில் திட்டம் கல்வியாண்டு 2019/2020**
**MA/M.Sc/M.BA/M.Phill/Phd**

**தகைமைகள் :** அடிப்படை பட்டக் கற்கையினை பூர்த்திசெய்த விண்ணப்பதாரி விண்ணப்பிக்க தகுதியுடையவராகின்றார்.
**துறைகள் :** தமிழ், உளவியல், ஆங்கிலம், கணினி விஞ்ஞானம், ICT, முகாமைத்துவம், கல்வியியல், பொறியியல், MLT, சங்கீதம்....
**மொழிமூலம் :** தமிழ் / ஆங்கிலம்
**காலம் :** 1 1/2 வருடங்கள்
**விண்ணப்ப முடிவு திகதி :** 25.05.2019
**விண்ணப்பிக்கும் முறை**
: சுயவிபரத்தினை degreeinfo08@gmail.com அல்லது அலுவலகத்தில் சமர்ப்பிக்க முடியும்.
**நேர்முகத் தேர்வு :** பல்கலைக்கழக பிரதிநிதிகளால் மே மாதம் 27-31 வரை யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடியில் நடத்தப்படும்.

UGC & Foreign Ministry Approved

**மேலதிக விபரங்களுடன் தொடர்புகளுக்கு:**
**முகாமைத்துவ நிர்வாக சபை**
**தொழில்சார் கற்கைகள் நிறுவனம்**
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
**076 413 2247 / 077 602 1794**

## ஆசிரியர் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் சிமாட் கிட்ஸ் முன்பள்ளிக்கு ஆங்கில ஆசிரியர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
077 386 7450

## பணிப்பெண் தேவை

வவுனியாவில் உள்ள வீடு ஒன்றிற்கு குழந்தையை பராமரிக்க வீட்டுப்பணிப்பெண் தேவை.
தொடர்பு-077 725 2091, 077 674 5826

## PRINTING MACHINARY FOR SALE

- SORDZ 2 Color Offset Printing Machine Size 24"x36"
- Book Stitching Machine (made in London)
- Programming Polar Cutter (made in Germany)
- Lamination Machine Size 24"
- Solna Offset Printing Machine (made in Germany)

Above mention all machine price are 11 Million
Price Negotiable after inspection
Contact :0777322133

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் இரும்புப்பொருள் விற்பனை நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை.
* கணக்காளர்
* கூலியாள்
* சாரதி

077 719 8009

## ES Printers



மக் பிரிண்ட் (MUG) 450/=

சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

- Poster
- Notice
- Lable
- Wedding Card
- Bag Print
- Award
- Frame Item
- Batch
- Vehicle Brand
- T-Shirt
- Cap
- ID Card
- Key Tag
- Book Mark
- Pen Print
- Book Printing
- Wooden Print

பனர் பிரிண்ட் (Banner), 35/=

அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்



பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்.

கிளிநொச்சியிலும் கரடிப்போக்குச் சந்தி, ஏ - 9 வீதி, கிளிநொச்சி.

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472

New Market, 1st Floor,
Chavakachcheri 021 492 7432
esprintersjaffna@gmail.com

## Dual MBA




Dual MBA
Leading to Doctor of Business Administration (DBA)

Sri Lanka UGC Recognized

**MBA**
✔ முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை தொழில்சார் கல்வித் தகைமையா.....?
✔ வர்த்தக ரீதியான தந்திரோபாயங்கள் உங்கள் வாழ்க்கையை உயர்த்திடும்.
✔ இரட்டைத் தகைமை **MBA** என்றும் உங்கள் முன்னேற்றத்துக்கு உந்து சக்தி...

**MBA in**
Finance
Marketing
HR

Duration Approximately 12 to 18 Months

Why Choose Us?
- Industrial visit to foreign country
- Flexible lecture time and mood
- Well experienced and qualified panel of lecturers

BLC CAMPUS

For more information: **0777 174 443**

23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## தமிழர்கள்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, முள்ளிவாய்க்கால் மண்ணில் நேற்று வெளியிடப்பட் பிரகடனத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அந்தப் பிரடகனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**வெகுண்டெழுந்த வரலாறு**

வரலாற்றின் வழிகளில் தமிழ் இனப்படுகொலை உச்சம் தொட்ட நாள்களின் தசாப்தத்தின் நிறைவில் எம் உறவுகள் துடிதுடிக்க கொல்லப்பட்ட மண்ணில் கனத்த இதயத்துடன் அவர் நினைவுகளை சுமந்து நிற்கின்றோம். தமிழர்களுக்கு எதிராக சிங்கள பெளத்த சிறிலங்கா பேரினவாத அரசு வரலாற்றில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து, கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை கட்டம் கட்டமாக அரங்கேற்றி வந்துள்ளது. இவ் இனப்படுகொலை முள்ளிவாய்க்காலில் அதி உச்சத்தை அடைந்து இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட எமது இரத்த உறவுகளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம். கொல்லப்பட்ட எமது உறவுகளின் கனவுகளை நினைக்கின்றோம். முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தின் ஒரு தசாப்தத்தை நினைவுகூரும் ஒட்டுமொத்த தமிழினம் அவலங்களை மட்டும் நினைவு கூரவில்லை. சிங்களபெளத்த சிறிலங்கா பேரினவாத அரசின் அடக்கு முறைக்கெதிராக தமிழினம் வெகுண்டெழுந்த வரலாற்றையும் அவற்றின் வெவ்வேறு வடிவங்களையும், கூட்டு உரிமைக்கான தியாகத்தையும் நினைவு கூருவது எம் ஒவ்வொருவரதும் வரலாற்றுக்கடமை.

**வலுப்பெற்ற கோரிக்கை**

தமிழர் உரிமைக்கான போராட்டத்தை சிறிலங்கா அரசு பயங்கரவாத முத்திரை குத்தி அதன் நியாயத்தன்மையை கேள்விக்குட்படுத்தி வந்துள்ளது. பன்னாட்டு மயப்படுத்தப்பட்ட பயங்கரவாத பரப்புரையின் ஊடாக ஆயுதப்போராட்ட வடிவம் மௌனிக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் ஆயுத மௌனிப்பின் பின் தமிழர் போராட்ட வடிவங்கள் வெவ்வேறு வழிகளில் முன்னெடுக்கப்பட்டன. பின் முள்ளிவாய்க்கால் தசாப்தத்தில் வரலாற்றில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான நீதி வேண்டிய கோரிக்கை வலுப்பெற்றது.

தமிழர்கள் ஓர் இன அடையாளத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக கொல்லப்பட்டார்கள், சித்திரவதை செய்யப்பட்டார்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார்கள், வன்புணரப்பட்டார்கள். பூர்வீக வாழ்விடங்களிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டார்கள். தமிழர்கள் வந்தேறு குடிகளாக சித்தரிக்கப்பட்டு சிறிலங்கா சிங்கள பௌத்த தேசம் அது சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானது என காலணித்துவத்தில் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் சிறிலங்கா அரசு நவ காலணித்துவத்தை கட்டமைத்தது. இது தமிழினத்தின் ஒட்டுமொத்த இருப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

**ஐ.நா. கைவிட்டது**

தமிழினத்தின் மீது நடந்தேறும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை ஐ.நாவும் பன்னாட்டுச் சமூகமும் வெறுமனே அவதானித்துக் கொண்டிருப்பது கவலைக்குரியதானது. பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான நீதிவேண்டி தமிழர்கள் ஒரு தசாப்த காலமாக ஐ.நாவின், பன்னாட்டுச் சமூகத்தின் உதவியை நாடியுள்ளார்கள். நடந்தேறிய அநீதிகளையும், உரிமை மீறல்களையும் விசாரிப்பதற்கான பன்னாட்டு நீதி விசாரணை இன்னும் ஆரம்பித்தாகத் தெரியவில்லை.

ஒரு தேசத்தின் கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களை பேணிப்பாதுகாப்பதற்கு அடிப்படையான முழுமையான அரசியல் சுதந்திரத்தை அனுபவிப்பதென்பது எல்லா தேசங்களினதும் விட்டுக்கொடுக்கவே முடியாத அடிப்படை உரிமையாகும். சமூக கட்டுமானத்தின் அனைத்து அடிப்படை அம்சங்களிலும் சிங்கள தேசத்தில் இருந்தும் தனித்துவமாக வேறுபடுத்திப்பார்க்கக் கூடிய தனி சிறப்பியல்பான அம்சங்களைக் கொண்டிருப்பதன் மூலம் இலங்கைத்தீவில் தமிழர்கள் ஒரு தேசமாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள். சிங்களவருக்கு இருப்பது போன்று அதைவிட தொன்மையானதும் செழிப்பானதுமான வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டிருப்பதினாலும், சிங்கள மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட மிகத்தொன்மையான மொழிப்பாரம்பரியத்தைக் கொண்டிருப்பதோடு காலத்திற்கேற்ற நவீன மாற்றங்களை தன்னகத்தே உள்ளீர்த்து தனித்துவமான மொழியைக் கொண்டிருப்பதாலும், இலங்கைத்தீவில் வடகிழக்கு பகுதியை தமிழ் தாயகமாகக் கொண்டு வரலாற்றுப்பூர்வ குடிகளாக வாழ்வதாலும், சிங்கள அரசானது திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு மூலம் இலங்கைத்தீவில் தமிழர்களின் இருப்பை அழிப்பதற்கான எத்தனங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

**உண்மைகளை மறைத்தல்**

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் ஒரு தசாப்தம் நிறைவடைந்தும் நினைவு கூருவதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. நினைவு கூருவது பாதிக்கப்பட்ட மக்களின் உரிமை. நினைவு கூருவதற்கான உரிமை மறுக்கப்படுவது உண்மையை மறுப்பதும் மறைப்பதுமாகும். சிறிலங்கா அரசு மறுப்புவாதத்தை நிறுவனமயப்படுத்தி உண்மைகளை வரலாற்றில் மறுத்து வந்துள்ளது. சாட்சியங்களை பொய்யர்களாக்கி அவர்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்துகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின், கையளிக்கப்பட்டவர்களின் விசாரணை கிடப்பில் போடப்பட்டுள்ளது. குற்றவாளிகள் தொடர்ந்தும் வெற்றி வீரர்களாக உலா வருகின்றனர்.

**அன்னிய மீட்பர்கள் வேண்டாம்**

முள்ளிவாய்க்கால் வரலாற்றுத் தசாப்தத்தில் ஒன்று கூடியுள்ள தமிழ் மக்களாகிய நாங்கள் நினைவுகூரலை அணி திரட்டலாக மாற்ற வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளோம். அன்னிய மீட்பர்களை விடுத்து மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்து, நினைவு கூரலை சமூக இயக்கமாக மாற்றி சபதம் செய்வோம். எங்கள் உறவுகளின் கல்லறைகளின் மீது சத்தியம் செய்வோம்.

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலைக்கு பன்னாட்டு நீதி வேண்டி இனப்படுகொலையாளிகளை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த:


தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்துக்குரியவர்கள் என்பதையும் தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் ஒரு போதும் பாரதீனப்படுத்தப்பட முடியாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழர்களின் சுயாட்சியை அனுமதிக்க வேண்டும் என்பதையும் தமிழர்கள் சார்பில் கோர:

தமிழர் இன அடையாள இருப்பின் மீது கட்டவிழ்க்கப்பட்டுள்ள இனப்படுகொலையைத் தடுக்க:

தமிழர் சமூக அமைப்புக்களை பலப்படுத்தி விடுதலைக்காக முனைப்புடன் உழைக்க:

மக்கள் பலத்தை நம்பி நினைவுகூரலை போராட்ட வடிவமாக, சமூக இயக்கமாக மாற்ற வேண்டிய சூழலுக்குள் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது. அடக்குமுறைக்குள் வாழும் சமூகத்துக்கு நினைவுகூரல் ஒரு போராட்ட வடிவமே. தமிழ்த் தேசிய நினைவுத்திறம் அடக்குமுறைக்கெதிரான ஊடகம் என்பதை நினைவிற் கொண்டு உறுதிபூணுவோம் தமிழர் உரிமையை வென்றெடுப்பதற்கான பயணிப்பில் இணைவோம்.

மே 18 இன்றைய நாளை இன அழிப்புக்கு எதிரான தமிழ் தேச எழுச்சி நாளாகவும் 2019ஆம் ஆண்டை இன அழிப்புக்கு எதிரானதும் அரசியல் நீதிக்கான பன்னாட்டு வலுச்சேர்க்கும் ஆண்டாகவும் அறிவிக்கின்றோம் என்றுள்ளது. (ஓ.5,21,246)




## தாயகத்திலும்,..

தமிழ் மக்களின் குருதியில் நனைந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் முதன்மை நினைவேந்தல் நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் கப்பலடி மண்ணில் நினைவேந்தல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. சிவப்பு மஞ்சள் கொடிகளால் எல்லைகளிடப்பட்ட இடத்தில் உறவுகளை இழந்தோர் பந்தங்கள் ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பந்தங்கள் கட்டப்பட்ட இரும்புக் கம்பிகள் நிரலாக நடப்பட்டிருந்தன. கற்பூரம், தீப்பெட்டி என்பவையும் பொதி செய்யப்பட்டு ஒவ்வொரு பந்தத்துடனும் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பந்தத்துக்குப் பக்கத்திலும் தென்னம்பிள்ளை ஒன்றும், மாங்கன்று ஒன்றும் வைக்கப்பட்டிருந்தன. பிரதான சுடர் ஏற்றும் பகுதியும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

சுடர் ஏற்றுவதற்கு மக்களுக்கு ஓரிடம், அரசியல் பிரமுகர்களுக்கு ஓரிடமும், மாற்றுத் திறனாளிகளுக்கு ஓரிடமும் என்று பிரிக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக அறிவுறுத்தல்கள் ஒலிபெருக்கி ஊடாக வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன.

காலை 10.30 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. மதத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள், மக்கள், ஊடகவியலாளர்கள் என்று பலரும் அங்கு குழுமியிருந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஒளிச் சுடர்கள் ஏற்றப்பட்டிருந்தன. தொடர்ந்து முள்ளிவாய்க்கால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. பிரதான தூபியில் மலர் தூவி அஞ்சலிப்பதுடன் நிகழ்வு நிறைவு பெற்றிருந்தது. நினைவேந்தலில் கலந்து கொண்டவர்களுக்கு கஞ்சி, குளிர் பானம் போன்றன வழங்கப்பட்டிருந்தன.

கடந்த காலங்களை விட குறைவான எண்ணிக்கையிலேயே மக்கள் பங்கேற்றிருந்தனர்.

அதே வேளை முள்ளிவாய்க்கால் கிழக்கிலும் அந்தப் பகுதி மக்களின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு அஞ்சலி இடம்பெற்றது. அங்கும் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணப் பல்கலை கழக வளாகத்தினுள் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தூபி முன்பாக நேற்றைய தினம் சனிக்கிழமை நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. அதேபோன்று, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வாலிப முன்னணியின் தலைவர் க.பிருந்தாபன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை.சோ.சேனாதிராசா முதன்மைச் சுடரை ஏற்றி வைத்தார். அதனை தொடர்ந்து ஏனையோர் சுடர்களை ஏற்றினார்கள்.

**மன்னார்**

உறவுகளின் 10 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுசரனையில் மாந்தை மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பள்ளமடு பகுதியில் பொது மக்கள் அனைவருக்கும் உப்பில்லா கஞ்சி வழங்கப்பட்டது. மன்னார் சாந்திபுரம் பாடசாலை மற்றும் ஈச்சலவாக்கை பொது மண்டபம் பகுதியில் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

**புதுக்குடியிருப்பு**

போரில் உயிரிழந்த மக்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு ஒன்று புதுக்குடியிருப்பு சுனாமி நினைவாலயத்தில் நடைபெற்றுள்ளது. வன்னிக்குறோஸ் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன. அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உயிரிழந்தவர்கள் நினைவாக சுடர் ஏற்றி கைகளில் மொழுகுவர்த்தி ஏந்தி வணக்கம் செலுத்தப்பட்டது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பசுமை பூங்கா வளாகத்தில் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் ஆரம்பமாகியது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். நினைவுநாள் பொதுச் சுடர் இறுதிப் போரில் உறவுகளை இழந்த ஒருவரால் ஏற்றப்பட்டது. இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவாக கிளிநொச்சி மாவட்ட தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் கஞ்சி வழங்கப்பட்டது. நேற்று மாலை 3 மணியளவில் கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக இவ்வாறு கஞ்சி வழங்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் பகுதியில் கஞ்சியை உணவாக உட்கொண்ட நினைவை மீட்டும் வகையில் இவ்வாறு கங்சி வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இறுதிப் போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துதலும் ஈகச்சுடரேற்றலும், கிளிநொச்சி டிப்போச் சந்தியில் அமைந்துள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கலந்துகொண்டார்.

**வவுனியா**

வவுனியா நகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் தூபிக்கு முன்பாக நகரசபையின் தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

**பிரிட்டன்**

பிரிட்டனில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு மாபெரும் பேரணி இடம்பெற்றது.

(ஓ.5,21,35,214,110,37,105)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 19

**கே.ஸி.ஸி.ஸி கழக துடுப்பாட்டத் தொடர்**

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. காலை 8.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் அணி மோதவுள்ளது. நண்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் திருநெல்வேலி துடுப்பாட்டக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது.

**கிளி. மாவட்ட துடுப்பாட்டம்**

கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் யுனைற்றெட் அணியை எதிர்த்து இந்து இளைஞர் அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட துடுப்பாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்துள்ள மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து அரியாலை சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.




# கண்டாவளை செயலகம் கூடைப்பந்தில் சம்பியன்!

யாழ்ப்பாணம், மே 19

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் கண்டாவளை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி கிண்ணம் வென்றது.

தர்மபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியை எதிர்த்து கண்டாவளை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி மோதியது. 13:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கண்டாவளை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி கிண்ணம் வென்றது. (ம-23)




# பெண்களுக்கான குண்டுபோடுதல் சர்மிளா வென்றார் தங்கப்பதக்கம்

கரணவாய், மே 19

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான குண்டு போடுதலில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜீ. சர்மிளா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான குண்டு போடுதலில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜீ.சர்மிளா 8.89 மீற்ரர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் ஜெ.சுகனியா 8.67 மீற்ரர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் தெல்லிப்பழைபிரதேசசெயலகத்தைபிரதிநிதித்துவம் செய்த கு.யதுசா 8.05 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். (ம-422)




# முப்பாய்ச்சல் போட்டியில் ஹரினாவுக்கு முதலிடம்!

கரணவாய், மே 19

பெண்களுக்கான முப்பாய்தலில் முதலாமிடத்தைப் பெற்றார் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை சேர்ந்த ச.ஹரினா.

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்ளுக்கிடையிலான தடகளப்போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முதல் இடம்பெற்று வருகின்றது. இதில் பெண்களுக்கான முப்பாய்தலில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ச.ஹரினா 10.08 மீற்றர் தூரம் பாய்ந்து முதலாமிடத்தையும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த. ஆர்.மிருஷா 9.53 மீற்றர் தூரம் பாய்ந்து இரண்டாமிடத்தையும் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.தரணுகா 9.32 மீற்றர் தூரம் பாய்ந்து மூன்றாம் இடத்தையும் பெற்றனர். (ம-108)

# 5,000 மீற்றர் ஓட்டத்தில் சுஜிகரனுக்குத் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சுஜிகரன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 5,000 மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ். சுஜிகரன் தங்கப் பதக்கத்தையும், கரவெட்டி பிரதேச செயல்கத்தை பிரதிநிதித்துவம் செய்த எம்.அனோஜன் வெள்ளிப் பதக்கத்தையும், நெடுந்தீவு



பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த ஆர்.விஜிகரன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

# நீளம் பாய்தல் போட்டி கீர்த்திகனுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான நீளம் பாய்தலில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கீர்த்திகன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான நீளம் பாய்தலில் எஸ்.கீர்த்திகன் 6.66 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், சாவகச்சேரி பிரதேச செயலகத்தை பிரதி நிதித்துவம் செய்த நா.நிதுஜன் 6.53 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், காரைநகர் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த பா. சஜிந்தராம் 6.27 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்துள்ளனர். (ம-422)




## உலகக் கிண்ண பரிசுத் தொகை; ஐ.சி.சி அறிவிப்பு

12ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இந்த மாத இறுதியில் இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ளது. 10 அணிகள் கலந்து கொள்கின்றன. 46 நாட்கள் நடைபெறும் இந்தப் போட்டியில் ஒவ்வொரு அணியும், ஏனைய அணியுடன் தலா ஒரு முறை லீக் ஆட்டத்தில் மோத வேண்டும். லீக் ஆட்டம் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.
இந்தப் போட்டிக்கான பரிசுத் தொகையை பன்னாட்டு கிரிக்கெட் சபை அறிவித்தது. உலகக் கிண்ணப் போட்டியின் மொத்த பரிசுத் தொகை ரூ.70 கோடியாகும். சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு ரூ.28 கோடியும், 2ஆவது இடம் பிடிக்கும் அணிக்கு ரூ.14 கோடியும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
2015ஆம் ஆண்டு சம்பியன் வென்ற அணிக்கு ரூ.26 கோடியும், 2ஆவது இடம் பிடித்த அணிக்கு ரூ.12 கோடியும் வழங்கப்பட்டது. தற்போது இந்த இரண்டு தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
அரைஇறுதியில் தோல்வியுறும் அணிகளுக்கு ரூ.5 கோடியே 61 லட்சம் பரிசாக கிடைக்கும். லீக் சுற்றில் அணிகளின் ஒவ்வொருவெற்றிக்கும்ரூ.28 லட்சம் கிடைக்கும். லீக் சுற்றுடன் வெளியேறும் அணிகளுக்கு ரூ.70 லட்சம் வழங்கப்படும்.

## உலகக் கிண்ண பாடல் வெளியீடு

இங்கிலாந்தில் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதில் 10 அணிகள் பங்குபற்றுகின்றன.
பிரபலமான தொடர்களின் போது அதற்கு பெருமை சேர்க்கும் வகையில் அதிகாரபூர்வமான பாடல்கள் வெளியிடப்படுவது வழமை. அதன்படி இந்த உலகக் கிண்ணத்துக்கான பாடலை லாரின் ருடிமெண்டல் பாடியுள்ளனர். இந்தப் பாடல் சமூக வலைத் தளத்தில் வெளியாகியுள்ளது. இதை பன்னாட்டு கிரிக்கெட் சபை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.



கட்டாரில் 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இதனை முன்னிட்டு புதிய வடிவிலான பல்வேறு விளையாட்டரங்குகளை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அதில் அல் வக்ராவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டரங்கு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. மேலும், 6 புதிய விளையாட்டு அரங்குகளை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அவற்றில் அல் பெய்த் அரங்கு இந்த வருட இறுதியில் திறந்து வைக்கப்படும். மற்றைய ஐந்து விளையாட்டரங்குகள் அடுத்த வருடம் பூர்த்தியாகும் என்று கூறப்படுகின்றது.

### ரோய் வாணவேடிக்கை

# இங்கிலாந்து அபார வெற்றி





இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் 5 ஒருநாள் போட்டித் தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 4ஆவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி மீண்டும் தனது வெற்றியைப் பதித்து 3:0 என்ற கணக்கில் காணப்படுகின்றது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் பாகிஸ்தான் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.
பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பாபர் அசாம் 115 ஓட்டங்களையும், முகமது ஹபீஸ் 59 ஓட்டங்களையும், பகர் சமான் 57 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்,
பந்து வீச்சில் சாம் குர்ரன் 4 இலக்குகளையும், மார்க் வூட் 2 இலக்குகளையும், ஆர்ச்சர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அணிக்கு சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். அணி 49.3 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கைத் தொட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரோய் அதிரடியாக விளையாடி 114 ஓட்டங்களைப் பெற்றார். இது அவரது 8ஆவது சதம் ஆகும். ஸ்ரோக்ஸ் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்து வீச்சில் முகமது ஹஸ்னைன், இமாத் வாசிம் தலா 2 இலக்குகளையும், ஹசன் அலி, மாலிக், யுனைட்கான் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
இமாலய ஓட்டங்களை விரட்டியடிக்கும் இங்கிலாந்து அணி, உலகக் கிண்ணத்தில் ஏனைய அணிகளுக்கு கடும் சவாலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

### 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடரில்

# இருமுறை நாணயச்சுழற்சி இடம்பெற்ற இறுதிப் போட்டி

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் ஏற்பட்ட சிக்கலால், இந்திய அணித் தலைவர் டோனிக்கும், இலங்கை அணித் தலைவர் சங்கக்காராவுக்கும் இடையே உரசல் ஏற்பட்டது.
2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின் இறுதிப்போட்டி மும்பை வான்ஹடே மைதானத்தில் இடம்பெற்றது. இதில் இந்தியா - இலங்கை அணிகள் மோதின. இந்தப் போட்டியில் இலங்கை அணி 6 இலக்குகளை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றது. இலக்கை துரத்திய இந்திய அணி 48.2 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 277 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதில் டோனி ஆட்டமிழக்காமல் 91 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்குக் காரணமாக இருந்தார்.
இந்தப் போட்டியைக் காண 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் அரங்கில் இருந்ததால், சத்தம் காதைப் பிளந்தது. நாணயச் சுழற்சிக்காக டோனி, சங்கக்காரா இருவரும் வந்தனர். வர்ணனையாளர் ரவி சாஸ்திரி, போட்டி நடுவர் ஜெப் குரோவ் ஆகியோரும் இருந்தனர்.
டோனி நாணயத்தை சுண்டிவிட்டபோது சங்கக்காரா தலை கவிழ்ந்து தரையைப் பார்த்துக்கொண்டிருந்தார். டோனி நாணயத்தைச் சுற்றி விட்டதும் சங்கக்கரா தலை (ஹெட்) என்று கேட்டார். ஆனால், அவர் கேட்டது டோனிக்கும், வர்ணனையாளர் ரவி சாஸ்திரி, நடுவர் குரோவ் ஆகிய இருவருக்கும் கேட்கவில்லை. ஏனென்றால், அரங்கில் இருந்த ரசிகர்கள் சத்தம் அதிகமாக இருந்தது.
ஆனால், நாணயத்தின் தலை விழுந்ததும் டோனி துடுப்பாட்ட செய்கிறோம் என்று கேட்க ரவி சாஸ்திரி இந்தியா துடுப்பாட்ட என்று அறிவித்தார். ஆனால், சங்கக்காரா குறுக்கிட்டு, நான்தான் நாணயச் சுழற்சியில் வென்றேன் எப்படி டோனிக்கு துடுப்பாட்ட வாய்ப்பு கொடுக்கலாம் -என்றார்.
உடனே நீங்கள் கேட்டீர்களா என்று ரவிசாஸ்திரி கேட்க, ஆம் நான் தலை (ஹெட்) கேட்டேன் என்று சங்கக்காரா பதில் அளித்தார். இதனால், சிறிதுநேரம் குழப்பம் ஏற்பட்டது. டோனி துடுப்பாட்டம் செய்வதில் இருந்து பின்வாங்க முடியாது. நான் தலை (ஹெட்) கேட்டேன் விழுந்துவிட்டது, நாங்கள்தான் துடுப்பெடுத்தாடுவோம் என்று திட்டவட்டமாகக் கூறினார்.
இதனால், அந்த இடத்தில் சிறிதுநேரம் குழப்பம் ஏற்பட்டது. அதன்பின் இருவரையும் சமாதானம் செய்த போட்டி நடுவர் ஜெப் குரோவ், அரங்கில் இருந்த ரசிகர்கள் போட்ட சத்தத்தால் தனக்கு ஏதும் கேட்கவில்லை ஆதலால் மீண்டும் நாணயச் சுழற்சியில் ஈடுபடுமாறு இரு அணித் தலைவர்களிடமும் வேண்டுகோள் முன் வைக்கப்பட்டது.
பின்னர் டோனியும், சங்கக்காராவும் அமைதியடைந்து சம்மதித்தனர். மீண்டும் டோனி நாணயத்தை சுண்டி விட சங்கக்காராவுக்கு சாதகமாக தலை (ஹெட்) விழுந்தவுடன் இலங்கை அணி துடுப்பாட்டம் செய்தது.
இறுதிப்போட்டியில் இருமுறை நாணயச் சுழற்சி இடம்பெற்ற விவகாரம் இணையத்தளத்தில் எதிரொலித்து பெரும் விவாதப் பொருளாக மாறியது.
நாணயத்தை சுண்டும் போது சங்கக்காரா ஏன் நாணயத்தைப் பார்க்காமல் தலைகவிழ்ந்து இருந்தார் என்று ஒருபுறம் கேள்விகளும், டோனியிடம் அவசரப்பட்டு ஏன் ரவிசாஸ்திரி என்ன முடிவு செய்யப்போகிறீர்கள் என்று கேட்டார், சங்கக்காராவிடம் ஏன் கேட்கவில்லை என்று கேள்விகள் எழுந்தன.
இங்கிலாந்து முன்னாள் கேப்டன் மைக்கேல் வான், இந்திய முன்னாள் வீரர் சஞ்ச்ய் மஞ்ச்ரேக்கர் ஆகியோர் தங்கள் அதிருப்தியை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# குணமடைந்தார் கேதர் யாதவ்



ஐ. பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான கேதர் யாதவ், பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்தின் போது விழுந்து இடது தோள்பட்டையில் காயம் அடைந்தார். இதனால் அவர் இறுதிப் போட்டியில் விளையாடவில்லை.
இதையடுத்து உலகக் கிண்ண இந்திய அணியில் கேதர் யாதவ் இடம் பெற்றிருந்தார். காயம் ஏற்பட்டதையடுத்து, அவரது உடல்நலம் குணமடைவதை பொறுத்தே யாதவ்வுக்குப் பதிலாக, யாரை தெரிவு செய்ய வேண்டும் என முடிவெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.
அவரது உடல்நிலை தேறி வந்த நிலையில், அவருக்கு உடல் தகுதி சோதனை செய்யப்பட்டது. இந்தச் சோதனையில் யாதவ் குணமடைந்தார் என தெரிய வந்துள்ளது.
இந்த நிலையில் 22ஆம் திகதி இங்கிலாந்து செல்லும் இந்திய அணியினருடன் இவரும் செல்லவுள்ளார் என்று குறிப்பிடப்படுகின்றது.

# காலிறுதியில் ஒசாகா விலகல் பிளிஸ்கோவா அரையிறுதிக்கு

இத்தாலி பகிரங்க ரென்னிஸ் போட்டி ரோம் நகரில் இடம்பெற்று வருகின்றது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியாட்டத்தில் உலகின் முதல் நிலை வீராங்கனையான யப்பான் நாட்டு வீராங்கனை நவோமி ஒசாகா, 4ம் நிலை வீராங்கனையான நெதர்லாந்தின் கிகி பெர்டென்சை சந்திக்க இருந்தார். ஆனால் வலது கையில் ஏற்பட்ட காயம் காரணமாக நவோமி ஒசாகா இறுதி நேரத்தில் போட்டியில் இருந்து விலகினார். இதனால் கிகி பெர்டென்ஸ் போட்டியின்றி அரையிறுதிக்குள் நுழைந்தார்.



மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் செக்குடியரசு வீராங்கனை கரோலினா பிளிஸ்கோவா, அஸரென்காவை எதிர்கொண்டார். இதில் பிளிஸ்கோவா 6:7, 6:2, 6:2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்ததுடன் அவர் தனது 500 ஆவது வெற்றியையும் ருசித்தார்.



## World Recognized, Affordable British Degrees at IIS in Jaffna

Leeds Trinity University

**BA (Hons)**
- Business & Management
- Business & Marketing

**MBA** (Masters of Business Administration)

Applications are open 16/06/2019

மேற்படி கற்கைநெறி தொடர்பான விபரங்களை வழங்குவதற்கென பல்கலைக்கழக பிரதிநிதி ஒருவர் 26/5/2019 காலை 10.00 மணிக்கு வருகை தரவுள்ளார். ஆர்வமுள்ள மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் IIS வளாகத்திற்கு நேரடியாக வருகை தந்து விபரங்களை கேட்டறிந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்

IIS CITY CAMPUS
Call us on:
021 222 8060
071 777 5222
071 777 5333

PIBT
200, Sivan Pannai Road, Jaffna
info@iis.edu.lk | www.iis.edu.lk

## வேலைவாய்ப்பு

திருநெல்வேலியிலுள்ள சுப்பர் மாக்கெட் (Super Market) ஒன்றுக்கு கணக்கியலிலும், முகாமைத்துவத்திலும், கணினி அறிவிலும் முன் அனுபவமுள்ள பெண் வேலையாள் தேவை.

(CS 25453)(4.17)

077 790 8263

## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள 2 பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு சமையல், இதர வேலைகள் தங்கிநின்று செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

077 419 7258

## துரித தபால்கள் பொதிகள் சேவை

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11 Kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | -600/= |
| Germany | -700/= |
| France | -700/= |
| Canada | -1000/= |
| Australia | -975/= |

திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம்,
திருநெல்வேலி, நெல்லியடி,
கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்.
Hotline : 0777 55 45 28




## மாடிவீடு விற்பனைக்கு

யாழ்.நகரின் மத்தியில் ரம்மியமான சூழலில் $3\frac{1}{2}$ பரப்பு விஸ்தீரணமும் 8500 சதுர அடியிலும் அமைந்த மாடி வீடு விற்பனைக்குண்டு. தனியார் நிறுவனங்கள், தனியார் வைத்திய சாலைகள் மற்றும் விருந்தினர் விடுதிகள் அமைக்கக் கூடிய வகையில் 15 இற்கு மேற்பட்ட அறைகள், முகப்பு பூந்தோட்டம், 100 பேர் வரை உள்ளடக்கக் கூடிய மண்டபம் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடியதாக இவ்வீடு அமைந்துள்ளது.

071 777 5111

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, இருபாலையில் $4\frac{3}{4}$ பரப்பு வணிக நோக்கத்திற்கும் ஏற்றது.

(CS 23408)(15/17)

தொடர்பு - 075 043 1960

## வீடு வாடகைக்கு உண்டு

பொஸ்கோ சென் ஜோன்ஸ் பாடசாலைக்கு மிக அருகில் புதுப்பிக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.

(CS 25447)(14.17)

076 974 4309

## வேலையாள்கள் தேவை

நல்லூரில் இயங்கும் இனிப்பு தொழிற்சாலைக்குப் பெண்கள் தேவை.

077 969 3210

## வாடகைக்குண்டு

கோண்டாவில் புகையிரத நிலையத்துக்கு வடக்கிலுள்ள நவரட்ணராஜா வீதியில் ஐந்து படுக்கையறைகள் வாகனத் தரிப்பிட வசதியுள்ள வீடு வாடகைக்குண்டு. தனியார், தொண்டு நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

0047 942 52402, 077 453 5344

## மொழி வகுப்புக்கள்

Netherland, German, Swiss, Ostria, Belgium மொழி வகுப்புக்கள்.
Embassy யின் A1 Examக்கு ஏற்றவாறு தமிழ்மொழிபெயர்ப்பு புதிய வகுப்புக்கள் 22.05.2019 அன்று ஆரம்பம்

077 160 4823
Mrs. P Kajenthini யாழ்ப்பாணத்தில்

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY** கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANCAISE** மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## Study in LATVIA

ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு

Admission open for 2019 Sep intake



- நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவரா?
- IELTS இன்றி உயர் கல்வியினை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்.
- கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
- கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
- 100% விசா உத்தரவாதம்.
- குறைந்த பாட நெறி கட்டணம்
- Schengen visa

100% Scholarships Available in ITALY & CHINA

ICS A Complete Visa Solutions Study Abroad
Admissions :- 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107 B 1/1 , Galle Road , Colombo 6

## பதவி வெற்றிடம்
### நிர்வாக உத்தியோகத்தர் (ஆண்/பெண்)

எமது கணக்காய்வு, வரி ஆலோசனை நிறுவனத்துக்கு நிர்வாக உத்தியோகத்தர் தேவை.

- தகைமை:- கணக்காய்வு, வருமான வரி முதலியவற்றில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- வயது எல்லை - 65 வயதுக்குட்பட்டவர்கள்

தகைமையுடையவர்கள் 21 ஆம் திகதிக்கு (21.05.2019) முன்னர் சுயவிவரக் கோவையை ariamjaffna@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Accounting System and Management Consultancy (ASMC)**
245, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.